Registered as a News Paper in Srí Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
மார்ச்.19-25,2000
ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY
முரசு 349

## பேச்சுவார்த்தையில் பின் கதவால் இந்தியாவா?



மினிக்குரள்



## மலையாளத்தில் ஐஸ்வர்யா

# முரசம்

## அங்கும் இங்கும்!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

பெண்கள் தினம்
இந் நாட்டில்
மிகுந்த அக்கறையோடு
அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நாட்டின்
ஜனாதிபதி கூட
ஒரு பெண்ணாகவே
இருக்கிறார்.

அவரது
செய்தியிலும்
பெண்கள் பற்றிய
அதிகூடிய கரிசனை
வெளிப்படுத்தப்
பட்டிருந்தது.

பெண்களின்
உரிமையை வலியுறுத்தும்
ஊர்வலங்களை
அரசாங்கமே
முன்னின்று நடத்தியது.

ஆனால்
இதே நாட்டின்
மற்றொரு பகுதியான
யாழ்ப்பாணத்தில்தான்
சாரதாம்பாள் என்ற
அபலைப்பெண்
பலவந்தமாகக்
கடத்திச் செல்லப்பட்டு
பாலியல் பலாத்காரம்
செய்யப்பட்டுக்
கொலை செய்யப்பட்டுள்ளாள்.

பெண்கள் பற்றிய
ஏதேதோ உரிமைகளையெல்லாம்
உன்னிப்பாய் ஆராய்ந்து
குரலெழுப்புகின்ற
இப்பெண்கள் அமைப்புகள்
பெண் என்பதற்காகவே
பாலியல் பலாத்காரத்துக்கு
உள்ளாக்கப்பட்டு
படுகொலை செய்யப்பட்ட
இப்பரிதாபப் பெண்ணுக்காகக்
குரலெழுப்பவுமில்லை.

இவ்வாறான
நிர்க்கதி நிலைக்கு
இன்னும் கூட
எந்தப் பெண்ணும்
உள்ளாக்கப் படக் கூடிய
அபாயம் நிலவுகின்ற
யாழ்ப்பாணச் சூழ்நிலைபற்றி
எண்ணிப் பார்க்கவுமில்லை.
சாதாரணமாகப்
பல்வேறு இடங்களில்
காடையர்களால் நடத்தப்படும்
இத்தகைய பலாத்காரங்களுக்கும்
படுகொலைகளுக்கும்
இங்கு நிகழ்பவற்றுக்கும்
அடிப்படையான
வித்தியாசமொன்று உண்டு.

அண்மைக் காலத்திற்கூட
கொழும்பு நகரில்
காக்கைத் தீவில்
ரீட்டா மனோகரன் என்ற
பொலிஸ் அதிகாரியொருவரின்
மருமகள் கூட
பாலியல் பலாத்காரம்
செய்யப்பட்டுக்
கொலைசெய்யப்பட்ட
சம்பவமொன்று
பரபரப்பாகப்
பேசப்பட்டது.

சாரதாம்பாள் கொலை
மற்றும் கிருஷாந்தி கொலை
போன்றவற்றிற்கும்
ரீட்டா மீதான
காடையரின் கொலைக்கும்
இடையிலான
அடிப்படை வேறுபாடு
என்னவென்றால்,
அவை
இராணுவம் நிலைகொண்டுள்ள
யுத்தப் பிரதேசத்தில்
நிகழ்ந்திருக்கின்ற
பாலியற் கொலைகள்.

யுத்தத்தின் போது நிகழும்
இத்தகைய பலாத்காரங்கள்
வெறும் பாலியல் இச்சையால்
மாத்திரம் நிகழ்வதல்ல.

ஒருவகை
ஆக்கிரமிப்பு உணர்வின்
அடிப்படையில் நிகழ்பவை.

"நீங்கள் எமக்கு
அடிமைகள்!" என்ற
ஆக்கிரமிப்பு முத்திரையைப்
பதிக்கின்ற
அடையாளம் இது.

உலக நாடுகள்
பலவற்றிலும்
ஆக்கிரமிப்பு இராணுவங்கள்
இப்படித்தான் நடந்துள்ளன.

சில வருடங்களின் முன்
பொஸ்னியப் பெண்கள்
ஐம்பதாயிரம்பேர்
ஆக்கிரமிப்பாளர்களால்
பலாத்காரம் செய்யப்பட்டமை
இதற்கோர் உதாரணம்.

அந்தளவு தொகையில்
யாழ்ப்பாணத்தில்
நிகழாவிடினும்.
அந்த மனோபாவத்தில்
நிகழ்வது என்பதுதான்
இங்கு முக்கியம்.

இத்தகைய தாற்பரியத்தைத்
தெளிவாக உணர்ந்துகொண்டு
அத்தகைய மனோபாவத்தை
முற்றாக அகற்ற
வழி செய்வதுதான்
இங்கு அவசியம்.

இதற்கு முன்வருவார்களா
பெண்ணுரிமை வாதிகள்?

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்

## அறத்தின் உயர்வும் அதன்பலனும்

* எப்பிறவியிலும் ஒருவன் அறப்பணிகளைச் செய்து வரவேண்டும்.
* மறுபிறவிக்காக இப்பிறவியிலேயே தேட வேண்டும்.
* அறிவற்றவன் தீவினைப் பயன்களைப் புரிந்துக் கொள்ளாமல் வருந்துவான்.
* நற்காரியங்களை செய்து அது நிலைத்து நிற்க, ஏனையவை அழிந்துப் போகும்.
* உடல் எடுத்ததன் பலனை அனுபவித்தவர்கள் இறப்பைக் கண்டு அஞ்சமாட்டார்கள்.
* இப்பிறவியில் இறப்பு நம் பின்னாலேயே நின்று கொண்டிருப்பதால் இயன்றவரை இன்றே தான தருமங்களைச் செய்யுங்கள்.
* பூவுலக வாழ்க்கையிலிருந்து தேவருலக வாழ்க்கைக்கு ஏற்ற வழி வகைகளைச் தேடிக்கொள்ள வேண்டும்.
* தகுந்தவர்களின் கையிலே தர்மம் சேர்ந்தால் அதன் பயன் மிகமிக அதிகமாக இருக்கும்.
* தினமும் பொழுது கழிந்து விடுதலைப் புரியாதவர்கள் மறுமையை மறந்திருப்பர்.
* மானத்தை இழந்தாவது உயிர் வாழ்வர் சாதாரண மனிதர். அவர்கள் மறுமை இன்பம் பற்றிச் சிந்திப்பதில்லை.

தொகுப்பு: ஆர்.விஜயலதா-டயகம.



## விபசாரத்தை வெறுக்கும் அல்குர் ஆன் போதனை

இன்று கற்பென்ற பொக்கிஷத்திற்கு நாம் அளிக்கும் கௌரவம்தான் என்ன? எமது பெண்களின் நிலையை பார்த்தால் அந்தோ பரிதாபம்.

கற்பு ஒரு முறை இழக்கப்பட்டால் அதனை மீண்டும் பெற முடியாது என்பதை ஏனோ இவர்கள் உணர மறந்து விடுகின்றனர்.

கற்பென்பது ஆண், பெண் இரு தரப்பினரும் பேணிப் பாதுகாக்க வேண்டிய ஒன்றாகும். ஆனால் அவை இன்று விபசாரத்திற்கு விலை போகிறது.

இது பற்றி இறை மறை கூறுவதென்ன?

"தன்னம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் விபசாரத்திற்கு நெருங்க வேண்டாம். ஏனென்றால் நிச்சயமாக அது மானக் கேடாகவும், தீய வழியாகவும் இருக்கின்றது!"

**அல்குர் ஆன்: 17:32**

ஆகவே நாம் விபசாரத்தை வெறுக்கும் அல்குர் ஆன் போதனையை அகத்தில் பதித்து புலனடக்கத்தோடு கற்பு நெறிதவறாது வாழ முற்படுவோமாக.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.346

### பரிசுக்குரிய கவிதை

### புயலாக மாறிவிடு!

பூவே, பூமீது
நீர்சொரியும் நேரமல்ல இது!
பூவாயிருந்தால் பறிக்கப்படுவாய்!
புயலாக மாறி அடித்துவிடு!

**சிவஸ்கந்தா சசிதரன்-கொழும்பு-13.**

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### ஜாக்கிரதை!

பெண்ணே!
நன்றாகப் பார்த்து
தண்ணீர் ஊற்று!
பூவோடு களையாக
இனவாதமும்
வளர்ந்துவிடும்!

தே.சங்கீதா-புத்தளம்.

### காத்திருப்பாள்

ரோஜா தோட்டத்து
மல்லிகை வளர்த்து
இவள் ராஜா வருகையில்
புன்னகை உதிர்ப்பாள்;
யுத்தபூமியின் பொழுதுகள்
நிதம் காத்திருந்து!

தெ.லோஜனா-கொழும்பு-15.



### தவிப்பு!

வேருக்கு நீரூற்றினாய்
நீ(ர்)
இன்றி வாடினேன்
நான்!

ஐ.கோடீஸ்வரன்-வத்தளை.

### மலர் வளையம் செய்யவோ?

மிலேனியம் ஆண்டிலே
புதிய பூக்கள்
உற்பத்தி...
மடிகின்ற நம்மவர்க்கு
மலர்வளையம்
செய்யவோ?

த.பத்மபிரியன்-கோமாரி-01.

### புரியவில்லை

வார்க்கின்ற நீர் பூவுக்கா?
பூக்கின்ற செடிக்கா?
பார்ப்பது நீ உன் அழகையா? அவன்
உடல் அழகையா?

பற்குணன் அம்பிகாபதி-புளியங்குளம்.

### பூரிப்பு

பூவையிவள்
பூரிப்புடன்
பூவாளியால்
ஊற்றும் நீரால்
பூத்துக் குலுங்குகிறதோ
பூக்கள் இங்கே?

சரஸ்வதி மயில்வாகனம்-ஆரையம்பதி-02.

### மறவாதே

மலருக்கு நீர் ஊற்றுவதில்,
மகளே நீ மகிழ்கிறாய்-ஆனால்
உனக்கும் தீ மூட்டும்
மனிதருண்டு மறவாதே!

மெற்றில்டா மரியதாஸ்-பண்டாரவளை.

### இ(செ)யற்கை அழகு!

அழகு வாசனையோடு
மலரும் மலர்களெல்லாம்
இயற்கை...!
அழகு கொண்டு
மலர்ந்த பெண்ணே
நீயோ, செயற்கை...!

வி.ஜீவராசா-அக்கரைப்பற்று-07.

### நடப்பு

நிம்மதியாய்
நீரூற்றும் நீ
காமுக வல்லூறுகளின்
கண்களில் பட்டிடாதே! பட்டால்
பாலியல் வல்லுறவுப்
பட்டியலில்
பவ்வியமாய்
இணைந்திடுவாய்!

எம்.ஜெயச்சந்திரன்-கல்குடா.

### அனுபவி இன்று

முடிந்த அளவு அனுபவி இன்று!
முடிவின்றி திணறும் போரில்
நாளை என்ன நடக்குமோ?

ரி.ரேக்கா-கொழும்பு-06.

### நிலைத்திருக் (கட்டும்)குமா?

பூஞ்சோலைக்கு நீரூற்றி
புன்னகை சிந்தும்
புத்தம் புது ரோஜாவே!
உன்
புன்னகைப் பூக்கள்
உதிராமல்,
நிலைத்திருக்குமா?

கவிதா சாந்தலிங்கம்-ஏறாவூர்-05.

### அகதிகள்

அம்மையே!
உங்கள் கைகளால்
வழிவது தண்ணீரல்ல...
எங்களின் கண்ணீர்!

த.நகுலேஸ்வரன்-மட்டக்களப்பு.

### இறுதி மதி

அணியாய் இதனிடம்
தஞ்சமடைந்த
பூக்களுக்கும் புன்னகைக்கும்
ஆயுள் சில
நிமிஷம்தான்!

வி.க.இறுகாந்-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.349



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 25.03.2000

கவிதைப் போட்டி இல.349
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### எதைப்படைப்பாய்?

புத்தாண்டை வரவேற்கப்
பூவைப் படைத்தாய்
போராண்டை முடித்திட
எதைப் படைப்பாய்??

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

### எப்போது...?

மலர்களையெல்லாம் நீரூற்றி
மலர வைக்கும் மங்கையே...!
இன் நாட்டில் சமாதானத்தை
எப்போது மலர வைக்கப்
போகின்றாய்?

பரசுராமன் சங்கீதா-கொழும்பு-13.

முத்தான முத்தமிழ் முரசே!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் சூப்பர்.

அதிலும் தினமுரசை மெருகேற்றிக் கொண்டு இருக்கும் 'இடிஅமீன்' 'பாப்பா முரசு' போன்றன என்னை மிகக் கவர்ந்தவை. முரசின் எல்லா ஆக்கமும் சிறந்தவை.

மேலும் முரசின் பணி தொடர வாசகனின் வாழ்த்துக்கள்.

ச.நஜீம், திருகோணமலை.

'வெளிநாடொன்றின் மத்தியஸ்தம் வேண்டாம்' என இன வாதிகள் போர்கொடி உயர்த்தியிருப்பது எவ்வளவுக்கு எவ்வளவு தமிழ் மக்களை நசுக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அடக்கியாளவே முற்படுகிறது. பூமி புத்திர கட்சியின் தலைவர் எந்த ஒரு சிறுபான்மையினர் மீதும் மனித உரிமை மீறப்படாத நாடு என கூறியிருப்பதாவது முழு பூசணிக்காயையும் சோற்றுக்குள் மறைக்கும் கதை அவரது கூற்றுக்கு உதாரணமாகும். சுதந்திரம் என்றால் என்ன என்று தெரியாத இவர்களுக்கு சுதந்திரத்தை உயிர் தியாகத்தோடும் போராட்டத்தோடும் பெற்றிருந்தால் மனித உரிமை மீறல் என்றால் என்ன என்று தெரிந்திருக்கும். (நமக்கு கிடைத்தது இலவச சுதந்திரமல்லோ)

ரெங்கநாதன் அசோக்குமார், டிக்கோயா.

# வாசக(ர்)சாலை



என் உள்ளம் நிறைந்த
என் இனிய தின முரசே!
வாரத்தில் ஒரு முறை தான் நீ பூக்கின்றாய்.

அதுவே எனக்குப் பெரும் இடைவெளியை தருகின்றது. நய வஞ்சகர்களின் கொடும் கரம் உன்மீதும் படிந்ததினால், எங்கே இனியும் நீ பூக்கமுடியாமல் அடிவேரே அழிந்துபோய் விடுமோ என, ஏங்கிக் கொண்டிருந்த உன் வாசக நெஞ்சங்களில் நானும் ஒருவனே.

முரசே! துப்பாக்கி முனையினாலே தமிழன் வாழ்வை சிதைத்து, கொடியவர்களின் கொடும் செயலை பேனாவின் முனையினாலே உலகறியச் செய்த மாபெரும் அற்புமான எழுத்தாளன், அற்புதனின் பேரிழப்பால் துடித்துப் போன என் உள்ளம்... மீண்டும் எழுகின்றது, கோழைத்தனமான கொடிய துரோகிகளின் கொலைப் பொறியில் இருந்து நீ மீண்டு(ம்) எழுந்த கதை அறிய.

பகைவனைச் சுட்டெரிக்கும் நெருப்பு வரிகள்... முன்னமும் உன்னில் தளர்வில்லை. பார்க்கின்றேன் ஆர்வத்தோடு, மெய்சிலிர்த்துப் போகின்றது என் உடல். அதே சூடு. அதேசுவை. அதே சுவாரசியம். முரசே உன்னைச் சூழ்ந்திருப்பது முன்னே நின்று மோதும் எதிரிகள் அல்லவே. உன்னைச் சூழ்ந்திருப்பது கோழைத்தனமாக முதுகின் பின்னால் நின்று கழுத்தை அறுக்கும் துரோகிகளே. முரசே-உன்னை ஒருபோதும் மரணத்தால் நெருங்கவே முடியாது. மரணம் எம்மை என்ன செய்யும்? என்பதற்கு நீயே ஓர் எடுத்துக் காட்டு. முரசே எழுந்துவா! உன்னைக் கொல்ல நினைத்த வஞ்சகனை வஞ்சகரை-பொல்லாத உன் தீச் சொல்லால் எரித்துவிட்டு, எழுந்துவா தீ முரசாக, அற்புதனை எம்மில் இருந்து பிரித்தவனை உன் நெருப்பு வார்த்தைகளால் எரித்துவிட்டு எழுந்துவா. இனியும் கோழைகளுக்கு வாழ்வில்லை என இடித்துச் சொல் முரசே. தீ முரசாக. சூடு-சுவை. சுவாரசியம் இதில் எள்ளளவும் குன்றாது என பறை சாற்றி நடைபோடும் போர் முரசாக.

தினமுரசின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது உளமார்ந்த பாராட்டுக்கள். இலண்டனில் கூட அனைத்து தமிழ் வீடுகளிலும் தினமுரசினை பார்க்க முடிகின்றது. பெரும் சந்தோசம் அடைகின்றேன். இருந்தாலும் புலிகளின் வெற்றியின் இரகசியங்கள் என்ற சத்தியனின் புதிய படைப்பில் பெரும் இடைவெளி தெரிகின்றது. அவைகளிலும் பெரும் நெருக்கம் காண வேண்டும் என தங்களிடம் வேண்டுகின்றேன்.

ஆ.முர்.வினோநேசன், இலண்டன்.

*உனது வீரத்துக்கு...!*
*அன்புள்ள முரசே!*
*அனைவர் உள்ளத்திலும்*
*ஆனந்தம் பரப்பினாய்...!*
*ஆராதநெஞ்சங்களாக்கி*
*அனைவரையும்*
*அசையவைத்தாய்....!*
*அறிவு மட்டுமன்றி*
*அனைத்தையும் புகட்டினாய்...!*
*அதிலும்...*
*அன்பின் முரசின்*
*ஆசான்*
*அற்புதராஜா எழுதும்*
*'அதிரடி...*
*அய்யாத்துரை'*
*அற்புதமானது,*
*அப்படியிருந்தபோது*
*அறிவுச் சுடராய் இருந்த*
*அற்புதராஜாவை-காலர்கள்*
*களைத்துவிட்டதனால்*
*அழிந்துவிடுமோ? முரசு என்று*
*அழுகை கொண்டேன்,....*
*ஆனாலும்...*
*அழியாதென்று*
*ஆதாரம் காட்டி*
*ஆனந்தப் படுத்திய உனக்கு*
*அன்பு வணக்கம்...!*
*அதுமட்டுமன்றி...*
*உனது பணிதொடர*
*எனது வாழ்த்துக்கள்..!*

வி.ஜீவராசா, அக்கரைப்பற்று-07.

முரசே!

நீ வாரந்தோறும் சுமந்து வரும் தகவல்கள் யாவும் அற்புதனிலும் அற்புதம். சிறப்பாக மயன் தொகுத்தளிக்கும் 'சினி செய்திகள்', 'இடி அமீனின் இடி', 'தகவல் பெட்டி' இன்றைய நாட்டின் நடப்புக்கள் அத்துடன் வாசகர்களை ஊக்கப்படுத்தும் போட்டிகள் ஆகியன என்னை வெகுவாகவே ஈர்த்துவிட்டன. வாழ்க உன் பணி! உன் சேவை தொடர வாழ்த்துக்கள்.

எம்.ஜே.ஃபஸீல், அனுராதபுரம்.

அன்புடன் ஆசிரியருக்கு,

தினமுரசின் வாசகன் மட்டுமல்ல, முரசின் பித்தன் என்றுகூட சொல்லலாம். அந்தளவுக்கு முரசை நான் நேசிக்கின்றேன். ஏனென்றால் என் கலை வளர்ச்சிக்கு முரசு பெரிதும் உதவுகின்றது. முரசு வந்த நாளிலிருந்து அதை வாசிக்கின்றேன். என்னுடைய எல்லா ஆக்கங்களும் இடம் பெறுகின்றன. வாழ்க்கையின் பயனை அடைந்ததுபோல் இன்புறுகிறேன். ஆனால் என் சிறுகதைகள் மட்டும் ஏன் இன்னும் வரவில்லை. ஏராளமான பிரதிகள் அனுப்பினேன். அதுவும் எல்லாம் உண்மை சம்பவங்களை அடிப்படையாக வைத்து எழுதியது. எனவே இந்த முறையாவது என் கதைகளை பிரசுரித்து என் வாழ்க்கையின் உண்மையான சந்தோஷத்தை அனுபவிக்க உதவுமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

ஆ.ஜெகதீஸ்வரன், புசல்லாவ.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**தொலை நகல் (Fax):- 074-513266**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# போர் நிறுத்தப்படாமல் பேச்சுவார்த்தை பலனளிக்கப்போவதில்லை!

## தொடரும் அநர்த்தங்களைத் தவிர்க்க அது ஒன்றே உகந்த வழி!

**போர் நிறுத்தப் படாமல் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது இன்றுள்ள நிலையில் சாத்தியமாகாது என்று அவதானிகள் கருதுகின்றனர். யுத்தம் ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மறுபுறம் பேச்சுவார்த்தை இடம் பெறுமானால் அண்மையில் நடைபெற்று வரும் பேரழிவு தொடர்வதை எவராலும் தடுக்க முடியாது. பிறநாட்டு மத்தியஸ்தத்துடன் உடன் போர் நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டால் இருதரப்பினரும் எத்தகைய தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபடமுடியாத நிலை ஏற்படும்.**

கொழும்பு நகரில் பாராளுமன்றத்திற்குச் செல்லும் பிரதான பாதையில் கடந்த 10ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மாலை வேளையில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் தாக்குதல், இலங்கையை மட்டுமல்ல உலகனைத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பொரளை, இராஜகிரிய ஆகிய பகுதிகளை ஊடறுத்துச்செல்லும் காசல் வீதி மற்றும் என்.எம் பெரேரா மாவத்தை ஆகிய இரு வீதிகளும் சந்திக்கும் இடத்தில்-ஆயுர்வேத மருத்துவமனைக்கு எதிர்ப் புறமாகவுள்ள சந்தியிலேயே இப்பயங்கரமான சம்பவம் நடைபெற்றுள்ளது.

பத்துக்கும் மேற்பட்ட புலிப் போராளிகள் கனரக ஆயுதங்களுடனும் சிறிய ரக ஆயுதங்களுடனும் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு முன்னதாக பல வகையான ஆயத்தங்களும் புலிகளால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று இந்தத் தாக்குதல் தொடர்பாக ஆய்வு செய்யும் அதிகாரிகள் நம்புகின்றனர்.

வழக்கமாகவே இந்தப் பிரதான வீதி மிகக் கடுமையான பாதுகாப்பு வலையமாக கணிக்கப்பட்டு வந்துள்ளது. முக்கியமாக பாராளுமன்றம் கூடும் நாட்களில் இப்பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பல மடங்கு அதிகரிக்கப்படுவதுண்டு. சோதனைச் சாவடிகள், பாதுகாப்பு அரண்கள் ஆகியவற்றை எவரும் சுலபமாக கடந்து செல்ல முடியாது. வாகனங்கள் யாவும் நிறுத்தப்பட்டு சோதனைகள் நடத்தப்படுவதுண்டு. பாதசாரிகளும் ஆயுதப்படையினரின் பரிசோதனைகளுக்கு ஆளாக்கப்படுவர்.

இத்தகைய பாதுகாப்பு முன்னேற்பாடுகள் இருந்தும்கூட கனரக ஆயுதங்களுடன் புலிகள் அந்தப் பிரதேசத்துக்குள் எவ்வாறு நுழைந்தனர் என்பது அதிகாரிகளைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

சம்பவம் நடைபெற்ற அன்று பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சுக்குரிய வரவு செலவுகள் பற்றிய விவாதங்கள் நடைபெற்றன. அதுமட்டுமல்லாமல் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலம் நீடிப்பதற்கான பிரேரணையும் விவாதத்துக்கு எடுக்கப்பட்டிருந்தது. இவ்விரு பிரேரணைகள் தொடர்பாக இடம் பெறும் விவாதங்களில் பாதுகாப்பு இணை அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை நிச்சயம் கலந்து கொள்வார் என்பது வெளிப்படை. விவாதங்கள், வாக்கெடுப்புகள் நடைபெற்று முடிந்ததும் ஜெனரல் ரத்வத்தை இராஜகிரியாவிலுள்ள இதே வீதியினூடாவே பிரயாணம் செய்வார் என்பதும் தெரிந்திருந்தது. ஆகவே, அவரை இலக்காக வைத்தே இத்தாக்குதலுக்கான ஏற்பாடுகளை புலிகள் திட்டமிட்டிருந்தனர், என்பது ஆய்வாளர்களின் முடிவாகும்.

அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை புலிகளின் தாக்குதலில் இருந்து தெய்வாதீகமாகத் தப்பித்துக் கொண்டார் என்று கூற முடிகிறது. மாறாக புலிகளின் திட்டம் நிறைவேறியிருந்தால் கொழும்பில் எத்தகைய அநர்த்தங்கள் ஏற்பட்டிருக்குமோ. என்பதை நினைத்துப் பார்க்கவே முடியாதிருக்கிறது.

இத்தகைய காரணங்களைச் சுட்டிக் காட்டியே வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் உடனடியாக போர் நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். அப்போர் நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பினரும் மீறாமல் இருப்பதற்கே பிறநாடு ஒன்றின் மத்தியஸ்த்தம் அவசியமென்று அவதானிகள் கருதுகின்றனர்.

போரை நிறுத்தாமல் அமைதிப்பேச்சை ஆரம்பிப்பதோ தொடர்வதோ எந்தவகையிலும்-தொடரும் அழிவை நிறுத்தப்போவதில்லை. பேச்சுவார்த்தை முடிவதற்கிடையில், இப்பொழுது நடைபெறுவது போன்ற அநர்த்தங்கள் தொடர்வதைத் தடுத்து நிறுத்துவது கடினமானதொன்றாகவே கருத வேண்டியிருக்கிறது. ■

## பாராளுமன்ற வளாகத்தில் வெடிபொருட்கள்

### அனுமதிக்கலாகாதென சபாநாயகர் அறிவுரை

பெப்ரவரி 14ம் திகதியன்று பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றுவதற்கு, எவருமே எதிர்பாரத நிலையில், ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க நேரடியாகவே வந்திருந்தார். அன்றைய தினம் பாராளுமன்றத்துக்கு வருகை தந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஜனாதிபதி பாதுகாப்பு அலுவலர்களே பரிசோதனை செய்து உள் அனுப்பி வைத்தனர்.

அன்றைய தினம் பாராளுமன்றக் கட்டடத்தின் சகல பகுதிகளும் சல்லடை போட்டு அலசப்பட்டன. கட்டடத்தின் 3வது மாடியில் ஓர் அறையைப் பரிசீலித்தபோது பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. தற்கொலைக் குண்டுதாரிகளால் அணியப்படும் அங்கியும் வெடி பொருட்களும் அங்கு கண்டெடுக்கப்பட்டன.

ஆரம்பத்தில் இத் தகவல் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. பின்னர் இடம்பெற்ற விசாரணைகளின்போது இவற்றை, பாராளுமன்றப் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அதிகாரி ஒருவரே இத்தகைய அபாயகரமான பொருட்களை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து வைத்ததாகத் தெரிய வந்தது.

இவ்வெடி பொருட்களை அங்கு கொண்டு வந்து வைத்தமைக்காகக் கூறப்படும் காரணம்தான் விசித்திரமாகவுள்ளது. பொலிஸ் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது ஊழியர்களுக்கு இத்தகைய வெடி பொருட்கள் பற்றிய அறிவை ஊட்டுவதற்காகவே அவை அங்கு கொண்டுவரப் பட்டதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனையிட்டு சபாநாயகர் கே.பி.இரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில், தற்கொலைக் குண்டுதாரிக்குரிய அங்கியும் ஏனைய வெடி பொருட்களும் பாரிய வெடியை ஏற்படுத்தி பெரும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்த ஏதுவானவை. எனவே, இத்தகைய ஆபத்தான பொருட்கள் பாராளுமன்ற வளாகத்துக்குள் எக் காரணம் கொண்டும் கொண்டுவரப் படலாகாது என்று பொலிஸ் அதிகாரியிடம் கூறினார். கடந்த 13ம் திகதி திங்கட்கிழமை சபாநாயகர் இது தொடர்பாக பாராளுமன்றத்திலும் அறிவித்தார். ■

## வாழ்த்துக்கள்

வாசகர்களுக்கு எமது ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## விசேட ஜும்மாத் தொழுகை

மதீனாவிலுள்ள நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மசூதியான மஸ்ஜித்-அன்-நபவியில் கடந்த 10ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஜும்மா தொழுகையில் இரண்டரை இலட்சம் ஹஜ் யாத்திரீகர்கள் கலந்து கொண்டார்கள்.

மதீனா பிராந்தியத்தின் அமீர் மேன்மை தங்கிய மெக்ரின் பின் அப்துல் அஸீஸ் அவர்களின் நேரடி மேற்பார்வையில் இந்த விசேஷ ஜும்மா தொழுகை நேர்த்தியாக நடைபெற்றதாக மதீனாவிலுள்ள சிறப்பு நிருபர் அப்துல் அக்பர் ஹலால்தீன் அறிவிக்கிறார்.

## பெயர் பதிவில் ஏற்படும் தாமதம்?

(கண்டி நிருபர்)

கண்டி மகியாவைப் பிரதேசத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் வாசிப்போர் பற்றிய பெயர்ப் பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் அரச ஊழியர்கள் தமது நேரத்தையும் காலத்தையும் வீணடிப்பதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஆண்டுக்கு ஒரு தடவை இவ்வாறு பெயர்களைப் பதிவு செய்து அவற்றின் பிரதி ஒன்றை பொலிஸாருக்கும் கிராம சேவகருக்கும் மற்றையதை குடியிருப்பாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய வேலைத் திட்டம் தினமும் வீணடிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கங்கவட்ட கோரளை, பூரணவத்தை மேற்கு கிராம சேவகர் வட்டாரத்திற்கு உட்பட இப்பிரதேச மக்கள் பல மணிநேரம் காத்திருக்க வேண்டியிருப்பதாகவும் ஒரு நாளைக்கு சுமார் 15 குடும்பங்களுக்கே இந்தப் பெயர்ப் பதிவு புதுப்பிக்கப்படுவதாகவும் தெரிவிக்கும் அப்பிரதேச மக்கள் சுமார் 4000 பேர் வாழும் இப்பிரதேசங்களில் பெயர்ப்பதிவு நடவடிக்கையில் மேலும் ஒருவரை கிராம சேவை அதிகாரியுடன் கடமையில் அமர்த்தினால் இந்தத் தாமதம் குறைந்து விடும் எனவும் ஆலோசனை தெரிவிக்கின்றனர்.

மகியாவைப் பிரதேசம் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசமாகும். வெளியில் இருந்து பலர் குடியிருப்பாளர்களின் வீடுகளுக்கு வந்து தங்கும் பொழுது பல்லேறு பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருப்பதால் இவ்வாறு தம்மோடு வீடுகளில் வசிக்கும் தலைமை குடியிருப்பாளர் கிராம சேவகருக்கும் பொலிஸாருக்கும் அறிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாலேயே இந்தக் காலதாமதம் தரும் நெருக்கடியும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அதேவேளை அப்போது இப்பணியை ஒரு கிராம சேவை அதிகாரியினால் மாத்திரம் செய்வதில் ஏற்பட்டுள்ள வேலைப்பளு குறித்தும் குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்வாறு வேலையைத் துரிதப்படுத்தினால் பல சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் அவர்கள் நம்புகின்றனர்.

## ஐ.தே.க. கொத்தணி அமைப்பாளர்கள் கைது

### மௌலானா எம்பி மீதும் விசாரணை!

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மட்டக்களப்பு ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் கடந்த 07 ஆம் திகதி இவர் மீது விசாரணைகள் மேற்க்கொள்ளப்பட்டன. பிற்பகல் 3 மணியிலிருந்து இரவு 9 மணிவரை சுமார் ஆறு மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டு அவர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

மட்டக்ளப்பு மாவட்டத்தில் புலி இயக்கத்தினரின் ஆளுகையின் கீழுள்ள பகுதியில் ஐ.தே.க.வினர் மேற்கொண்ட ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை, ஜனாதிபதி சந்தரிகா மீது மேற்கொள்ளப்பட்ட கொழும்பு மாநகர சபைக் குண்டு வெடிப்பு, புலிகளுடனுள்ள தொடர்பு மற்றும் வேறு அவரது நடவடிக்கைகள் தொடர்பாக எம்.பி. விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

இதனிடையே கடந்த மாதம் 08ஆம் திகதி மட்டக்ளப்பில் ஐ.தே.க. கொத்தணி அமைப்பாளர்களான 4 பிரமுகர்கள் கைது செய்யப்பட்டு இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வந்த சி.ஐ.டி. யினரே இந்த வித விசாரணைகளில் ஈடுபட்டு இவர்களைக் கைது செய்திருந்தனர். கொழும்பு 4ஆம் மாடியிலேயே அவர்கள் விசாரிக்கப்பட்டனர்.

கட்டிட ஒப்பந்தக்காரர் இக்னேசியஸ் ராஜா, சடுதி மரண விசாரணை அதிகாரி பப்டிஸ் பெர்னாண்டோ, சி.கதிர்காமப் போடி, மற்றும் மட்டக்களப்பு வர்த்தகர் சங்கத்தலைவரும் ஐ.தே.க. கொத்தணி அமைப்பாளருமான ராஜன் சத்தியமூர்த்தி ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## வெளிநாடு சென்றோரின் விவரம் சேகரிக்கும் படையினர்

குடும்ப அங்கத்தவர்களில் வெளிநாடு சென்றிருப்போரின் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளில் படை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

படையினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடு வீடாகச் சென்று இந்த விவரங்களைக் கேட்டறிந்து வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கும், வேறு மேற்கு நாடுகளுக்கும் மற்றும் தொழில் வாய்ப்பிற்காக வேறு பல நாடுகளுக்கும் சென்றிருப்போரைப் பற்றிப் படையினர் விவரங்கள் சேகரிப்பதால் இந்த விவரங்கள் எதற்காகச் சேகரிக்கப் படுகின்றன என்று அறியாத பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களில் ஒவ்வொருவரின் அடையாள அட்டை இலக்கம், செய்யும் தொழில் போன்ற விவரங்களைத் தங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு படையினர் ஏற்கெனவே அறிவித்தல் விடுத்திருந்தனர்.

அதற்கு அடுத்த படியாகவே இப்பொழுது படையினர் வீட்டுக்கு வீடு சென்று வெளிநாடு சென்றிருப்போரின் விவரங்களைத் திரட்டி வருகின்றனர். ●

## இலண்டனிலும் சுவிசிலும் புத்தகக் கண்காட்சி

இலண்டன் மாநகரிலும் சுவிற்ஸர்லாந்தின் மூன்று மாநிலங்களிலும் சித்திரைப் புத்தாண்டை ஒட்டி, சென்னை மணிமேகலைப் பிரசுராலயத்தின் புத்தகக் கண்காட்சிகள் நடைபெறவிருக்கின்றன. இக் கண்காட்சி தொடர்பாக புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள் 14 பேரின் நூல்களின் அறிமுக விழாவும் இடம்பெறவுள்ளது.

மணிமேகலைப் பிரசுராலயத்தின் அதிபர் திரு.ரவி தமிழ்வாணனும் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்க விருக்கிறார். இந்நிகழ்ச்சிகளுக்கு டாக்டர் க.இந்திரகுமார் ஒருங்கிணைப்பாளராகப் பணிபுரிகிறார். ■

## பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட பொருத்தமற்ற பதவி?

பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்கிளிலும், கூட்டுத்தாபனங்களிலும் பட்டதாரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

நாடு பூராவும் பல பட்டதாரிகளுக்கு சம்பளம் பெறும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்தந்ததுறைப் பட்டதாரிகளுக்கு பொருத்தமான வேலைகளுக்கான நியமனமாக வழங்கப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 72 பட்டதாரிகள் மொழி பெயர்ப்பாளர்களாக நியமனம் பெற்றார்கள். ஆனால் கலைத்துறையில் பட்டம் பெற்றவர்களுக்கே இந்த மொழி பெயர்ப்பாளர் நியமனம் கிடைத்திருக்கிறது.

எதுவுமே புரியாத பொருத்தமற்ற நியமனத்தைத் தங்களுக்கு வழங்கியுள்ளதாகப் பல பட்டதாரிகள் கருதுகிறார்கள் "கலைப் பட்டதாரியான எங்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்பாளர் நியமனம் வழங்கியுள்ளது. எங்களது வளத்தைத் துஷ்பிரயோகம் செய்தது போலுள்ளது. என்று நியமனம் பெற்ற பல பட்டதாரிகள் மன வேதனையடைந்துள்ளார்கள்.

இந்தத் தொழிலை தொடர்ந்து செய்வது தமக்கு விருப்பமில்லை என்றும் பலர் கூறுகிறார்கள்.

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் ஆயிரக்கணக்கான ஆசிரிய வெற்றிடங்கள் நீண்ட காலமாக உள்ளன. அவற்றைக் கவனத்திலெடுக்காது பொருத்தமற்ற மொழி பெயர்ப்பாளர் நியமனம் வழங்கியிருப்பதையிட்டு சமூக நல ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள். ●

## காரைதீவுக் கடற்கரையில் திறந்து வைக்கப்பட்ட நினைவுச்சின்னம்

கடந்த திருவாதிரைத் தீர்த்த தினத்தன்று காரைதீவுக் கடலில் தீர்த்தோற்சவம் நடைபெற்றபோது கடலில் மூழ்கி இறந்த இளைஞர்கள் ஏழு பேரின் நினைவாக காரைதீவுக் கடற்கரையில் வெள்ளை நிற ஸ்தூபி ஒன்று அமைக்கப்பட்டு கடந்த சிவராத்திரியன்று திறந்து வைக்கப்பட்டது.

காரைதீவு பிரஜைகள் குழுத்தலைவரும், பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான திரு.கு.மகாலிங்கசிவம் இந்த ஸ்தூபியைத் திறந்து வைத்துப் பேசுகையில், "காரைதீவு மக்கள் நெஞ்சங்களை என்றுமே விட்டகலாத சோகமான சம்பவத்தை நினைவு கூருமுகமாக அமைக்கப்பட்டுள்ள இந்த ஸ்தூபி இம்மண்ணின் வரலாற்றில் நிச்சயம் சிறப்பு மிக்க ஒன்றாகும்," என்றார். கடலில் குளிக்கவோ அல்லது தொழில் நிமித்தம் செல்லவோ முன்வரும் அனைவருக்கும் இந்த ஸ்தூபி ஓர் எச்சரிக்கையை விடுத்த வண்ணமே இருக்கும் என்றும் சொன்னார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பெற்றோர் ஆசிரியர் சார்பில் அதிபர் சா.கந்தசாமி ஆகியோரும் உரையாற்றினார்கள். இவ்வைபவத்தில் கலந்து கொண்ட மக்கள் அனைவரும் நடந்து முடிந்த துயர சம்பவத்தை எண்ணிக் கண்ணீர் சிந்திய வண்ணம் காணப்பட்டனர். ■

## ஐ.சி.ஆர்.சி. கப்பல் சேவை

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மார்ச் மாதத்துக்கான தமது வடபகுதிக் கப்பற் சேவை பற்றிய தினங்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி மார்ச்-7,14,20,23,28ந் திகதிகளில் திருக்கோணமலையிலிருந்து வடபகுதி நோக்கிப் புறப்படும் கப்பல் மார்ச். 09, 16, 22, 25, 30 ஆகிய தினங்களில் திருகோணமலை நோக்கித் திரும்பவுள்ளது.

நோயாளிகளை ஏற்றிச் செல்லும் இக்கப்பல் சேவையின் போது தபாற் பொதிகள் அரச அனுமதி பெற்று வேறு பொருட்கள் என்பவையும் எடுத்துச் செல்லப்படும். ■

## அபிவிருத்தியின் பெயரால் தமிழ் குடியிருப்புகள் அபகரிப்பு

(திருமலை நிருபர்)

நிரந்தரக் குடியிருப்பாளரை 24 மணி நேரத்தில் குடியெழுப்பி விட்டு தற்போது அக் காணியில் சுகாதார நிலையம், சமூர்த்தி அலுவலகம், அஞ்சல் அலுவலகம் என அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் முரசிடம் முறையிட்டுள்ளனர்.

கிண்ணியாவில் குடியிருந்த 27 தமிழ்க் குடும்பங்கள் இவ்வாறு துரத்தியடிக்கப்பட்டுள்ளன. இவர்கள் பரம்பரையாக இந்நிலப்பரப்பில் குடியிருந்தவர்கள். 1970ம் ஆண்டு இக்காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

1986 மே.. 4ந் திகதி அன்றைய பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான மகரூப் இராணுவத்தின் சகிதம் வந்து "இவ்விடம் இராணுவமுகாம் அமைக்கத் தேவையாகவுள்ளது. உடனடியாக வெளியேறுங்கள்" என உத்தரவிட்டதற்கமைய மாற்று வழியறியாத நிலையில் 27 தமிழ்க் குடும்பங்களும் வெளியேறின. அடுத்த நாளே அவர்கள் வீடுகள் புல்டோசர் மூலம் உடைக்கப்பட்டு முகாம் அமைக்கப்பட்டது.

1990ல் அந்த முகாம் விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டதையடுத்து அவ்வெற்றுக் காணியில் உரியவர்கள் மீளக் குடியேறாதவாறு அரச அதிகாரிகளால் தடுக்கப்பட்டதோடு அந்நிலப்பரப்பு தற்போது அபிவிருத்தி என்ற போர்வையில் கபளீகரம் செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கிறார்கள்.

14 வருடங்களாக இருப்பிடமின்றி அலையும் இம் மக்களுக்கு இதுவரை மாற்றுக் காணிகள்கூட வழங்கப்படவில்லை.

"கிண்ணியா நகரில் வெற்றுக் காணிகள் பல இருந்த போதிலும் எங்களை முறைகேடாக அகற்றியதும், மீளக் குடியேறாதவாறு தடுத்துக் கபளீகரம் செய்ததும் அப்பட்டமான துவேஷத் தனமே!" எனப் பாதிப்புற்றோர் முரசிடம் தெரிவித்தார்கள். ●

## சம்மாந்துறைக்கு 60 ஆங்கில ஆசிரியர்கள்

(காரைதீவு நிருபர்)

சம்மாந்துறை வலயத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றவென 60 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அனுமதியை வட-கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா வழங்கியுள்ளதாக சம்மாந்துறை பதில் வலயக் கல்விப்பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.ரீ.ஏ தௌபீக் எமது நிருபரிடம் கூறினார்.

எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 60 பேர் மாகாண கல்வியமைச்சினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தற்போது பல்கலைக்கழகங்களில் பயின்று கொண்டிருப்போர் இந்நியமனத்திற்கு தகுதியற்றவர்களாக கணிக்கப்பட்டுள்ளனர்.

ஆங்கில ஆசிரியர் மிகவும் பற்றாக்குறை நிலவுகின்ற இறக்காமம், சம்மாந்துறை வடக்கு உபவலயம் என்பவற்றுக்கு ஏலவே உறுதியளிக்கப்பட்ட வண்ணம் கூடுதலான ஆசிரியர்கள் நியமனஞ் செய்யப்படுவரென பணிப்பாளர் தௌபீக் மேலும் கூறினார். ■

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



**பிரியந்தன் (பிரியந்) 20.03.2000**

சுவிசில் வசிக்கும் தனுசன்-கல்பனா தம்பதியினரின் செல்வப் புதல்வன் பிரியந்தன் தனது முதலாவது பிறந்தநாளை 20.03.2000 அன்று ஜேர்மனியில் வசிக்கும் தனது அப்பம்மா வீட்டில் கொண்டாடுகிறார். இவரை கொழும்பில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, ஜேர்மனியில் வசிக்கும் அப்பம்மா, பெரியத்தை, சின்னத்தை, மாமா, மச்சாள்மார், சுவிசில் வசிக்கும் பெரியமாமா, சின்னமாமா, பெரியம்மா, பெரியப்பா, அக்காமார், மாமி, மச்சாள், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பெரியம்மா, பெரியப்பா, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் சீரும் சிறப்புடனும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென ஆண்டவனை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல்: வை.கோபாலகிருஸ்ணன், தெஹிவளை.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**றொசான் சஞ்சீவ் 19.03.2000**

யாழ் அல்லைப்பிட்டி ரவீந்திரன்-வசந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வன் றொசான் சஞ்சீவ் தனது 1வது பிறந்ததினத்தை மிலேனியம் வருடம் பங்குனி மாதம் 19ம் திகதி யாழ். அல்லைப்பிட்டியில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, யான்சி அக்கா, அம்மம்மா, அம்மப்பா,மாமாமார்,மாமிமார்,அன்ரிமார்,அங்கிள்மார்,அக்காமார், அண்ணா மார், பத்மாமாமி(வவுனியா)குடும்பத்தினர், மூர்த்தி அங்கிள் குடும்பத்தினர் (அச்சுவேலி),நல்வாழ்வு வாழ வாழ்த்தும் வேளையில் இந்தியாவிலுள்ள அப்பப்பா (பிரபல பத்மநாதர் சாத்திரியார்), அப்பம்மா, சூடாமணி சித்தப்பா, நேரு சித்தப்பா, விஜிந்தன் மச்சான்,லிங்கம்-பத்மசிறிமாமி குடும்பத்தினர், பெருவாழ்வு வாழவாழ்த்துகின்றனர். மேலும் சங்கர் சித்தப்பா(சுவிஸ்), முரளி-பத்மினிமாமி குடும்பத்தினர் (கனடா),ரமேஸ் அண்ணா(லண்டன்), ரூபன் அண்ணா குடும்பத்தினர் (ஜெர்மனி), நிலா அக்கா குடும்பத்தினர் (நோர்வே), வேட்டிருப்பு கண்ணையன் அங்கிள் குடும்பத்தினர்(இந்தியா)மற்றும் உற்றார் உறவினர்,நண்பர்கள், செல்வன் றொசான் சஞ்சீவ் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பா ரவீந்திரன், த. பெட்டி எண்.40252, டோகா-கட்டார்


## தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SERVICES

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல்,கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் மார்ச் 20 முதல் 28 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
SRI SAWBAKIYA INN. - No.67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P. 336165, 338163, 338166, செல்டெல் - 072 609388.

**கல்முனையில் ஏப்பிரல் 1, 2.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஏப்பிரல் 13, 14.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

# SPOKEN ENGLISH

## By K.M.N. NALRAVI

யாருக்காக?

★ தொழில் புரிபவர்களுக்காக.
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒவ்வொரு மாணவரிடமும் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒரு வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassetteகள்.
- வீட்டிலும் வகுப்பிலும் பயிற்சி பெற Video Cassetteகள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 3 அல்லது 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை
(புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்)

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo-06. (Hotel Ceylon Innsக்கு அருகில்)

உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK

- ✶ காய்ச்சல்
- ✶ தலைவலி
- ✶ தலைச்சுற்று
- ✶ தலைப்பாரம்
- ✶ ஜலதோஷம்
- ✶ இருமல்
- ✶ மூக்கடைப்பு
- ✶ பல்வலி
- ✶ காதுவலி
- ✶ வயிற்றுவலி
- ✶ வாதத்தால் வரும் வலிகள்
- ✶ உணர்ச்சியற்ற பாகங்கள்
- ✶ சுளுக்கு
- ✶ தசை வலிகள்
- ✶ பூச்சிக் கடிகள்
- ✶ பிரயாணக் களைப்பு
- ✶ மதுவால் ஏற்படும் பிரச்சினை

கோடாலித் தைலம்



Rs. 20.00 Only
(3ml)

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.**

ஏக விநியோகஸ்தர் :

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
Tel : 888214 Fax : 682984


## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
21.07.1968

உதிர்வு:
23.02.1997

அமரர் திரு.
ஜோகராசா
விக்கினேஸ்வரன்
(விக்கி)
பணிப்புலம்
பண்டத்தரிப்பு



அழியாத உன் நினைவில் ஆண்டு மூன்று கழிந்தாலும் எம் உள்ளத்தில் என்றென்றும் அழியா இடம் பெற்றாய். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அம்மா சகோதரர்கள்.

தகவல்:
த.புலேந்திரன்
கனடா.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**21. 03. 2000**



**அமரர். திரு. வேலாயுதம் நாணு (ஆசாரி)**

*விண்தொட்டகாலம் சென்று ஆண்டு மூன்று. மண்விட்டு நீதான் மறைந்து போனாலும், மனம் விட்டு உங்கள் நினைவு மறையாது. எங்கள் ஐயாவே! தாங்காத வேதனையில் அழுதழுது சீவிக்கின்றோம் ஆற்றுவார் இல்லாத அனாதை போலானோம் ~ எங்கள் துயர் தீர்க்க மீண்டும் ஒரு பிறவி எடுத்து நீங்கள் வாருங்கள் எங்களோடு வாழ்வதற்கு.*

*என்றும் தங்கள் பிரிவால் துயறும்,*

*மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

தகவல்:- நா. ரங்கநாதன்
பலர்மோ இத்தாலி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 - 07 - 1994



மறைவு: 17 - 02 - 1999

**செல்வன் செ. அற்சுதன்**

திதி: 07.03.2000

(இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வக்குமார்-சோமறஞ்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன்)

மறைந்தும் மறையாமல் எம் உள்ளத்தில் உறைந்து நின்று சுடர்விடும் அன்பான அற்சுதனே! ஆண்டொன்று ஓடியதே ஒழிய எம் கண்ணில் ஈரம் காயவில்லை ஐயா!

நோயில் நீர் இருந்த காலமும் நூறிலும் எம்மைப்பிரியீர் என நம்பியிருந்தோம். காலன் வந்து உன் உயிர்பறிக்க எம் கண்கள் குருடாய் போனதுவே. வேளைவந்தோ நீர் போனீர்? எங்கள் வேதனை துயர் காணீரோ? மீண்டும் உன் முகம் தோன்றுமோர் நாளுக்காய் ஏங்குகின்றோம். உன் பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, அக்கா, மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள்.

தகவல்: த.செல்வக்குமார் (தந்தை),ஜேர்மனி 0231/5311064.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பேச்சுவார்த்தையில் பின் கதவால் இந்தியாவா?

'சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு' என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே விளம்பரப்படுத்திக்கொள்ளும் வகையில் ஐ.தே.க.வும் பொ.ஜ.மு.யும் இப்போது பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளது உண்மைதான்.

ரணில் கூறிய கூற்றில் ஒரு அடிப்படைச் செய்தி உள்ளது. அதாவது தனக்குத் தெரிந்த வரலாற்றில் அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றாய்ச் சேர்ந்திருந்து இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் திட்டமொன்றை ஆராய்வது இதுதான் முதற் தடவையென அவர் கூறுகிறார். அப்படி அது உண்மையா என்பது இறுதிவரை இவர்கள் ஒன்றுபட்டு நிற்பார்களா என்பதிலும் ஒருமித்த முடிவுக்கு வருவார்களா என்பதிலுமே தங்கியுள்ளது. வெறும் தொடக்கத்தை மட்டும் வைத்து புளகாங்கிதப் படுவதில் அர்த்தமில்லை.

ரணில் சொன்னதுபோலன்றி எமது வரலாற்றில் மேலும் பல தொடக்கங்கள் நிகழ்ந்துதான் உள்ளன. ஆனால் முடிவுதான் எட்டவில்லை. ஐ.தே.க.வின் கடந்த பிரேமதாஸா ஆட்சிக்காலத்திலும் இவ்வாறு பல பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுத்தான் இருக்கின்றன. சர்வகட்சி மகாநாடு நடத்தப்பட்டிருந்தது. அதைவிட பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டு நீண்ட நாட்களாக பல்வேறு கட்சிகளின் ஆலோசனைகள் விவாதிக்கப்பட்டு இறுதியில் எதுவித உடன்பாட்டுக்கும் வரமுடியாமல் அவை குப்பைக் கூடையினுள்ளே போடப்பட்டது. அந்தப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த மங்கள முனசிங்கவையே ஐ.தே.க., தலைவராக நியமித்தும் இருந்தது. எனவே இதுவே எதிர்க் கட்சியும், ஆளும் கட்சியும் ஒன்றாய் முனைந்த தீர்வு முயற்சி என்று ரணில் பீற்றிக் கொள்வதை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது.



எப்போது ஏற்றுக்கொள்ளக் கூடிய- ரணில் சொல்வதைப் போன்ற- 'சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாய்' இது அமையுமென்றால் எப்போது இப்பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக நடத்தி உருப்படியான தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய ஒரு தீர்வில் இணக்கம் காணுவார்களோ, அப் போதுதான் நாம் படம் ஆரம்பிக்கும் போதே விசிலடிக்கும் 'விசிலடிச்சான் குஞ்சுகள்' அல்ல. படம் நல்லா முடிந்த பின்புதான் எம்மால் மதிப்புக்கூற முடியும். எனவே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக கூறுவதிலல்ல; சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்குவதில் தான் உண்மையான பெருமை இருக்கிறது.

அவ்வாறு ஆக்கப்பட்டால் அந்தப் பெருமை அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, எதிர்க்கட்சியையும் தான் சேரும். உண்மையில் எதிர்க்கட்சியையே அதிகப்படியாகச் சேரும். ஏனெனில் பல தடவைகள் ஆளும் கட்சிகள் தீர்வுகளைத் தர முன்வந்த சம்பவங்கள் எமது வரலாற்றில் உள்ளன. ஆனால் எதிர்க்கட்சிகள் அதில் இணக்கத்துக்கு வந்ததுதான் எம் வரலாற்றில் இல்லை.

இம்முறை ரணில் ஒரு இணக்கத்துக்கு வருவாரானால் அதுவே சரித்திரத்தில் முதற் சம்பவமாக அமையும். இருந்தபோதிலும் இவ்விரு தரப்பினரும் காணுகின்ற இணக்கம் தமிழ்த் தரப்பினரைத் திருப்தி செய்யக்கூடியதாக இருக்கவேண்டுமென்பது இங்கு அடிப்படையாக அமைந்திருக்கின்ற நிபந்தனை. இதனை அது பூர்த்திசெய்யாவிட்டால் இவர்கள் ஈட்டுகின்ற இவ் இணக்கமும்கூட தீர்வைத் தரமுடியாத புஸ்வாணமாகிப் போய்விடும். ஆனால் ஐ.தே.க. இந்த அரசியல் திட்டத்துக்கு தற்போது சமர்ப்பித்துள்ள ஆலோசனைகளில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய எந்தவொரு அரசியல் தீர்வுக்கான அம்சத்தையும் முன்வைக்கவில்லையென்பது வருத்தத்துக்குரிய விடயம்.

அது முன்வைத்த இவ்வாலோசனைகளில் பெரும் பங்கு இனப்பிரச்சனையுடன் நேரடிச் சம்பந்தமற்ற, ஐ.தே.க.வின் அக்கறைக்குரிய பொது அரசியல் விடயங்களாகவே இருந்தன. (அவற்றைச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம்.) அதேவேளை தமிழ் மக்களுடன் சம்பந்தப்பட்ட விடயமாக அவ்வாலோசனையில் ஐ.தே.க. கொடுத்திருந்த ஒரேயொரு பக்கத்தில் இருந்தவையும் அரசியல் தீர்வுத் திட்டத்தில் சேர்க்கக் கூடிய தீர்வு வடிவங்களல்ல. வெறும் வழிமுறைகள் பற்றிய ஆலோசனைகளும், அன்றாடப் பிரச்சனைகளைக் கையாளுவது பற்றிய கருத்துக்களும்தான்.

கடந்த இதழில் இவைகுறித்து ஆராய முற்பட்ட போதிலும் (இடப்பிரச்சனை காரணமாக) பூரணப்படுத்தப்படவில்லையென்பதால் அவற்றை இவ்விடத்தில் மீண்டும் இங்கே பார்ப்பது உசிதம்.

## இனப்பிரச்சனையில் ஐ.தே.க.

ஐ.தே.க.வின் இனப்பிரச்சனை தொடர்பாக ஒதுக்கிய அந்த ஒரு பக்கத்தில் நான்கு விடயங்களைத்தான் கூறியுள்ளது.

முதலாவது விடயத்தில் மூன்று பகுதிகளுள்ளன. அவை 'லியாம் ஃபொக்ஸ்' உடன்படிக்கையின் பிரகாரம் புலிகளுடன் பேச்சு வார்த்தை முயற்சிகள் பற்றிய அரசாங்கம் எதிர்க்கட்சிக்கு அறியத்தர வேண்டுமெனவும், புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் படியும்,

அவசியப்பட்டால் மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் ஒருவரைப் பயன்படுத்தும் படியும் கூறுகின்றன.

இவற்றில் அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ளடக்க எதுவும் இல்லை. வெறுமனே 'நல்ல புத்திமதிகளாகக் கொள்ளலாம். அத்தோடு புலிகளோடு பேசுவதையும், மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தையும் ஐ.தே.க. எதிர்க்கப் போவதில்லை என்ற நல்ல சமிக்ஞையாக வேண்டுமெனில் ஏற்றுக் கொள்ளலாம்.

அதன் இரண்டாவது விடயத்திலுள்ள மூன்று பகுதிகளும் தமிழ் மக்களின் இன்னல்கள் சிலவற்றை நிவர்த்தி செய்வது பற்றிப் பேசுகின்றன.

வடக்கு-கிழக்கின் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு உணவு, மருந்து வகைகளின் விநியோகத்தை உறுதிப்படுத்தும்படியும், மீன்பிடி, விவசாயக் கட்டுப்பாடுகளை அகற்றி, வடக்கு கிழக்கு மக்கள் தமது தொழில்களை மேற்கொள்வதை உறுதிப்படுத்துமாறும், அவசியமானவிடத்து, சமூகத் தலைவர்களுடன் ஆலோசித்து குறிப்பிட்ட ஆழ் கடல் வலயங்களில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகளை நிர்ணயிக்கும்படியும், எக்காலத்திலாவது ஏற்பட்ட வருமான இழப்புக்கான தகுந்த நஷ்ட ஈட்டை வழங்கும்படியும், அப்பாவி மக்கள் மீதான தொல்லைகள், வடக்கு, கிழக்குப் பயணிகளுக்கு ஏற்படும் கால தாமதம், மற்றும் பிரச்சனைகளை நீக்க பாதுகாப்பு உயரதிகாரிகளுடனும் சமூகத் தலைவர்களுடனும் அவசரமாகப் பேச்சுவார்த்தை நடத்தி பொது இணக்கத்துடனான வழிவகைகளைக் காணும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

இவை தமிழ் மக்களைப் பொறுத்தவரை விரும்பத்தக்க விடயங்கள்தான். ஆனால் நடைமுறை சம்பந்தப்பட்ட விடயங்களேயன்றி அரசியல் தீர்வுக்கான விடயங்களல்லவே!

ஆனால் பேச்சு வார்த்தையென்பதோ அரசியல் தீர்வைக் காணுவதையே பிரதானமான நோக்கமாகக் கொண்டது. இங்கு அரசியல் திட்டத்தில் சேர்ப்பதற்கு உரிய விடயங்களாக எதுவும் இல்லை.

அதன் மூன்றாவது விடயத்திலுள்ள இரு பகுதிகளும் அரசாங்கம் 05.11.99ல் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்ததன் படி, வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் வரை அதனை நிர்வகிக்க ஒரு சபையை அமைக்கும்படியும் (இடைக்கால நிர்வாக சபை) யுத்தத்தைத் தணிக்கவும், பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வந்து சுமுக நிலையை ஏற்படுத்தவும் புலிகளுடன் பேச்சுவார்தைகளை மேற்கொள்ளும் படியும் கூறுகின்றன.

இவைகூட, மறுபடி, அரசியல் தீர்வுத் திட்டத்தில் சேர்ப்பதற்கான விடயங்களல்ல.

மாறாக இதில் புலிகளுடன் பேசுவது என்பது ஒரு தீர்வை எட்டுவதற்கான பேச்சு வார்த்தைக்குச் செல்லும்படி கூறும் வேண்டுகோளாகவும் இடைக்கால நிர்வாக சபை யென்பது எட்டிய ஒரு தீர்வை அமுல்படுத்துவதற்குக் கூறுகின்ற ஒரு வழிமுறையாகவும் மட்டுமே உள்ளன. எந்த விதத்திலும் இவை அரசியல் தீர்வுத் திட்டத்திற்குக் கூறும் ஆலோசனைகளல்ல. அவற்றுக்கு வெளியே உள்ள விடயங்களே.

கடைசியாக அதன் நாலாவது விடயம் தான் இதுவரை கூறியவற்றில் அது போட்ட 'நல்ல பிள்ளை' வேடத்தை கலைத்து அதன் உள்நோக்கத்தைக் காட்டுகிறது.

இங்கு அது அரசியலமைப்பு மாற்றத்துக்கான கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும் படியும், எமது சமூகத்தின் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நடைமுறைத் தீர்வைக் கண்டதன் பின்னரே சம்பந்தப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளும்படியும் கூறுகிறது.

என்ன அரசியலமைப்பு மாற்றங்களைச் செய்யவேண்டுமென ஒரு வார்த்தைகூட இந்த ஆலோசனைகள் கூறவில்லை. ஆனால் இறுதியில் 'சமூகத்தின் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வு' என்று வலியுறுத்துவதன்மூலம் அது மறைமுகமாக எதைக் கூறுகிறதென்றால், சிங்கள இனவாத அமைப்புகளாலும், பௌத்த தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படாத எதையும் அமுலாக்க வேண்டாம் என்பதையே.

## நடக்குமா காரியம்?

இதுவண்டியிலிருந்து அச்சாணியைக் கழற்றிவிடும் தந்திரமேயல்லாமல் வேறென்ன? வண்டிலுக்கு அழகான சோடனைகளாக முன்னால் சொன்ன- தமிழர் மீதான அனுதாப வார்த்தைகளெல்லாம் இந்த வஞ்சகத் திட்டத்தில் வீழ்ந்து நொறுங்கி விடுமே!

இவ்வாலோசனைகளில் ஐ.தே.க. இன்னொரு முடிச்சையும் போட்டுள்ளது. அதாவது 'இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்காத, ஒரு தீர்வாக இது அமையவேண்டும்' என அதில் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளது. 'பிரிவினைக்கு வழி செய்யாத தீர்வாக' அமையவேண்டுமென இதனை மறுபுறமாக சொல்லிக் கொள்கிறது.

ஆனால், எது பிரிவினைக்கு வழிகோலும் எது ஒருமைப்பாட்டுக்கு வழிகோலும் என்று இங்கு யார் தீர்மானிப்பது? இங்கு தீர்வுக்காகக் கூறப்படும் எந்த விடயத்தையும் ஐ.தே.க. நினைத்தால் 'பிரிவினைக்கு வழிகோலப்போகிறது' என்ற சுலோகத்துடன் எதிர்ப்புக்காட்ட முடியும். குறிப்பாக எமக்கான ஆட்சிமுறை பற்றிய பிரதானமான விடயத்தில் இப்பிரச்சனை எழும். ஐ.தே.க. ஒற்றையாட்சியையே வலியுறுத்துகிறது. அதையே இங்கு 'ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்காத தீர்வு' என மறைமுகமாக உணர்த்துகிறது. ஆனால் தமிழ்க் கட்சிகள் சமஷ்டி முறையிலமைந்த தீர்வையே வலியுறுத்துகின்றன. அதனை ஐ.தே.க. நிராகரிப்பதற்கான வகையிலேயே இக் கூற்றும் புலப்படுகிறது. இங்கேயும், அக்கறை காட்டுவதுபோல் புலப்படும் வார்த்தைகளின் கீழ் மறைத்து வைக்கப்பட்டுள்ள மற்றொரு பொறியை நாம் கண்டுகொள்ள வேண்டும்.

அத்தோடு இன்னொரு விடயம். இங்கே அடிக்கடி 'சமூகத் தலைவர்கள்' என்ற சொற்றொடர் பாவிக்கப்படுகிறது. அந்த சொற்றொடர் உண்மையாகக் குறித்து நிற்பது யாரை என்பதும் புலப்படவில்லை. அது ஏதாவது ஒருவகையில் பௌத்த பீடங்களையும் மறைமுகமாக உள்ளடக்குமாக இருந்தால்... 'அம்போ' தான்!

## ஆக மொத்தத்தில்,

ஐ.தே.க.வழங்கியுள்ள தீர்வுக்கான ஆலோசனைகளில் இனப்பிரச்சனை குறித்து அது சேர்த்திருந்த ஒரேயொரு பக்கத்திலும் கூட தீர்வுத் திட்டத்தில் சேர்ப்பதற் கான எதுவும் இருக்கவில்லை.

அத்தோடு அதன் இத்தகைய கபடத்தனமான வாக்கியங்கள் மூலம் தீர்வுத் திட்டத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கக் கூடிய வாய்ப்புக்கே வழிகோலுகிறது. இதேவேளை இங்கு தமிழர் மீதான கரிசனை காட்டும் வகை யில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஏற்பாடுகளுமே வெறுமனே தமிழர்கள் மத்தியில் ஐ.தே.க பற்றிய நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்த முற்படும் ஒப்பனைகளே.

உண்மையான பேச்சுவார்த்தையில் ஐ.தே.க. இறங்கும் போதுதான் அது இதுவரை தமிழ்க் கட்சிகளுடன் அரசாங்கம் இணங்கியவற்றிலிருந்து எவையெவற்றையெல்லாம் உருவியெடுக்க முனையும் என்பதைக் கண்டு கொள்ளலாம். எவையெவற்றை எப்படித் தடுக்கும் என்பதையும் பார்க்கலாம்.

இப்போதுதான் அது பேச்சுவார்த்தைகளிலேயே கால்வைக்க முன்வந்துள்ளது.

பொறுத்திருந்து பார்க்கலாம். எப்படியோ இந்த எதிராளிகள் இருவரும் பேச ஆரம்பித்து விட்டார்களே- அதாவது நடந்திருக்கிறது என்று நாம் சற்று சந்தோஷப் படலாம்.

## இந்தியாவின் பிரசன்னம்

அப்படிச் சந்தோஷப் படுகையில் மற்றொரு சந்தேகம் இப்போது புதிதாய்த் தலைதூக்கியுள்ளது. அதாவது இப்போது நிகழும் பேச்சுவார்த்தை எத்தனங்களில் இந்தியாவுக்கும் ஒரு பின்கதவு திறக்கப் பட்டுள்ளதா என்பதே இச் சந்தேகம்.

இந்தியா பேச்சு வார்த்தைகளில் பங்கெடுப்பது என்பது வேறுவிடயம். அதில் பலவித நன்மைகளும் அச்சங்களும்கூட பல்வேறு தரப்பினருக்கு இருந்தாலும் அது ஒரு வெளிப்படையான-நேரடியான முயற்சி என்ற வகையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் அதன் பங்களிப்பைப் பற்றிய தமது விருப்பு வெறுப்புகளைத் தெரிவித்துக் கொள்ள முடியும். ஆனால் இந்தியாவின் பிரசன்னம் பின்கதவு வழியால் இருக்குமானால் அது கிலேசமூட்டக்கூடியதாகவே அமைந்துவிடும்.

இவ்வாறான சந்தேகம் எழுவதற்கு ஏதுவான சில விடயங்களை இங்கு அவதானிக்க முடிகிறது.

நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்துள்ள சிங்கள இனவாதிகள், மூன்றாம் தரப்பு அவசியமானால், இந்தியாவை அழைக்கலாமென சிபாரிசு செய்திருப்பது முதலில் ஆச்சரியத்தைத் தருகிறது. ஏனெனில் ஆரம்பம் முதலே சிங்கள இனவாதமானது இந்திய எதிர்ப்புடன் பின்னிப் பிணைந்தே வளர்ந்துள்ளது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும், இந்தியப் படைகளின் வருகையையும் அது பலமாக எதிர்த்து நின்ற ஒன்று. அப்படியான இப்பேரினவாத முகாம் இந்தத் தடவை நோர்வேயைவிட இந்தியாவை சிபாரிசு செய்தது ஏன் என்பது சந்தேகத்துக்கிடமானதாகத் தெரிகிறது. அடுத்து, இதேவேளை இந்திய அரசாங்கத்தின் ஒரு பெயர் குறிப்பிடாத பிரமுகர், நோர்வே ஏற்பாட்டுடனான- புலிகளுடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் இலங்கைக்கு இந்தியா இராணுவ ரீதியாக உதவலாமெனக் கூறியுள்ளதாகவும் இன்னொரு செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. இது பேச்சுவார்த்தையில் தோல்வியடைந்த பின்னர் நிகழக்கூடிய சாத்தியக்கூறு பற்றிய ஒரு விடயமா, அல்லது பேச்சுவார்த்தைக்கு முன்னரே தயாரிக்கப்பட்டுவிட்ட ஒரு ஏற்பாடா என்ற சந்தேகத்தை தலைதூக்க வைத்துள்ளது.

இந்நிலையில் இந்தியாவுக்கு சகல விடயங்களும் விளக்கப்படுமென நோர்வே வெளிநாட்டமைச்சர் ஏற்கெனவே கூறியுள்ளார். அதேவேளை இலங்கை வெளிநாட்டமைச்சரும் இந்தியா சென்று பேச்சுவார்த்தைகள் நடத்தி விட்டுத் திரும்பியுள்ளார். அப் பேச்சுவார்த்தைகள் பற்றிய உள் விபரங்கள் வெளிவரவில்லை.

இச் சூழ்நிலையில் இனப்பிரச்சனையின் தீர்வு தொடர்பாக இந்தியா வெளியிட்டுள்ள கருத்தும் சற்று மாறுபட்டுச் சிந்திக்கத் தூண்டுவதாய் உள்ளது.

'தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வு' என்பதாக அல்லாமல், 'அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு' காணப்படவேண்டுமெனவே இம்முறை இந்தியா தெரிவித்துள்ளது. இது தமிழ் மக்கள் குறித்து அரசாங்கம் விட்டுக் கொடுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குப் பதிலாக தமிழ்த் தரப்பினரையே அரசாங்கம், எதிர்க்கட்சிகள் மற்றும் சிங்களத் தரப்பினரின் கருத்துகளுக்காக விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவேண்டுமென்று வலியுறுத்தும் உள்ளுரைந்த கருத்தைப் பிரதிபலிக்கிறது. இனப்பிரச்சனைக்கான பேச்சுவார்த்தை குறித்து இந்தியாவின் கருத்தில் ஏற்பட்டுள்ள இந்தச் சாய்வும் இலங்கை அரசாங்கத்துக்கும் இந்தியாவுக்கும் ஏதோ ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதா என்ற எண்ணத்தை ஏற்படுத்தத் தவறவில்லை.

இத்தருணத்தில் இலங்கை-இந்திய வர்த்தக உடன்படிக்கையை அமுலாக்கும் முயற்சியில் இருதரப்பும் இறங்கியுள்ளதும் இரு தரப்புக்குமிடையிலான நல்லுறவுக்கு அடையாளமாகப் புலப்படுகிறது.

**-நரன்-**

இவை அனைத்தையும் ஒரே பட்டியலிட்டுக் கணக்குப் பார்க்கும்போது, இந்தப் பேச்சுவார்த்தைகளின் நெருக்கடியான கட்டத்தில் இந்தியாவின் பிரவேசத்துக்கான ஒரு பின்கதவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாவென்ற சந்தேகம் தலைதூக்கவே செய்கிறது.

எவ்வாறாயினும் ஒன்று மட்டும் உண்மை. இலங்கையின் இனப்பிரச்சனையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமொன்று ஏற்படும் தறுவாயில், அது இந்திய நலனைப் பாதிக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற குறைந்த பட்ச அளவிலாவது இந்தியா ஏதாவதொரு வகையில் தலையிடத்தான் முற்படும் என்பதை நிராகரிக்க முடியாது. இதில் பற்றற்ற துறவியாக அது நிஷ்ட்டைலியிருக்கப் போவதில்லை என்றே மனக்குருவி கூறிக்கொள்கிறது! ■

## செய்திச் சிதறல்

★ இலங்கை இனப்பிரச்சனையில் நோர்வே தலையிடுவதை ஜே.வி.பி. சந்தேகத்துடன் நோக்குவதாகக் கூறுகிறது. ஜனாதிபதியும் ஐ.தே.க. தலைவரும் அந்தரங்க ஆலோசனை நடத்துவதும் அதேவேளை நோர்வே நாட்டின் தலையீட்டுடன் தீர்வு காண முனைவதும் பொதுமக்களுக்கு சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது. ஆகவே இரகசியமாக எதையும் செய்யாமல் மக்களுக்கும் சகல முடிவுகளையும் அனைத்துத் தரப்பாரும் வெளியிட முன்வர வேண்டும் என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கேட்டுக் கொண்டார்.

நோர்வேயின் தலையீட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை ஜே.வி.பி. நடத்தப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

★ தலைமன்னார் கடலின் வட பகுதியில் கடற்படைக்குச் சொந்தமான படகொன்றைத் தாக்கி அழிக்க விரைந்து வந்த கடற்புலிகளுக்குச் சொந்தமான இரு படகுகளைக் கடற்படையினர் தாக்கி அழித்து விட்டதாக கடற்படையைச் சேர்ந்த அதிகாரி கூறினார். கடற்படையைச் சேர்ந்த ஒருவர் இம்மோதலில் மாண்டார். மற்றும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கடற்புலிகளின் சேதம் பற்றித் தெரியவில்லை. 10ம் திகதி வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடந்ததாகத் தெரிகிறது.

★ மணலாற்றில் இம்மாத ஆரம்பத்தில் நடைபெற்ற மோதலில் 10 புலிகளைக் கொன்றதாக படையினர் கூறுகின்றனர். இதேவேளை யாழ்குடா நாட்டில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற மோதல்களில் 6 புலிகள் கொல்லப்பட்டனர்.

★ மட்டக்களப்பு வவுணதீவு முகாமும் அதனருகே உள்ள விமானத்தளமும் 5ம் திகதி காலையில் புலிகளின் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காக்கப்பட்டன.

★ வடமராட்சி தெற்கு மற்றும் ஆணையிறவுப் பகுதிகளில் 9ம் திகதியன்று இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் படையினர் இருவரும் புலிகளில் 8 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

★ இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான இழுவைப்படகுகள் பல நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த 12ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காணப்பட்டன. இவற்றின் நடுவே மற்றும் இரு இழுவைப் படகுகளும் காணப்பட்டன.

அப்பகுதியால் ரோந்து சென்ற கடற்படையினர் அந்த இரு கப்பல்களின் நடமாட்டத்தில் சந்தேகம் கொண்டனர். இவை இரண்டும் விடத்தில்தீவை நோக்கி விரைந்தன. இவற்றை நோக்கி கடற்படையினர் சுட்டனர். அப்போது அப்படகுகள் ஒன்றிலிருந்த குண்டுகள் வெடித்தன. இதனால் கடற்படைப் படகும் சேதமடைந்தது. இதனுடன் சென்ற மற்றக் கப்பலும் நீரில் மூழ்கியது.

கடற்படைக்குச் சொந்தமான கப்பலுக்கும் சேதம் ஏற்பட்டது. கடற்படையைச் சேர்ந்த ஒருவர் பலியானார். மேலும் நால்வர் காயமடைந்தனர்.

-ஸ்பெஷல் ரிப்போர்ட்-

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

ராஜீவ் காந்தியைப்
படுகொலை செய்யப்
புலிகள் எடுத்த
முடிவைப் போல
துணிச்சல் வாய்ந்த
முடிவு ஒன்றை
எந்த இயக்கமும்
எடுத்திருக்க முடியாது.

அப்படியான
படுகொலையொன்று
விடுதலைப் போராட்டத்தைத்
தற்கொலைக்குத்
தள்ளுவதற் கொப்பான
ஆபத்தான முடிவு.

ஏனெனில்,
அயல் நாடான
இந்தியாவை
எதிரியாக
ஆக்கிவிடுவதோடல்லாமல்
உரிமைப் போராட்டமாய்
உலகுக்குத் தெரிந்த
தமிழ விடுதலைப்
போராட்ட வடிவத்தை
சர்வதேசப்பயங்கரவாதமாய்
அடையாளப் படுத்திவிடக்கூடிய
ஆபத்தைக் கொண்டது.

இருந்தும்கூட
விடுதலைப் புலிகள்
அந்த முடிவைத்
துணிந்து எடுத்தனர்.

எடுத்தது மட்டுமன்றி
எல்லோரும் அஞ்சிய
இத்தகைய நெருக்கடியை
அவர்கள்
எதிர்கொண்டு சமாளித்தனர்.

சமாளித்தது மட்டுமன்றி
மீண்டும் தமமை
அசைக்க முடியாத தலைமையாய்
நிலைநிறுத்திக் கொண்டனர்.

இன்று,
உலகெங்கும் அவர்கள்
கிளைகள் பரப்பி
மிகத் திறமையாகச்
செயற்பட முடிவதுடன்
இந்தியாவிற்கூட
இயங்கிக் கொண்டு,
தமக்கு ஆதரவான
குரல்களை அங்கே
ஒலிக்கச் செய்ய
அவர்களால் முடிகிறது.

இது,
இராணுவ ரீதியில் மட்டுமல்ல,
அரசியல் ரீதியிலும்
எத்தகைய பாதகமான
சூழ்நிலையையும்கூட
வெற்றி கொள்ளக்கூடிய
அவர்களின் வல்லமையை
எடுத்துக் காட்டுகிறது.

அதேவேளை, புலிகள்
விளைவுகளைக் கருதி
நகர்வுகளில் பின்னிற்பதில்லை.
நகர்வுகளை
மேற்கொண்டுகொண்டே
விளைவுகளை முகம் கொடுப்பதே
அவர்களின் பாணி.

ராஜீவ் காந்தி
படுகொலைத் திட்டத்திலும்
அவ்வாறே செயற்பட்டார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை
ராஜீவ் மீண்டும்
பதவிக்கு வந்தால்,

இலங்கை அரசாங்கத்தோடு
இணக்கம் கண்டு
இந்தியப் படைகளை
வெளியேற்றிய
ராஜதந்திரம்
கேள்விக்குள்ளாகிவிடும்.

அந்த ஆபத்து
ஏற்படுவதற்கு முன்னால்
தாங்கள் முந்திக்கொள்ளவேண்டிய
அவசியம் இருந்தது.

அதனால் அவர்களுக்கு
ராஜீவைக் கொலை செய்வது
தவிர்க்க முடியாததாமிற்று.

அத்தகைய
பாரதூரமான விடயத்தை
செயற்படுத்துவதற்கான
முடிவை எடுத்தாலும்
அதன் பழி
தம்மீது விழாதிருக்க
எச்சரிக்கையாகவே
திட்டமிட்டார்கள்.

ராஜீவ் காந்தியுடனேயே
பேச்சு வார்த்தையும் நடத்தினர்.
விடுதலைப் புலிகளின்
முக்கிய உறுப்பினரான
பேபி சுப்பிரமணியம்
ராஜீவ் காந்தியை
நேரடியாக சந்தித்துப்
பேச்சுவார்த்தை
நடத்தினர்.
இதனால் தம்மிடையே
மீண்டும் ஒரு
சுமுக உறவு
ஏற்பட்டுள்ளதுபோன்ற
வெளித் தோற்றத்தையும்
ஏற்படுத்தினார்.

இதேவேளை,
தேர்தல் போட்டியின்
உச்சக்கட்டச்
சூடு பிடித்திருந்த
தக்கதோர் தருணத்தை
அவர்கள் தேர்ந்தெடுத்தனர்.
இதிலே அவர்கள்
இரண்டு அனுகூலங்கள்
இருக்கக் கண்டனர்.

ஒன்று,
ராஜீவ் காந்தி
எப்படியும் தனது
வெற்றியை உறுதிப்படுத்த
பகிரங்கப் பிரசாரத்துக்கு
முன்வர வேண்டியிருந்தது.
இதன் மூலம்
தங்கள் காரியத்தை
சுலபமாகவும்,
யாரென்று தெரியாமலும்
மேற்கொள்ளவும்
வசதியாகத்
தப்பிச் செல்லவும்
முடியுமாயிருந்தது.

இன்னொன்று,
இந்தச் செயலைச்
செய்திருக்கக்கூடியதாக
பல தரப்பினர்மீது
பழியைத் திருப்பிவிட
வாய்ப்பாகவும் இருந்தது.

தேர்தல் தருணத்தில்
ஒருவரை ஒருவர்
வீழ்த்த முனைந்த
பல்வேறு தரப்பினர்
மிகுந்த ஆவேசத்துடன்
ஏட்டிக்குப் போட்டியாகச்
செயற்பட்டு வந்தனர்.



அதனால்,
ராஜீவ் காந்திக்குத்
தேர்தல் எதிரிகளே
பலர் இருந்தனர்.
இந்தத் தருணத்தில்தான்
இதுவரை கால
காங்கிரசின் செல்வாக்கை
மீறிக் கொண்டு
இந்துத் தீவிரவாதம்
இந்திய அரசியலில்
செல்வாக்குச் செலுத்த
விளைந்திருந்தது.

இதே போன்ற ஒரு
இந்துத் தீவிரவாத
உணர்ச்சிக் கொந்தளிப்புத்தான்
மகாத்மா காந்தியையும்
பலிகொண்டிருந்தது.
எனவே இக் கொலையின்
சூத்திர தாரிகள்
இவர்களாயிருக்கலாமென்ற
வலுவான சந்தேகம்
அவர்கள் மீது
விழுவதற்கும்
வாய்ப்பிருந்தது.

அதேவேளை
இந்தியாவில்
உரிமை கோரி
வன்முறைப் போராட்டம்
நடத்துகின்ற
பல்வேறு சக்திகளும்
இருக்கத்தான் செய்கின்றன.

அவர்களைப் பொறுத்தவரை
இந்தியாவின் தலைமையை
ஏற்கக் கூடிய
இத்தகைய ஒரு தலைவரைத்
தீர்த்துக் கட்டுவது
மிகப்பெரும் சாதனை.

ராஜீவின் அன்னையான
இந்தியப் பிரதமர்
இந்திரா காந்தியும்
அவரது பாதுகாவலர்களாக
ஊடுருவியிருந்த
பிரிவினைப் போராட்டம்

**சத்தியன்**

நடத்தி வரும்
சீக்கியத் தீவிரவாதிகளாலேயே
சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர்கள் மட்டுமன்றி
காஷ்மீர், மணிப்பூர்,
நாகலாந்து, அஸ்ஸாம்
போன்ற பகுதிகளின்
பிரிவினைப் போராளிகளுக்கும்
ராஜீவ்மீது
குறியிருந்திருக்கலாம்.

அத்தோடு,
இந்தியாவில் ஆயுதப்புரட்சி
நடத்தி வருகின்ற
கம்யூனிஸ்ட் தீவிரவாதிகளான
'நக்ஸலைட்'டுக்களும்
இதனை நடத்திமிருக்கலாமென்ற
சந்தேகம் எழ வாய்ப்பிருந்தது.

அது மட்டுமன்றி
இந்தியாவின்
பரம எதிரியான
பாகிஸ்தானின் சதி முயற்சியா,
என்ற ஒரு
சந்தேகத்துக்கும்
வலுவான களம்
அப்போதிருந்தது.

இந்தியாவின்
ஸ்திரத் தன்மையைக்
குலைக்கும் ஆர்வம்
அமெரிக்காவின் சி.ஐ.ஏ.போன்ற
உளவு ஸ்தாபனங்களுக்கும்
இருப்பதற்கான
வாய்ப்பும் இருந்தது.

இத்தகைய
பல்வேறு ஊகங்கள்
இந்தக் கொலையில்
எழக்கூடியதால்,
விடுதலைப் புலிகள்தான்
காரணமென்று
ஒரேயடியாகக்
கூறிவிட முடியாதபடி
செய்து விடக்கூடிய
சூழ்நிலை வாய்ப்பை
புலிகள் கொண்டிருந்தனர்.

அப்படியே
புலிகள்தான் காரணமென
எவராவது கூறினாலும்
அதுவும்கூட
மற்ற சாத்தியக்கூறுகளுடன்
சேர்த்துப் பார்க்கக்கூடிய
வெறும் ஊகமாக
மட்டுமே அமைந்திருக்கும்.
இதனை விடுதலைப் புலிகள்
மிக இலகுவாக
நிராகரித்து விடலாம்.

எனவேதான்
விடுதலைப் புலிகள்
இத் தருணத்தைத்
தேர்ந்தெடுத்திருந்தனர்.

ஆனால் எதிர்பாராத விதமாக
சிறியதொரு தவறால்
புலிகள்தான் காரணமென
நிரூபணமாமிற்று.
குற்றவாளிகளும்
மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.
முக்கிய சூத்திரதாரிகள்
தற்கொலை செய்து கொண்டனர்.

அந்தத் தற்கொலைகளானது,
இதிலேற்பட்ட தோல்வியிலும்கூட
அவர்களுக்கு ஒரு
வெற்றியாய் அமைந்தது.

*எப்படியென்பதை
அடுத்த இதழில் பார்ப்போம்.*

*(இன்னும் நகரும்)*

---

## அண்டை மண்டலத்தில்....

முன்னாள் சட்டப்பேரவைத்தலைவர் சேடப்பட்டி முத்தையாவிற்கு வருவாய்க்கு அதிகமாக சொத்துச் சேர்ந்த வழக்கில் 25 மாத கால கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டாயிற்று. அதற்கும் முன்னால், முன்னாள் அமைச்சர் நாகூர் மீரானுக்கும், முன்னாள் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மல்லிகாவிற்கும் கூட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. முன்னாள் முதலைமைச்சர் ஜெயலலிதாவிற்கோ- சட்ட வரம்புகளை மீறி கொடைக்கானல் மலைவாசஸ்தலத்தில் ஓர் அடுக்குமாடி ஒட்டல் கட்ட அனுமதிகொடுத்தது பற்றிய வழக்கில் ஓராண்டு சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டது.

இவர்களில் ஒருவர் கூட கம்பி எண்ணப் போவதில்லை, இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்கு, ஏன் அப்படி? எல்லோரும் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கிறார்கள். அங்கே தீர்ப்பு வரும் வரை அவர்களுக்கு சிறப்பு நீதிமன்றங்களில் விதிக்கப்பட்ட தண்டனைகள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும். மேல்முறையீட்டு மனுக்களை உயர்நீதிமன்றம் பைசல் செய்ய மூன்று, நான்காண்டுகளென்ன, அதற்கும் மேல் கூட ஆகும். அதற்கப்புறம் இருக்கவேயிருக்கிறது உச்சநீதிமன்றம். அங்கோ தேங்கிக்கிடக்கும் வழக்குகளின் எண்ணிக்கை ஏராளம், ஏராளம். இடையிலோ தேர்தல்கள் வரும். அடுத்த ஆண்டே வந்துவிடுமே, அதிலே அஇஅதிமுக வென்று ஆட்சி அமைத்து விட்டால், வழக்காவது, வெங்காயமாவது!

(வெங்காயம் என்ற சொல்லை திராவிட இயக்கத் தந்தை பெரியார் அடிக்கடி பயன்படுத்துவார். எதுவும் நடக்கப்போவதில்லை அல்லது சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஆழ்ந்து சிந்திக்க ஒன்றுமில்லை, எல்லாம் ஏமாற்று வேலை என்ற பொருளில்) ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஜெயலலிதா, மற்றும் அவரது சகாக்களின் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவென 1997ல் திமுக அரசு மூன்று தனி நீதிமன்றங்களை அமைத்தது. மற்ற பொது நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்தால் விசாரணை முடிய ஆண்டுக்கணக்கில் ஆகுமே! ஆனால் பாருங்கள் விஷயம் இழுத்துக்

## தனிநீதிமன்றங்கள் ஜெயலலிதாவை அரசியலிலிருந்து விரட்டுமா?

கொண்டேபோகிறது. இன்னொரு சுவையான அம்சமும் அடங்கியிருக்கிறது, இந்த விவகாரத்தில். முன்னாள் எம்.எல்.ஏ.(சட்டமன்ற உறுப்பினர்) மல்லிகா இரண்டு கோடி ரூபாய்க்கும் அதிகமாக சொத்து சேர்த்துவிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு ஏழாண்டு தண்டனையும் விதிக்கப்படடிருக்கிறது. ஆனால் அவர் அந்த அளவு சொத்தை எப்படி வாங்கிக்குவிக்க முடிந்தது? அவர் முன்னாள் அமைச்சர் கண்ணப்பனுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது பலரும் அறிந்த ரகசியம். நெருக்கமானவர் இரண்டு கோடி யென்றால், அமைச்சர் எவ்வளவு சேர்த்திருக்க வேண்டும்? ஆனால் அவர் மீது சொத்து வழக்கு ஏதும் இல்லை. இதன் மர்மம் என்ன என்பதை ஊகிப்பது கடினமாக் இருக்காதே வாசகர்களுக்கு. ஊழலை எதிர்த்து ஒன்றும் கருணாநிதி போர் தொடுத்துவிடவில்லை. அவரது கடந்தகால வரலாறு மட்டுமல்ல, இன்றைய நிகழ்வுகளும்-ஊழலில் ஒரு கட்சிக்கு இன்னொன்று சற்றும் சளைத்ததில்லை என்பதையே நிரூபிக்கின்றன.

### கலைஞர் காணும் கனவு நனவாகுமா?

அவருடைய ஒரே குறிக்கோள் ஜெயலலிதாவை அசிங்கப்படுத்தி அரசியலிலிருந்து அப்புறப்படுத்துவதுதான். ஒரு முறை ஊழல் தடுப்புச்சட்டத்தின் கீழ் ஒருவர் இரண்டாண்டுகளுக்கும் மேல் சிறைத்தண்டனை பெற்றுவிட்டால், பின்னர் ஆறாண்டுகளுக்கு அவர்



எந்தத்தேர்தலிலும் நிற்கமுடியாது, தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டாலும் கூட.

1996 தேர்தல் ஜெயலலிதா படுதோல்வியடைந்தாலும் அவர் மக்கள் மத்தியில் கவர்ச்சி மிக்க தலைவராகவே விளங்குவார், எந்நேரமும் மறுபடி தேர்தலில் வென்றுவிடக்கூடும் என்பதை நன்குணர்ந்தே கருணாநிதி தனிநீதி மன்ற உத்தியை மேற்கொண்டார். இதே போல எம்.ஜி.ஆர் செய்திருந்தால் கருணாநிதி என்றோ துண்டைக்காணோம் துணியைக்காணோமென்று ஓடியிருப்பார். அவர் நல்ல காலம்- அதெல்லாம் எம்.ஜி.ஆருக்குத் தோன்றவில்லை.

சர்க்காரியா கமிஷன் என்ற ஒன்றை இந்திரா காந்தி நியமிக்க, அது கருணாநிதி சம்பந்தப்பட்ட எத்தனை ஊழல்களை அம்பலப்படுத்தியது? 1980ல் இந்திரா காங்கிரசுடன் கருணாநிதிகூட்டு வைத்தார், கமிஷன் முடக்கப்பட்டது, வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன, கருணாநிதி தப்பினார்.

ஜெயலலிதாவிற்கு எதிராக நீதிமன்றங்கள் அமைத்தது தவறு என்பதல்ல வாதம். இந்தியாவில் எந்த அரசியல்வாதி லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக சிறைத்தண்டனை பெற்றிருக்கிறார்? அந்த நோக்கில் யாராவது ஒருவருக்குக்காவது தண்டனை கிடைப்பது நல்லதுதான், அதுவும் ஜெயலலிதா ஆடிய ஆட்டத்திற்கு, ஏன் இன்னமும் ஆடுவதற்கு, யாராவது ஒருவர் அவருக்கு பாடம் புகட்டவேண்டியது அவசியம்தான். அதேநேரம் கருணாநிதியின் நோக்கமென்ன, அவரது யோக்கியதை என்ன என்பதையும் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும். அது ஒரு புறமிருக்க, சட்டத்தில் உள்ள பல்வேறு விதிகளைப் பயன்படுத்தி, தேர்ந்த வழக்கறிஞர்களைக் கொண்டு எப்படியெல்லாம் ஜெயலலிதா எல்லோருக்கும் பெப்பே சொல்லமுடிகிறது பாருங்கள்!

சாணக்கியக்கிழம் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் கூட லஞ்சம் கொடுத்தே எம்.பிக்களின் ஆதரவைப் பெற்று ஐந்தாண்டுகள் ஜாம் ஜாமென்று ஆட்சி நடத்தினார். அவர்மீது கூடத்தான் வழக்கு நடக்கிறது. ஒன்றும் குடி முழுகிப்போய்விடவில்லையே. ஜெயலலிதாபோல அவரும் சிறப்புப் பாதுகாப்புப் படையினர் புடைசூழ பவனி வந்துகொண்டிருக்கிறார். அப்படியிருக்கிறது இந்தியாவில் நீதித்துறையின் லட்சணம்.

அது போகட்டும், ஜெயலலிதா மீதான வழக்குகளின் இன்றைய நிலை என்ன? ஒரு வழக்கில் ஓராண்டு தண்டனை பெற்று விட்டார். ஆனால் அது போதாது தேர்தலில் நிற்கும் தகுதியை இழக்க.

டான்ஸி எனப்படும் அரசு நிறுவனம் ஒன்றின் நிலங்களை அடிமாட்டுவிலைக்கு ஜெயலலிதா மற்றும் சசிகலாவிற்கு சொந்தமான நிறுவனங்களுக்கு விற்கவைத்தது தொடர்பான வழக்கு விசாரணை விரைவில் முடியக்கூடும். (அதில் எக்குதப்பாக ஜெயலலிதா மாட்டிக்கொண்டிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது)

**கானகன்**

அதே போல ஊராட்சிமன்றங்களுக்கு கலர் டி.வி. வாங்கியதில் ஊழல் என்றொரு வழக்கு, அதிலும் ஒரு சில மாதங்களில் முடிவு தெரியும். எல்லாவற்றையும் விட கருணாநிதி மலைபோல நம்பியிருப்பது அளவுக்கதிகமாக சொத்து சேர்த்த வழக்குதான். 66 கோடி ரூபாய் ஜெயலலிதா, சசிகலா மற்றும் பின்னவரின் குடும்பத்தார் கொள்ளையடித்து விட்டதாக வழக்கு. போதுமான ஆதாரங்களிருக்கின்றன. ஆனால் பைசலாக இன்னும் ஓராண்டாகலாம். ஏதாவது ஒரு வழக்கிலாவது ஜெயலலிதாவிற்கு இரண்டாண்டு தண்டனை கிடைத்து, அவர் அடுத்த வருட சட்டமன்ற தேர்தல்களில் போட்டியிட முடியாமல் போகக் கூடாதா என்று ஏங்கி வருகிறார் கருணாநிதி.

## அலசுவது - இராஜதந்திரி

# நோர்வேயின் மாற்றமில்லாத வெளிநாட்டுக் கொள்கை

## லியாம் பொக்ஸ் அறிவுரை உயிர்பெறும் அறிகுறி

'உப்பு விற்கப் போனால் மழை வருகின்றது,' 'சாண் ஏற முழஞ்சறுக்கி விடுகின்றது' என்று ஏதாவது முயற்சிகளில் இறங்கும் போது குறுக்கீடுகள் ஏற்படுகையில் குறிப்பிடப்படுவதுண்டு.

இலங்கை அரசியல் நிலபரத்தில்கூட 'உப்பு விற்க முயற்சிக்கையில் மழை பெய்யும்' அறிகுறி தோன்றிய நிலையே கடந்த வாரம் ஏற்பட்டிருந்தது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு.நெட் வெல்லபெக் இலங்கை வந்து இனப்பிரச்சனை தீர்வு சம்பந்தமான அணுகுமுறைகளை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டுச் சென்றிருந்தார்.

இதனையடுத்து ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியும், எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் கடந்த வாரம் சந்தித்திருந்தன.

இந்த இரு பிரதான கட்சிகளின் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பு அரசியல் முக்கியத்துவம்மிக்கதொன்றாகவே கருதப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையின் சிக்கலான அரசியல் சமாச்சாரங்களைப் பொறுத்தவரை ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே சுய நலப்போக்கே இருந்து வந்தது.

இனப்பிரச்சனை விவகாரத்தில்கூட இருதரப்புமே போதியளவு கருத்தொருமிப்பைக் கொண்டிருக்காது, தமது அரசியல் லாபங்களையே முதன்மைப்படுத்தியிருந்தன. இதன் காரணமாகவே இன்று இனப்பிரச்சனை ஒரு பூதாகரமான நிலையை எட்டியுள்ளதுடன், இடையறாத இரத்தக்களரியும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இனப்பிரச்சனை ஒரு பாரிய பிரச்சனை என்பதையும் இதனைத் தனித்து நின்று தீர்க்க முடியாது என்பதையும் இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் உணர்ந்துள்ளன.

இதன் விளைவாகவே தம்மிடையேயான 'வரட்டுக் கௌரவத்தை' ஓரந்தள்ளிவிட்டு அரசியலமைப்புச் சீர்திருத்தம், இனப்பிரச்சனைத் தீர்வு- அதில் வெளிநாட்டு மத்தியஸ்த்தம் போன்ற விடயங்களை ஒன்று கூடி ஆராய ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் முன்வந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஆயினும் இவ்விரு பிரதான கட்சிகளும் தம்மிடையே காத்திரமான முறையில் புரிந்துணர்வைக் கட்டி வளர்த்து பிரச்சனைகளை அணுக முன்வருவார்களா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியதாக இருக்கின்றது.

இலங்கையில் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே நிகழ்ந்த சந்திப்பையடுத்து இனப் பிரச்சனைத் தீர்வு குறித்த முயற்சிகள்கூட உத்வேகம் கொள்ளும் என்றே எதிர்பார்க்க முடிந்தது.

ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையே இடம்பெற்ற இரு மணி நேரச் சந்திப்பின்போது ஆராயப்பட்ட விடயங்களில் நோர்வே வெளிநாட்டமைச்சர் திரு.நெட் வெல்லபெக்கின் மத்தியஸ்தத்துடனான இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் நோர்வேயில் திரு.நெட் வெல்லபெக் வெளிவிவகார அமைச்சராக இருந்த அரசாங்கம் பதவி கவிழ்ந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

அந்நாட்டில் சுற்றுச் சூழல் தொடர்பாகப் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பொன்றிலேயே திரு.நெட் வெல்லபெக் அங்கம் வகித்த அரசாங்கம் பதவியிழந்துள்ளது.

நோர்வேயில் இவ்வாறு அரசியல் நெருக்கடி தோன்றியுள்ளதையடுத்தே, இனப்பிரச்சனைத் தீர்வு சம்பந்தமாக நோர்வே வெளிநாட்டமைச்சராக இருந்த திரு.நெட் வெல்லபெக் எவ்வாறு இலங்கைக்கு உதவப் போகிறார், என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

எனவே இந்த நோர்வே நெருக்கடியே இலங்கையைப் பொறுத்தவரை உப்பு விற்க முற்பட்டபோது மழை தோன்றிய நிலையை உருவாக்கி உள்ளதையும் அறிய முடிகின்றது.


வில்லியம் ஹெய்க்

நோர்வேயின் தற்போதைய அரசாங்கப்பதவி கவிழ்ந்துள்ள போதிலும் அதன் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை எதுவித பாரிய மாற்றங்களும் ஏற்பட்டு விடாது என்றே இலங்கையில் உள்ள நோர்வே இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரைகூட நோர்வேயினால் முன்வைக்கப்பட்ட சமரச முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பதையே அறிய முடிகின்றது.

நோர்வே அரசாங்கம் சிக்கலான அரசியல் பிரச்சனை காரணமாகவோ அல்லது அதன் வெளிநாட்டுக் கொள்கை காரணமாகவோ பதவி கவிழ்ந்துவிடவில்லை.

சுற்றுச் சூழல் குறித்து ஐரோப்பிய, மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகள் பலவும் தற்போது மிக முக்கியத்துவம் வழங்கி வருகின்றன. இந்நிலையில் திரு.நெட் வெல்லபெக் அங்கம் வகித்த நோர்வே அரசு பதவி கவிழ்வதற்கு சுற்றுச் சூழல் சம்பந்தப்பட்ட ஒரு சர்ச்சையே காரணமாக இருந்துள்ளது.

இதுபோன்ற ஒரு சர்ச்சை இலங்கையைப் பொறுத்தவரை முக்கியமற்றதொன்றாகும். ஆனால் நோர்வேயில் மேற்படி சர்ச்சை சம்பந்தமான வாக்கெடுப்பில் அரசாங்கம் தோல்வியுற்றுள்ளமை, அந்நாட்டில் ஜனநாயகம் எவ்வளவு தூரம் உயிர்த்துடிப்புடையதாகவும், அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் இருக்கின்றதென்பதையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

இதே சமயம் இலங்கையில் பாதுகாப்புத் துறை உட்பட முக்கிய துறைகள் பலவற்றிலும் ஏராளமான சிக்கல்கள், மற்றும், அதிகாரத்துஷ்பிரயோகங்கள், நிர்வாகச் சீர்கேடுகள் இருக்கின்றதென அடிக்கடி சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றபோதிலும், ஆட்சியதிகாரங்களில் இருப்போர் மனச்சாட்சிக்கு மதிப்பளிப்பதைவிடுத்து தமது பதவிகளைத் தப்ப வைப்பதில் விழிப்பாக இருப்பதையே காணக்கூடியதாகவும் இருக்கின்றது.

எது எப்படியிருந்தபோதிலும், நோர்வே எமது பிரச்சனையைத் தீர்ப்பதில் தொடர்ந்து ஒத்துழைக்குமா? என்ற கேள்விக்கு நோர்வே தூதரக மற்றும் இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் சாதகமானபதிலே கிடைத்துள்ளது.

இலங்கைப் பிரச்சனையில் தலையிட்டுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் நெட் வெல்லபெக், நோர்வே அரசில் அங்கம் வகித்தவரான போதிலும், அவரது தனிப்பட்ட சாமர்த்தியமே ஏற்கனவே அவர் கையாண்ட பிரச்சனைகளைத் தீர்க்க வழியமைத்திருந்தது.

ஆகவே நோர்வேயில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் திரு.நெட் வெல்லபெக் இலங்கை விவகாரத்தில் தொடர்ந்து ஒத்துழைப்பார் என்றே எதிர்பார்க்க முடிகின்றது.

அத்துடன் நோர்வேயில் எந்தவொரு அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் அந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில்- குறிப்பாக அந்நாடு கையாளுகின்ற வெளிநாட்டு விடயங்களில் மாற்றங்கள் இருக்காதென்றே அறிய முடிகின்றது.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு, எதிர்காலத்தில் இரு தரப்புக்குமிடையே கூடுதல் புரிந்துணர்வை ஏற்படுத்தும் பட்சத்திலேயே நாட்டின் பிரதான பிரச்சனைகளை ஆக்கபூர்வமாகத் தீர்க்கும் சூழ்நிலைகள் உருவாகும் என எதிர்பார்க்க முடியும்.

சந்திரிக்கா-ரணில் சந்திப்பு நிகழ்ந்த வேளையிலேயே பிரிட்டிஷ் எதிர்க் கட்சித் தலைவர் திரு.வில்லியம் ஹெய்க் கொழும்பு வந்திருந்தார். 39 வயதான திரு.வில்லியம் ஹெய்க், சர்வதேச ஜனநாயக யூனியன் என்ற அமைப்பின் மகாநாடொன்றின் பொருட்டே கொழும்பு வந்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி இந்த சர்வதேச ஜனநாயக யூனியனில் அங்கம் வகிக்கின்றதென்பது குறிப்பிடத்தக்கது. எனவே திரு.ஹெய்க் பிரிட்டனின் எதிர்க் கட்சித் தலைவர் என்ற ரீதியில் இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் திரு.ரணில் விக்கிரமசிங்கவின் விருந்தாளியாகவே கொழும்பு வந்திருந்தார்.

திரு.வில்லியம் ஹெய்க் இலங்கையின் தற்போதைய பிரச்சனை குறித்தும் தமது கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிட்டிருந்தார்.

அப்போது அவர் இலங்கையின் இனப்பிரச்சனை போன்ற முக்கிய பிரச்சனையைக் கையாளும்போது, ஆளுங்கட்சிக்கும், எதிர்க் கட்சிக்குமிடையே சொந்த அரசியல் நலன்களை முதன்மைப்படுத்தாத அணுகுமுறை அவசியம் என்று வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையின் இனப்பிரச்சனை சம்பந்தப்பட்ட அரசியலைப் பொறுத்தவரை திரு.வில்லியம் ஹெய்க் கூறியவை காலமறிந்து தெரிவிக்கப்பட்டவையாகவே இருக்கின்றன.

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிக்கா தமது முதலாவது பதவிக்காலத்தை ஆரம்பித்திருந்த சமயத்தில் பிரிட்டனில் பிரதமர் ஜோன் மேஜர் தலைமையிலான கன்சர்வேட்டிவ் அரசாங்கமே ஆட்சியிலிருந்தது.

அச்சமயம் இலங்கைக்கு கன்சர்வேட்டிவ் ஆட்சியில் அங்கம் வகித்த திரு.லியாம் பொக்ஸ் கொழும்பு வந்திருந்தார். இலங்கை இனப் பிரச்சனையை அன்று அறிந்து கொண்ட திரு.லியாம் பொக்ஸ் ஆளுங் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே உடன்பாடொன்று இருக்க வேண்டியதன் அவசியத்தை



வலியுறுத்தி தமது பெயரிலேயே லியாம் பொக்ஸ் உடன்படிக்கை என்ற ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தியிருந்தார்.

ஆனால் திரு.லியாம் பொக்ஸின் ஏற்பாட்டை கடந்த வருடங்களில் ஆளுங்கட்சியோ அல்லது எதிர்க் கட்சியோ எவ்விதத்திலும் மதித்திருக்கவில்லை. இதன் காரணமாக இனப் பிரச்சனைத் தீர்வு முயற்சிகள் புறந்தள்ளப்பட்டதுடன், உள்நாட்டு யுத்தமும் மிகவும் மூர்க்கமடைந்திருந்தது.

தற்போது ஜனாதிபதி சந்திரிக்காவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் ஒருவரையொருவர் சந்தித்துள்ள தருணத்திலேயே திரு.லியாம் பொக்ஸின் கன்சர்வேட்டிவ் கட்சியின் இன்றைய தலைவரான வில்லியம் ஹெய்க் கொழும்பு வந்திருந்தார்.

திரு. வில்லியம் ஹெய்க் எதனையும் புதிதாகக் கூறவில்லை. தமது கட்சியைச் சேர்ந்த லியாம் பொக்ஸ் செய்துவிட்டுச் சென்ற உடன்படிக்கையையே திரு.ஹெய்க் ஞாபகமூட்டியிருந்தார். அந்த உடன்படிக்கையின் அடிப்படையில் பிரதான பிரச்சனையான இனப்பிரச்சனையை அணுகுவதே பயன் தருவதாக இருக்குமென்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் சந்திரிக்கா-ரணில் ஆகியோரது சந்திப்பை எடுத்து நோக்குகையில் லியாம் பொக்ஸின் அறிவுரை மீளவும் உயிர் பெற்றுள்ளதையும், அதற்கு மேலும் அழுத்தம் தருவதாகவே பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் வில்லியம் ஹெய்க் வெளியிட்ட கருத்துக்களும் அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இது இவ்வாறிருக்க, கொழும்பின் பொரளைப் பிரதேசம் தமிழ்ழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று தெரிவிக்கப்பட்ட ஆயுத பாணிகள் நடத்திய தாக்குதலில் பெரிதும் அல்லோல கல்லோலப்பட்டிருந்தது.

ஆயுதபாணிகளின் தாக்குதலில் சுமார் 21 பேர் வரை கொல்லப்பட்டதுடன் 50க்குமதிகமானோர் காயமடைந்தனர்.

பாராளுமன்றுக்குச் செல்லும் வழியில் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையையே இலக்கு வைத்தே ஆயுத பாணிகள் காத்திருந்ததையும், ஆனால் அவர்களது திட்டம் முறியடிக்கப்பட்டதையடுத்தே கண் மூடித்தனமான தாக்குதல்கள் இடம் பெற்றதையும் பொலிஸ் புலன் விசாரணைகள் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

அரசியல் கோதாவில் இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து ஆரோக்கியமான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ள தருணத்தில் தமிழ்ழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று கருதப் படுவோரால் நடத்தப்பட்ட 'பொரளைப் பகுதி தாக்குதல்', தீர்வு முயற்சிகளில் புலிகளின் அணுகுமுறை எப்படி இருக்குமென்ற கேள்வியை எழுப்புவதாகவும் காணப்படுகின்றது.

புலிகளைப் பொறுத்தவரை கொழும்பில் புதிதாக எதனையும் அவர்கள் செய்யவில்லை என்பதையே அறியமுடியும். ஏற்கனவே கடந்த வாரம் நிகழ்ந்த தாக்குதலை விட மோசமான தாக்குதல்கள் கொழும்பில் அவர்களால் நடத்தப்பட்டிருந்தன. கூடுதல் உயிரிழப்புக்கள்கூட ஏற்பட்டிருந்தன.

எனவே ஒரு புறம் இராணுவ ரீதியாகவும், மறு புறத்தே தமது அரசியல் நிலைப்பாட்டையும் கொண்டுள்ள புலிகளின் வழமையான தாக்குதல்களில் ஒன்றாகவே பொரளைச் சம்பவமும் விளங்கியிருந்ததை அவதானிக்க முடிகின்றது.

எந்தவொரு தீவிரவாத அமைப்பும் தனக்கு பக்கபலமாக இராணுவ நடவடிக்கைகளை, அதாவது தமது அரசியல் நிலைப்பாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க அவ்வப்போது தாக்குதல்களை மேற்கொள்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளன.

பிரிட்டனில்கூட வட அயர்லாந்துப் பிரச்சனையில் அரசியல் ரீதியாக பிரிட்டிஷ் அரசுக்கும், வட ஜரிஷ் குடியரசு இராணுவத்தினருக்குமிடையே பல உடன்பாடுகள் எட்டப் பட்டிருந்தன.

ஆயினும் வட அயர்லாந்து குடியரசு இராணுவத்தின் ஆயுதங்களைக் களைவது குறித்த விடயத்தில் தற்போது இரு தரப்புக்குமிடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.


இலங்கையில்கூட தமிழ்ழ விடுதலைப்புலிகள் தமது அரசியல் நிலைப்பாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் இராணுவ ரீதியான அணுகு முறைகளையே கையாண்டு வருகின்றனர்.

எனவே யுத்த நிறுத்தம் கொண்டுவரப் படாத நிலையிலும், அரசியல் அணுகுமுறைகள் உத்வேகம் பெறாத நிலையிலும், புலிகளும் தமது இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் என்பதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் இனப்பிரச்சனை உட்பட நாட்டின் பிரதான பிரச்சனைகளை தீர்க்கும் விதத்தில் கருத்தொருமிப்பை ஏற்படுத்தும் விதத்தில் முன்வைத்த முயற்சியை, பின் வைக்காது தொடர்ந்து முன்னேற வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

---

## அதிரடி அய்யாத்துரை



***உயரம், நிறம், பெயர்*** அனைத்திலும் ரஸல் ஆர்னல்ட், மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் ஒருவரைப் போல இருக்கின்றார். ஆனால் அவர் ஒரு தமிழ் மகன். யாழ்ப்பாணமே பூர்வீகம். வளர்ப்பு, கல்வி, விளையாட்டு என்பவையே கொழும்பு. ஒளிமயமான எதிர்காலம் அவர் ஆட்டத்தில் தெரிகிறது.

***பெண்களைப் போல*** பொடிப்பயல்கள் தலைமயிரை நீளமாக வளர்த்து சீவி, முடித்து நிற்கினம். பேன், அழுக்கில்லாமல் திரவியங்கள் போட்டு மயிரைக் பாதுகாத்தும் வருகினமாம். சில பொடியளுக்கு முடி அலங்காரம் பெண்களை விட அழகாகவும் இருக்கிறதாகவும் சொல்கிறார்கள், 'மாதொருபாகன்' என்று பொடிப் பிள்ளைகள் இப்ப அர்த்தம் கொடுக்கினம் பொலிருக்குது.

***யாழ்ப்பாணம், கொழும்பு*** விமானச்சேவை கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலைத்திலிருந்து இப்ப நடக்குது! வெளிநாடொன்றுக்குப் போறது போல எங்கட ஆட்கள் போய்வருகினம் விமானநிலைய 'டியூட்டி ஃபிறீ'ப்பக்கமாகவும் போய்வரவிட்டால் இன்னும் நல்லாக இருக்கும் என்றும் சிலர் பேசுகினம்.

***சிவராத்தியன்று*** திருக்கேதீஸ்வரத்தில் ஆமிக்காரர் காவலுக்கு மட்டும் நிற்கவில்லை, கடைபோட்டு கற்பூரமும் விற்றவையாம். திருப்பணியில் இப்படி நாட்டமிருந்தால் பிரச்சனை வெகுவாகவே குறைஞ்சு போய்விடும்.

***சர்வதேச மகளிர் தினம்*** கொண்டாடியிருந்தார்கள். பெண்களை அடுக்களைக்குள் ஆண் ஆதிக்கம் வைத்திருப்பதாகக் கூச்சலும் போட்டார்கள். அடுக்களைச் சமாசாரத்தைப்பார்த்தால் அதில் கூட ஆண்கள் சளைத்தவர்களல்ல. தெருவோரத் தேநீர் கடையிலிருந்து ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் வரை அடுக்களையில் ஆண்களே சமையல்காரர்கள். உயிருக்கு ஆதாரமான உணவைச் சமைக்கும் உத்தமமான பணியை பெண்ணினம் 'தன் பின் புத்தியால்' தாழ்வாகப் பார்ப்பது விந்தையாகத் தானிருக்கிறது.

***'எரிகிற வீட்டில்*** பிடுங்கிறது லாபம்' என்று சொல்வார்கள். வடக்கு - கிழக்குப் பிரச்சினையை வைத்துச் சம்பாதிக்கவும் சில என்.ஜி. ஓக்கள் நல்லாய்த் தெரிந்து வைத்திருக்கினம். பிரச்சினையால் பாதிக்கப்பட்ட சனங்களுக்கு கையில் ஒன்றும் கிடைக்குதில்லை. ஆனால் இந்த என்.ஜி.ஓ. காரர்களுக்கு கை நிறையுது.

***யாழ்ப்பாணத்தில்*** நிலக்கண்ணி வெடிகளை தோண்டி எடுக்கிற வேலை நடக்குது. யாழ்ப்பாணமண் ஏதோ ஒரு விதத்தில் வெடிகளுக்குப் பழக்கப்பட்டுத்தான் இருக்குது. முன்னர் எங்கட ஆட்கள் கிணறு தோண்ட மண்ணைக்கிண்டி டைனமைற் வெடிகளைப் புதைச்சினம். இப்ப சண்டை பிடிக்க கண்ணி வெடி. சிவ, சிவா காலஞ் செய்த கோலம்.

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 101


### கடந்தவாரம்

**கிறிஸ்மஸ் தினமான 1976ல் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் உகண்டா வானொலியில் ஒளிபரப்பப்படும்போது, கிறிஸ்தவத் தேவாலங்கள் மீது பழி சுமத்தும் வண்ணம் இராணுவ அதிகாரி ஒருவன் துவேஷமான வார்த்தைகளைப் பிரயோகித்தான். இதன் பின்னர் அமீனைக்கண்டு தமது ஆட்சேபணையைத் தெரிவிக்க முயற்சித்தனர். ஆனால் அது நடக்கவில்லை.**

**1977ம் ஆண்டு பெப்ரவரியில் ஆர்ச் பிஷப் லுவும் அவர்களுடைய இல்லமும் ஆலயமும் படையினரால் நள்ளிரவில் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் இடம் பெற்றது. கென்யா நாட்டின் எல்லைக்கருகே இருந்த மற்றுமோர் ஆயரின் இல்லமும் தேடுதலுக்குட்படுத்தப்பட்டு அவரும் கைது செய்யப்பட்டார். பல மணி நேரத்தின் பின் தவறு நடந்து விட்டதாகக் கூறி அவர் விடுவிக்கப்பட்டார்.**

**இனி...**

# இடி அமீன்



கிறிஸ்மஸ் தினத்தன்று இராணுவ அதிகாரி ஒருவர் கிறிஸ்தவ தேவாலயங்களையும் பாதிரிமாரையும் இழிவுபடுத்தும் முறையில் பேசியது உகண்டா வாழ் கிறிஸ்தவ மதங்களைச் சார்ந்த பலரையும் வேதனைக்குள்ளாக்கியது. இதனைத் தொடர்ந்து ஆர்ச் பிஷப் லுவும் அவர்களும் ஆயர் ஒங்கொம் அவர்களும் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்ட சம்பவமும் கிறிஸ்தவ மக்களுக்குச் சொல்ல முடியாத வேதனையைத் தந்தது.


ஆர்ச் பிஷப் லுவும் தனது தலைமையில் பணிபுரியும் பிராந்தியங்களுக்கான சகலரையும் தமது தேவாலயப் பணிமனைக்கு வந்து சேருமாறு அறிவித்தார். அங்கு அவர்கள் அனைவரும் கூடி ஆலோசனை நடத்தினர். இடி அமீனுடைய கிறிஸ்தவ மத எதிர்ப்பு தொடர்பான நடவடிக்கைகளைக் கண்டிக்குமுகமாக நெடியதொரு மகஜரைத் தயாரித்தனர்.

பெப்ரவாரி 10ம் திகதியிடப்பட்ட மகஜரில் 18 ஆயர்களும் உகண்டா, ருவாண்டா, புருண்டி மற்றும் போகோ- ஸாயர் ஆகிய இடங்களின் தலைவரான ஆர்ச் பிஷப் ஜனன் லுவும் அவர்களும் ஒப்பமிட்டிருந்தனர். உகண்டாவின் ஜனாதிபதி மேன்மை தங்கிய அல் ஹஜ் ஃபீல்ட் மார்ஷல் டாக்டர் இடி அமீன், உதவி ஜனாதிபதி மற்றும் உகண்டாவிலுள்ள ஏனைய கிறிஸ்தவமத பீடாதிபதிகளுக்கும் இம்மகஜரின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டன.

அமீனின் ஆட்சியின் அலங்கோலங்கள் யாவற்றையும் கண்டித்து இம்மகஜரில் எழுதப்பட்டிருந்தது. நாட்டில் சட்ட திட்டங்களுக்கு முரணான நடவடிக்கைகளில் ஆயுதப்படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டு வருவதாகவும், களவு, கொலை, போன்ற சம்பவங்கள் வகை தொகையற்று நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் நடைபெற்று வரும் கொடூரமான சம்பவங்களுக்கு மத்தியில் கிறிஸ்தவ மத பீடாதிபதிகள் இவ்வாறு துணிகரமாக மகஜரைத் தயாரித்து இடி அமீனுக்கே அனுப்பி வைத்திருந்தமை பலருக்கும் வியப்பை அளித்தது, அதுமட்டுமல்ல, இத்தகைய மகஜருக்கு முதல் கையொப்பமிட்டிருந்த ஆர்ச் பிஷப் ஜனன் லுவும் அவர்களுக்கு என்ன நடக்குமோ என்ற அச்சம் பரவலாயிற்று. இம்மகஜரின் பிரதிகள் ஏனைய பல நாடுகளுக்கும் போய்ச் சேர்ந்து விட்டன.

ஆர்ச் பிஷப் லுவும், அமீனுக்குப் பிடித்தமில்லாத அச்சோலி இனத்தவர். அச்சோலியைப் போல லாங்கி இனத்தவரையும் ஒபேடேயின் ஆதரவாளர்கள் என்று அமீன் கணக்கிட்டிருந்தான். 'இவர்கள் தனது ஆட்சிக்கு எதிராகச் சதி செய்பவர்கள்' என்று குற்றஞ்சாட்ட ஆரம்பித்தான். 'இவ்விரு இனத்தவர்களும் இஸ்ரேலின் தாசர்கள் என்பதனால் எண்டபே நடவடிக்கையில் இஸ்ரேல் அதிரடிப் படையினருக்கு ஒத்தாசை புரிந்தவர்கள்' என்றும் பழிசுமத்தினான்.



எரினயோ ஒரிமா மற்றும் சாள்ஸ் ஒபொத் ஒ.ஃபும்பி ஆகிய இருவரையும் சதிகாரர்கள் வரிசையில் ஆர்ச் பிஷப் லுவும் அவர்களுடன் பட்டியலில் அமீன் சேர்த்தான்.

தனது எதிரிகளை எவ்வாறு ஒழித்துக் கட்டுவது என்று தீவிரமாகத் திட்டமிட்டான்.

பெப்ரவரி 16ம் திகதியன்று பகல் 10.00 மணிக்கு நைல் ஹொட்டலில் அவசர அமைச்சரவைக் கூட்டம் ஒன்றுக்கு வரும்படி அமைச்சர்களுக்கு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது. அமைச்சர்கள் பலர் காலையிலேயே நைல் ஹொட்டலுக்குச் சென்று விட்டனர். அங்கு ஏனைய அமைச்சர்களுடன் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் தேவாலய பீடத் தலைவர்களும் வந்திருந்தனர். ஆர்ச் பிஷப் லுவும் அவர்களும், அவருக்குரிய ஆடை அணியுடன் காணப்பட்டார். தொலைக் காட்சிக் கமராக்களும் ஒலிவாங்கிகளும் அங்கு ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தன.

நடைபெறப்போவது அமைச்சரவைக் கூட்டமல்ல; அதைவிட விஷேடமான சம்பவம் ஏதோ நடைபெறப் போவதாக அமைச்சர்கள் கருதினர்.

ஹொட்டலின் முன்றிலில் புல் தரையில் உகண்டா நாட்டின் படை அணிகளின் பல பிரிவைச் சேர்ந்த படை வீரர்கள் 2000 பேர்வரை அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்புறமாக பல தரப்பட்ட போர்க்கருவிகள்- முற்றிலும் புதியவை- வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இயந்திரத் துப்பாக்கிகள், நவீனரகச் சுழல் துப்பாக்கிகள், எறிகுண்டுகள் ஆகியவை காணப்பட்டன.

இக்காட்சியைக் கண்ட பல அமைச்சர்கள் உண்மையில் பயந்தனர். என்ன தான் நடக்கப் போகிறதோ என்று தெரியாமல் திகைப்புடன் அடுத்து நடைபெறப் போகும் சம்பவம் என்னவாக இருக்குமோ என்ற தவிப்புடன் மூலைக்கு மூலை நின்று தங்கள் சகாக்களுடன் உரையாடிக் கொண்டிருந்தனர்.

பகல் 10.00 மணியாகியதும் ஹொட்டலின் முன்புறம், இராணுவ வீரர்களுக்கு முன்பாக போடப்பட்டிருந்த இருக்கைகளில் அமைச்சர்கள் இடம்பிடித்தனர். தேவாலயத் தலைவர்களும் வந்தமர்ந்தனர். பிறநாட்டுத் தூதர்களும் ஆசனங்களில் அமர்ந்தனர்.

காலை 10.00 மணி கழிந்து நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. ஆனால் அமீன் வரவேயில்லை. ஹொட்டலின் மேல்த்தளம் ஒன்றிலிருந்த வண்ணம் கீழே நடைபெறும் சம்பவங்களை அவதானித்துக் கொண்டிருந்தான். அவனுடைய அவதானிப்புக்கு- கீழே வைக்கப்பட்டிருந்த வீடியோ கமராக்களும் உதவி புரிந்தன.

பகல் 11.00 மணியானதும் கேணல் ஐசாக் மலயமுங்கு ஒலிவாங்கிக்கு முன் வந்து நின்று நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தான். "உகண்டா நாட்டின் அரசைக் கவிழ்ப்பதற்குப் பல தீய சக்திகள் திட்டமிட்டு வருகின்றன என்பதை நாம் அடிக்கடி மக்களுக்குச் சுட்டிக் காட்டி வந்திருக்கிறோம். தருணம் வரும் போது சதிகாரர்களை அம்பலப்படுத்துவோம் என்றும் கூறி வந்திருக்கிறோம். இதோ இப்போது அதற்கான சான்றுகளோடு முழு உண்மைகளையும் இப்போதே வெளிப்படுத்தப் போகிறோம்!" இவ்வாறு கேணல் மலயமுங்கு கூறி முடித்தான்.

அடுத்ததாக சதிகாரர்களால் அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலம் வாசிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயினால் வெளியிடப் பட்டதாகக் குறிப்பிடப்பட்ட அறிக்கையை, பொதுச் சேவைக்குழுத் தலைவரான அப்துல்லா அன்யுறு வாசித்தார். இவர் 60 வயதைக் கடந்தவர்-நோயாளி. கடமையிலிருந்து ஒய்வு பெற்று தமது கிராமத்தில் அமைதியாக வாழ்ந்து வந்தார். அவரை இழுத்து வந்து இவ்வறிக்கையைக் கொடுத்து வாசிக்க வைத்தனர்.

ஒபேடேயின் அறிக்கை என்று கூறப்பட்டது ஆர்ச் பிஷப்பும் ஏனைய ஆயர்களும் அமீனின் அராஜகம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் காணப்பட்ட வாக்கியங்களை அடியொற்றியே காணப்பட்டன.

உகண்டா மக்கள் அமீனின் ஆளுகையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு அல்லல் படுவதாகவும் கொலை, கொள்ளைகள் தாராளமாக நடைபெறுவதாகவும், நாட்டு நிலமை சகலவழிகளிலும் சீரழிந்து போய்விட்டதாகவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இது உண்மையில் ஒபேடேயின் அறிக்கையல்ல-வேண்டுமென்றே தயாரிக்கப்பட்டதொன்று. இவ்வறிக்கையை வாசித்தவருக்கு அருகில் இருந்த அமைச்சர்களே அவ்வறிக்கை அச்சிடப்பட்டிருந்த காகிதத்தை அவதானித்து, அக்காகிதம் அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் காகிதம் என்பதனைக் கண்டு கொண்டனர்.

ஏறத்தாழ ஒரு மணிநேரம் வரை வாசிக்கப்பட்ட அந்த அறிக்கையை வாசிக்கும் போது பொதுச் சேவைகள் ஆணையாளர் களைத்துப் போனார். அதில் காணப்படும் வாக்கியங்கள் பெரும்பாலும் பொய்யானவை என்று மனப்பூர்வமாகத் தெரிந்தமையினாலும் அவர் களைப்புற்றார். அவர் ஓர் இருக்கையில் அமர்ந்தவாறு வாசிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அவர் வார்த்தைகள் எதனையும் மாற்றி விடாமல்-வேறு எதையேனும் சேர்த்து வாசிக்காமலிருப்பதற்கு அவரின் அருகில் மலையமுங்கு நின்றிருந்தார்.


அறிக்கையின் இறுதியில் அர்ச் பிஷப் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. ஒபேடேயின் அமீன் ஆட்சியைக் கவிழ்க்கும் திட்டங்களுக்கு உதவுவதற்கு ஆர்ச் பிஷப் லுவும் இணங்கியிருப்பதாகவும், அவருக்கு போதுமான அளவு ஆயுதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையின் இறுதியில் கூறப்பட்டிருந்தது.

இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஆர்ச் பிஷப் லுவும் "இல்லை இல்லை... இது சுத்தப்பொய்!" என்று கத்தினார்.

(இடி தொடரும்)

**தருவது அழகன்**

## பொண்டிற்கு குட்பை



ஹொலிவுட் திரையுலகில் இப்போது பரபரப்பாகப் பேசப்படும் செய்தி, பியர்ஸ் புரோஸ்னன் இனி பொண்ட் படங்களில் நடிக்கமாட்டார் என்பதுதான்.

'கோல்டன் ஐ', 'டுமோரோ நெவர் டைஸ்', 'வேர்ல்ட் இஸ் நொட் இனஃப்' ஆகிய படங்களில் ஜேம்ஸ் பொண்ட் வேடத்தில் நடித்துள்ளார் 47 வயதான புரோஸ்னன்.

ஸீன் கொனரிக்குப் பின் பொண்ட் வேடங்களில் ரோஜர் மூர், ஜோர்ஜ் லொஸன்பை, டிமோடி டோல்டன் ஆகியோர் பொண்ட் வேடங்களில் நடித்தார்கள். எனினும் ஸீன் கொனரியைப் போல் மற்றவர்களால் சோபிக்க முடியவில்லை.

'கோல்டன் ஐ' படத்தில் புதிய ஜேம்ஸ் பொண்டாக அறிமுகமானார் புரோஸ்னன். ஸீன் கொனரிக்குக் கிடைத்த வரவேற்பு இந்தப்படம் மூலம் இவருக்கு கிடைத்தது.

கடைசியாக வந்திருக்கும் 'வோல்ட் இன் நொட் இனஃப்' படத்தை அடுத்து இன்னொரு பொண்ட் படத்தில் நடித்து விட்டு பொண்ட் படங்களுக்கு குட்பை சொல்லி விடப் போவதாக அண்மையில் பேட்டியொன்றில் கூறியுள்ளார் புரோஸ்னன்.

ஒரே மாதிரி நடித்து அலுத்து விட்டது என்பது புரோஸ்னனின் கருத்து. ஆனால் 50 வயதிற்குள் பொண்ட் படங்களில் நடிப்பதை நிறுத்துவாரேயானால் தன்னுடைய தொழிலில் பல நெருக்கடிகளை புரோஸ்னன் சந்திக்க நேரிடும் என அவரது நண்பர்கள் பத்திரிகையொன்றில் கூறியிருக்கிறார்கள்.

## ஆண்களுக்கு ஆபத்தான சட்டம்

ஆண்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கும் செய்தி இது.

அமெரிக்காவின் மிசிசிப்பி மாகாணத்தில் புதிதாக ஒரு சட்டம் அறிமுகத்தில் இருக்கிறது. இது விரைவில் அமுலாக்கப்படுவதாகவும் தெரிகிறது.

இது அதிர்ச்சியானது மட்டுமல்ல ஆபாத்தான சட்டமும் கூட மேலோங்கி 'அந்த' உறுப்பு ஆடையைக் குத்திட்டுக் கொண்டு தெரிந்தால் அவரைக் கைது செய்து ஒரு வருடசிறைவாசமும் 2 ஆயிரம் அமெரிக்க டொலர் (சுமார் 1 இலட்சத்து 46 ஆயிரம் ரூபா) அபராதமும் விதிக்கப்பட உள்ளதாம். இந்தச் சட்டம் அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்திலும் அமுலில் உள்ளதாம்.

## சீக்கியர்களால் உருவான தமிழ் வீரர்



இந்திய கிரிக்கெட்டில் வெங்கட்ராகவன், ஸ்ரீகாந்த் ஆகியோருக்குப் பின் தமிழ் நாட்டு வீரர்கள் அவ்வளவாகச் சோபிக்கவில்லை.

டபிள்யூ.வி.ராமன், சந்திரசேகர், சிவராமகிருஷ்ணன் என்று பலர் வந்தார்கள். வெல்லாமல் சென்று விட்டார்கள். ரொபின் சிங் தமிழ் நாட்டு வீரர்தான் என்றாலும் அவர் தமிழரல்ல.

இவர்களுக்குப் பின் தமிழ்நாட்டிலிருந்து இந்திய கிரிக்கெட் அணியில் சடகோபன் ரமேஷ், திருநாவுக்கரசு குமரன் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். கடைசியாக வந்திருக்கும் தமிழக வீரர் முரளி கார்த்திக்.

பிறப்பால் தமிழராக இருந்தாலும் கார்த்திக் வசிப்பது புதுடில்லியில் இந்த தமிழரை 4 சீக்கியர்கள்தான் சுழற்பந்து வீச்சாளராக உருவாக்கினார்கள். அவர்கள் குருசரண் சிங், மணீந்தர் சிங், எம்.பி.சிங், பியுன் சிங்.

## குழந்தை பெற வேண்டுகோள்

மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகிறது என்று இந்தியா, சீனா போன்ற நாடுகள்தான் கவலைப்பட்டுக் கொண்டே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை தீவிரமாக அமுல்படுத்தி வருகின்றன.

ஆனால் இத்தாலி நாட்டிலோ இதற்கு நேரெதிர். குழந்தைகளை அதிகம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அந்நாட்டுப் பிரதமரே கூறி வருகிறார்.

பிறப்பு விகிதம் அதிகம் இருந்தால்தான் நாட்டின் பொருளாதாரமும் முன்னேற்றப் பாதையில் செல்லும்.

எனவே இத்தாலியர்களை அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார் அந் நாட்டின் பிரதமர் மேசிமோடி அலிமா.

இத்தாலியில் தற்போதைய மக்கள் தொகை 5 கோடியே 70 இலட்சம். இப்படியே போனால் 2050ம் ஆண்டளவில் இந்த மக்கள் தொகை 4 கோடியாகக் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## திண்டாடுகிறார் இளவரசர்



இளவரசர் சார்ள்ஸின் மூத்த மகன் வில்லியம்ஸிற்கு இப்போது வயது 17 ஆகி விட்டது. இங்கிலாந்து நாட்டின் கவர்ச்சிகரமான ஆண்களில் ஒருவராகி விட்டார்.

கூடவே பார்ப்பதற்கு படு ஸ்மாட்டாகவும் இருக்கிறார். இதனால் பெண் தோழிகள் அதிகமாகி விட்டார்கள். தினமும் பார்ட்டி வகையறாக்கள் என ஊர் சுற்றி வருகிறார் வில்லியம்ஸ்.

கடந்த கிறிஸ்துமஸ் தினத்தில் பக்கிங்காம் அரண்மனையில் நடந்த விழாவில்கூட வில்லியம்ஸ் கலந்து கொள்ளவில்லை. அன்றுகூட நண்பர்களுடன் கிளம்பி விட்டார்.

வில்லியம்ஸின் இந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாது தந்தை சார்ள்ஸ் திண்டாடிக் கொண்டிருக்கிறார்.

## மறுபடியும் மாதுரி



நடிகைகள் மணந்து கொண்டால் அத்தோடு அவர்களது நடிப்பு வாழ்க்கை முடிந்து விடாது. திருமணம் செய்து சில காலம் நடிக்காமல் இருப்பார்கள். மறுபடி நடிக்க வந்து விடுவார்கள்.

சென்ற வருடம் அமெரிக்காவில் வசிக்கும் டாக்டர் ஸ்ரீராமை மணந்தார் இந்தி நடிகை மாதுரி டிக்ஷித்.

திருமணமான பின் ஒப்பந்தமான படங்களை நடித்துக் கொடுத்து விட்டு அமெரிக்காவுக்குக் கணவருடன் பறந்தார் மாதுரி. புது வருடத்தை கணவருடன் கொண்டாடிய மாதுரி மறுபடி மும்பைக்குத் திரும்பியிருக்கிறார்.

கணவர் அமெரிக்காவில் நோயாளர்களைக் கவனித்துக் கொண்டிருக்க, மாதுரி புதிய இந்திப் படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.

# தகவல் பெட்டி



## மலைக்க வைக்கும் விலை

பெண்கள் உடைக்குக் குத்தும் ஒரு வகை ஊசியின் பெயர் ப்ரூச். வண்ணத்துப் பூச்சி வடிவில் இருக்கும் இந்த ப்ரூச்சின் விலையைக் கேட்டால் மலைத்துப் போவீர்கள். அதிகமில்லை, வெறும் 26 ஆயிரம் டொலர். நம்நாட்டு மதிப்பில் சுமார் 19 இலட்சம் ரூபாய்.

முத்துக்களும், வைரங்களும் கொண்டு தங்கத்தால் இழைக்கப்பட்ட இந்த ப்ரூச் அண்மையில் ஜெனீவாவில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

## மெகா பொம்மை

ஜோனத்தன் ஸ்விப்ட் என்ற நாவலாசிரியர் எழுதிய நூல்களில் ஒன்று 'கலிவரின் பயணம்'. இதன் நாயகன் கலிவர், 'லில்லிபுட்' என்ற ஊரில் சித்திரக்குள்ளர்களால் நிலத்தில் கட்டி வைக்கப்படுகிறான்.

கலிவர் நிலத்தில் கட்டப்பட்டிருப்பது போன்று 149 அடியுள்ள பொம்மையை உருவாக்கி ஜப்பான் நாட்டில் உள்ள பூங்காவில் காட்சிக்கு வைத்திருந்தார்கள்.

இந்த மெகா பொம்மைக்குப் பக்கத்தில் சென்றால் கொசு அளவுக்குத்தான் தெரிவார்கள். இந்தப் பொம்மைக்குப் பக்கத்தில் காணப்படும் மேடையும் கதிரைகளும் எவ்வளவு சிறியதாகத் தோன்றுகின்றன என்று தெரிகிறதுதானே.



## மினிக்குறள்

'கடுகைத் துளைத்து உள்ளே கடல் நுழைத்தது போலே' என்று திருக்குறளின் பொருட் செறிவு பற்றிக் கூறுவார்கள்.

இப்போது திருக்குறளின் 1330 பாக்களையும் விளக்கவுரை, வண்ணப் படங்களுடன் 'மைக்ரோ' நூலாகத் தயாரித்துள்ளனர். தமிழகத்தின் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சக்திவேல், பாபு சாள்ஸ் என்ற இரு இளைஞர்கள். 2 சென்டி மீட்டர் நீளமும் 1.5 சென்டி மீட்டர் அகலமும் உள்ள இந்த மினிக்கூறளில் 532 பக்கங்கள் கொண்டது.



## கனவுக் கண் கமரா

தகவல் தொழிலியலில் கணனி அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய சாதனம் உருவெடுக்கவே செய்கிறது. 'கனவுக்கண்' என்ற பெயரில் புதிய டிஜிட்டல் வீடியோ கமரா ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. KDD கூட்டமைப்பு, KDD தொழிலியல் மையம் மற்றும் அமெரிக்க பிக்ஷர் 12 கூட்டமைப்பு ஆகியவை ஒன்றிணைந்து இக்கனவுக் கண் டிஜிட்டல் வீடியோ கமராவை வடிவமைத்திருக்கின்றன.

அண்மையில் டோக்கியோ நகரில் இந்தக் கமராவை இயக்கிப் பார்க்கிறார் ஜப்பான் நாட்டு செய்தியாளரான அய் கொஜிமா என்பவர்.





## எலக்ரோனிக் நாயார்

படத்தில் இருக்கும் இந்த நாயார் வீட்டிற்குக் காவலாக இருக்கும் போது எலும்புத் துண்டு போட்டு இவரது கவனத்தை திசை திருப்ப முடியாது.

காரணம், இவர் எலக்ரோனிக் நாயார். இவரை தொலைவில் இருந்து இயக்கக்கூடிய முறையில் சோனி நிறுவனம் தயாரித்துள்ளது. அண்மையில் அமெரிக்காவின் மைக்ரோ சொஃப்ட் நிறுவனம் வோஷிங்டனில் உள்ள ரெட்மண்டில் நடத்திய 'எதிர்கால இல்லம்' என்ற கண்காட்சியில் இவரும் இடம் பெற்றிருந்தார்.

சோனி தயாரித்திருக்கும் 'இன்டர் நெட் பியானோ' அருகே அமர்ந்து எலக்ரோனிக் நாயாரை இயக்கிக் காட்டுகிறார் மைக்ரோ சொஃப்ட் நிறுவன தகவல் தொழில் நுட்ப நிபுணர் ஜோன் கெல்லர். இன்னும் 5 வருடங்களுக்குள் வீடுகளில் பரவலாகப் புழக்கத்தில் இது வந்துவிடும் என்கிறது அந்நிறுவனம்.


## அதிக செலவில் உருவான அருங்காட்சியகம்

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் உருவாக்கப்பட்டிருக்கும் அருங்காட்சியகமே இது.

பூமியதிர்ச்சி, மற்றும் வானியல் சம்பந்தப்பட்ட விஷயங்களை விளக்கும் விதமாக அமைக்கப்பட்டிருக்கும் இதன் உயரம் 87 அடி.

அருங்காட்சியகத்தின் மையப்பகுதி உலகம் போல உருண்டை வடிவத்தில் அமைந்துள்ளது. இதன் உள்ளே இரு திரையரங்குகள் உள்ளன. இதில் அறிவியல் திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த அருங்காட்சியகம் அண்மையில்தான் பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.



## எத்தனை பேர் என்றாலும் தயார்

'தனியொரு கதாநாயகியாகத்தான நடிப்பேன். வேறு எந்தக் கதாநாயகியுடனும் இணைந்து நடிக்க மாட்டேன்' என்று சொல்லும் நடிகைகளில் இருந்து மாறுபட்டிருக்கிறார் கௌசல்யா.

'ஒருவரல்ல, இருவரல்ல எத்தனை கதாநாயகிகள் என்றாலும் நான் இணைந்து நடிக்க தயார். அண்மையில் வெளியான 'ஏழையின் சிரிப்பில்' படத்தில் எத்தனை பேர் நடித்திருக்கிறோம் பார்த்தீர்களா?' என்கிறார் கௌசல்யா.

## வருடம் ஒரு படம்

விஜயகாந்த் நடிக்கும் படத்தை கேப்டன் சினி கிரியேஷன்ஸ் என்ற பெயரில் தயாரித்து வருகிறார் விஜயகாந்தின் மைத்துனர் சுதீஷ்.

இந்த நிறுவனம் சார்பாக வருடத்திற்கு ஒரு படம் தயாரிக்க முடிவு செய்துள்ளார் சுதீஷ். அத்துடன் இந்தப்படங்களில் விஜயகாந்த் மட்டுமன்றி மற்ற நடிகர்களையும் நடிக்க வைக்கும் திட்டம் இருக்கிறதாம்.



விஜயகாந்த்-மீனா-லிவிங்ஸ்டன்-பிரபுதேவா-ரமேஷ்கண்ணா
படம்: வானத்தைப் போல

## பாலாவின் நிபந்தனை

பாரதிராஜா தனது மகனை வைத்து ஒரு வெற்றிப் படத்தை இயக்கித் தரும்படி 'சேது' பாலாவிடம் கேட்டார். பாலா கேட்கும் பணத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கும். போதும் ஓரிரு படங்களையே இயக்க ஒப்புக்கொண்டுள்ள பாலா, பாரதிராஜாவுக்கு ஓகே சொல்லிவிட்டார்.

அதுமட்டுமன்றி அவருக்குச் சில நிபந்தனைகளையும் விதித்திருக்கிறார்.

படம் முடியும் வரை எந்தத் தலையீடும் இருக்கக்கூடாது. படத்திற்கு இளையராஜா தான் இசையமைக்க வேண்டும். பாரதிராஜா எந்தக் கலைஞரையும் படத்திற்காகச் சிபாரிசு செய்யக் கூடாது. என்பவை தான் அந்த நிபந்தனைகள்.

பாரதிராஜா இதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டார்.

## 'நான் ஒருதரம் தான்....'

'பாட்ஷா' படத்தில் ஒரு விரலை உயர்த்தி 'நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி...' என ரஜினி பேசும் வசனம் படுபிரபலம்.

இப்போது இதே போன்றதொரு வசனம் 'மாயி' படத்திலும் இடம்பெறுகிறது.

சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் சரத்குமார் கதாநாயகனாக நடித்து வருகிறார். இதில் சரத்குமார், "நான் ஒரு தரம்தான் சொல்வேன்" எனப் பேசும் வசனம் அடிக்கடி இடம்பெறுகின்றது.

## மலையாளத்தில் ஐஸ்வர்யா

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய் முதன் முறையாக மலையாளப் படம் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

மலையாளத்தில் பல வெற்றிப்படங்களைக் கொடுத்த வினயன் இப்படத்தை இயக்குகிறார்.

90வயது முதியவராகவும், இளவயது இராணுவ அதிகாரியாகவும் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் மம்முட்டி. இளவயது மம்முட்டிக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராய் நடிக்கிறார்.

## இரங்குகிறார் குஷ்பு

இப்போதெல்லாம் எப்படிப்பட்ட வேடமென்றாலும் நடித்து வருகிறார் குஷ்பு. 'விரும்புகிறேன்' உட்பட இரண்டு படங்களில் பிரசாந்திற்கு அம்மாவாக நடிக்கிறார் குஷ்பு.

அதே போன்று 'ஒத்த ரூபா தாரேன்...' பாடலொன்றில் வடிவேலுவுடன் சேர்ந்து ஒரு படத்தில் ஒரே ஒரு நடனமும் ஆடியுள்ளார். மலையாளப்படமொன்றிலும் கவர்ச்சி நடிகைகளைத் தூக்கிச் சாப்பிடும் அளவிற்கு கவர்ச்சி காட்டியும் நடித்துள்ளார் குஷ்பு.



பிரசாந்த்
படம்: ஸ்டார்

## மினி சினி

★ 'எதிரும் புதிரும்', 'அந்தப்புரம்' ஆகிய தமிழ் படங்களில் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடிய சிம்ரான், 'முத்தவன்' தெலுங்கில் சிரஞ்சீவி நாயகனாக நடிக்கும் படத்திலும் ஒரே ஒரு பாடல் காட்சியில் நடனமாடுகிறார்.

★ 'சேது' பட இயக்குநர் பாலா அடுத்து இயக்கும் படத்தை பிரபல பட அதிபர் பூர்ணசந்திரராவ் தயாரிக்கவுள்ளார். அநேகமாக இப்படத்தில் சூர்யா ஹீரோவாக நடிப்பார் எனத் தெரிகிறது.

★ சரத்குமார்-மீனா ஜோடியாக நடிக்கும் 'மாயி' படத்தில் மீனாவை ஒருதலையாகக் காதலிக்கும் இளைஞனாக ஒரு அப்பாஸ் நடிக்கிறார். மீனாவுடன் இவருக்கு ஒரு கனவுப்பாடல் காட்சியும் உண்டு.

★ 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படத்தின் மூலம் ராஜசேகர் என்ற புதிய ஒளிப்பதிவாளர் ஒருவர் அறிமுகமாகிறார். இவர் இயக்குநர்-ஒளிப்பதிவாளர் ராஜீவ் மேனனிடம் உதவியாளராக இருந்தவர்.

★ உலக அழகிப்பட்டம் வென்ற கையோடு நேராக இந்திப்படங்களில் அழகிகள் நடிக்கச் செல்வது வழக்கம். சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா ராய் வரிசையில் சென்ற வருட அழகியான யுக்தா முகி, அனில் கபூருடன் இந்திப்படமொன்றில் நடிக்கிறார்.

★ புதிய இயக்குநர் கவி காளிதாஸ் இயக்கும் 'உன்னைக் கொடு என்னைத் தருவேன்' படத்தில் அஜித் இராணுவ அதிகாரி வேடத்தில் நடிக்கிறார். இதற்காக முடியை ஒட்ட வெட்டியிருக்கிறார்.

★ 'கண்ணோடு காண்பதெல்லாம்' ... தின் இரண்டாவது நாயகியான ... பிரசாத். இப்போது 'நேற்று வரை யாரோ' படத்தில் அப்பாஸுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

## அள்ளுகிறார் அல்போன்ஸா

'அழகன்' படத்தில் மம்முட்டியின் குழந்தைகளில் ஒருவராக நடித்த பின் 'குயில் தோப்பு' படத்தில் ரீத்து என்ற பெயரில் நாயகியானார்.

ஏனோ படம் பாதியோடு நின்று விட்டதால் ரீத்து என்ற பெயரை அல்போன்ஸா என்று மாற்றினார்.

'பாட்ஷா'வில் 'எட்டுக்குள்ளே வாழ்க்கை இருக்கு....' என்று தொடங்கும் பாடலில் ரஜினியோடு ஆட ஆரம்பித்த அல்போன்ஸா இப்போது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று பிஸியாக பல மொழிப் படங்களில் கவர்ச்சி நடனமாடி வருகிறார்.

முதலில் ஒரு பாடலுக்கு ஆட 30 ஆயிரம் இந்திய ரூபாய் வாங்கிய இவர் இப்போது 3 இலட்ச ரூபாய் வாங்கி வருகிறார்.



## கமலின் புதிய படம்

சீரியஸான படங்களுக்கிடையே கமல் சிரிக்க வைக்கும் படங்களைத் தருவது வழக்கம். 'ஹேராம்' படத்திற்குப் பின் கமல் தரவிருக்கும் சிரிப்புப் படம் 'தெனாலி'. இப்படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்குகிறார். அதுமட்டுமன்றி இப்படத்தின் மூலம் முதன் முறையாக தயாரிப்பாளராகவும் அறிமுகமாகிறார் கே.எஸ்.ரவிக்குமார். 'தெனாலி'யில் கமலுடன் இன்னொரு பெரிய நடிகரும் நடிக்கிறார். அவர் மலையாள சூப்பர் ஸ்டார்களில் ஒரு... மோகன்லால்.

'இருவர்' படத்திற்கு... மோகன்லால் நடிக்கும் இர... நேரடித் தமிழ்ப்படம் இது.

கதாநாயகர்கள் இருவ...லும் நாயகி சிம்ரான் ...

கார்த்திக்ராஜா இசை...

இப்படத்தின் ஏனைய ... பற்றிய விபரம் விரைவில்...

## ...னா பீச் சில் பாபுகணேஷ்-ரீவா

...கரத்தின் சென்னையில் உள்ள கடற்கரையின் பெயர்தான் ...ச்' தற்போது இதே பெயரில் புதிய படமொன்று தயாராகிறது. ...கணேஷ் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக ...வரே', 'செல்வா' படங்களில் நடித்த ரீவா நடிக்கிறார். ...டாவது கதாநாயகியாக பாவனா நடிக்கிறார். ...ராமப்புறங்களில் நாடகம் நடத்தி வாழ்க்கை ...துபவர்கள் வறுமையினால் ...னாவில் நடிக்க நகரத்திற்கு வருகிறார்கள். நகரத்தில் அவர்கள்படும் அவலங்களால் மறுபடி கிராமத்துக்கே செல்கிறார்கள். இதுதான் இப்படத்தின் கதை. இப்படத்திற்கு திரைக்கதை அமைத்து இயக்குகிறார் புதியவரான சந்திரா என்பவர்.

## விஜயகாந்தின் சிம்மாசனம்

விஜயகாந்தின் நண்பரும் தயாரிப்பாளருமான அ.செ. இப்ராஹிம் ராவுத்தர் தயாரிக்கும் 'சிம்மாசனம்' படத்தில் 3 வேடங்களில் நடிக்கிறார் விஜயகாந்த்.

குஷ்பு, அம்பிகா, மந்த்ரா, மனோரமா, ஷர்மிலி, பாத்திமா பாபு, கே.ஆர். வத்சலா, ராதா ரவி, ஆர்.சுந்தர்ராஜன், ராஜன் பி.தேவ், வையாபுரி, தியாகு, அனுமோகன், செந்தில் ஆகியோர் இதில் நடிக்கிறார்கள்.

கதை, திரைக்கதை வசனம் எழுதி படத்தை இயக்குகிறார் ஈஸ்வரன் என்னும் புதிய இயக்குநர்.

அண்மையில் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் தொடங்கப் பட்டுள்ளன. வரும் ஜூலை மாதம் படத்தை வெளியிடுவதற்கான துரித கதியில் இப் படவேலைகள் இடம்பெறுகின்றன.



முரளி-திவ்யா உன்னி
படம்: கல் வெட்டு

## ...ழமைக்கு வரவேற்பு

இரசிகர்கள் பழமைக்கு வழங்கும் முக்கியத்துவத்தை புதுமைக்கு வழங்குவதில்லை. அண்மையில் அமெரிக்காவில் நடந்த ...லை நிகழ்ச்சியின் போதே இது புலனாகியது.

அமெரிக்காவில் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக மனிஷா கொய்ராலா, அக்ஷய் குமார், ரேகா உட்பட ஒரு நட்சத்திரப் பட்டாளம் சென்றிருந்தது.

கலை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்கள் ரேகாவை முதன்மைபடுத்திய விளம்பரம் செய்திருந்தார்கள்.

நிகழ்ச்சியின் போதும் ரேகா மேடையில் தோன்றியபோது தான் இரசிகர்கள் ஆரவாரம் செய்தனர்.

இத்தால் தெரியவருவது யாதெனில் முதல் பந்தியின் முதல்வரியைப் படியுங்கள்.

...திரம்' படத்தை ...பிரபு-மம்முட்டி நடிக்கும் ... இயக்கவுள்ளார் ராஜ்கபூர். ... இவர் பிரசாந்தை ஹீரோவாக ...த்து இயக்கும் படத்திற்கு 'என்ன விலை அழகே' ... பெயரிட்டுள்ளார்.

★ அக்காவைத் தொடர்ந்து குழந்தை நட்சத்திர ... நடித்து வந்த ஷாமிலியும் கதாநாயகியாக ...க்கவுள்ளார். இவர் நாயகியாக அறிமுகமாகும் ... மலையாளத்தில் தயாராகிறது.

★ 'ரோஜாவனம்' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக அறிமுகமான ஆகாஷ் இப்போது ...கற்றது காதல் அளவு' படத்தில் தனிக்கதாநாயகனாக நடித்து வருகிறார். இதைத் தொடர்ந்து இவர் தெலுங்குப் படம் ஒன்றிலும் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

## நட்சத்திர ஹோட்டலில் நடிகையின் தங்கை

திரையுலக மறுபக்கம் (140) தமிழ்நாட்டிலிருந்து பயண...

தமிழில் முன்னணியில் உள்ள கவர்ச்சிக் கதாநாயகியின் தங்கைதான் இவர். 'ல்' என்ற எழுத்தில் முடியும் மூன்றெழுத்துப் பெயர் உடையவர்.

அக்காவைப் போல் தானும் நடிகையாக ஆசைப்பட்டார்.

தனது ஆசையை அக்காவிடம் தெரிவித்தார். தமிழில் முன்னணியில் இருக்கும் அக்கா சினிமா சம்பந்தப்பட்ட விழாக்களுக்குத் தங்கையைத் தன்னுடன் கூட்டிக் கொண்டு சென்றார்.

தனக்கு வேண்டப்பட்ட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர்களிடம் கேட்டுப் பார்த்தார். அவர்களும் அதற்குச் சம்மதித்தனர். ஆறெழுத்து முன்னணி இளம் நாயகனுக்கு ஜோடியாக நடிகையின் தங்கை நடிப்பதாக அறிவிப்பும் வந்தது.

அறிவிப்பு வந்ததால் படம் சம்பந்தப்பட்டவர்களை அணுசரித்துப் போகத் தேவையில்லை என இருந்துவிட்டார் நடிகையின் தங்கை.

ஆனால் சினிமாவுலகில் எதற்கும் ஒரு விலையுண்டு. ஒன்றைப் பெற வேண்டுமானால் ஏதாவதொன்றைக் கொடுக்க வேண்டும் என்பது நடிகையின் தங்கைக்கு தெரியவில்லை. நடிகையின் அப்போது தங்கை தரப்பில் இருந்து 'நல்ல மாதிரியான' பதில் வராததால் அவருக்குப் பதிலாக வேறொரு நடிகையை நடிக்க வைத்து விட்டனர்.

வந்த வாய்ப்பும் கையை விட்டுப் போனதே என நடிகையின் தங்கை, மறுபடி நடிகையிடம் தனக்காக சிபாரிசு செய்யும்படி கேட்டார்.

ஆனால் நடிகையோ தன்னுடைய அனுபவங்களையும் வாய்ப்புப் பெறும் வழிகளையும் தங்கைக்கு கூறினார்.

அதன்படி சிட்டியில் இருக்கும் நட்சத்திர ஹோட்டலில் தங்கைக்கு அறை எடுத்துக் கொடுத்துத் தங்க வைத்தார்.

அந்த ஹோட்டலுக்கு பிரபல இயக்குநர்களும் நடிகர்களும் அடிக்கடி வந்து செல்வது வழக்கம்.

பிரபல தெலுங்கு இயக்குநர் அந்த ஹோட்டலுக்கு வந்தார். இதை எப்படியோ தெரிந்து கொண்டார் நடிகையின் தங்கை.

தெலுங்கு இயக்குநர் தனியாக இருக்கும் சமயம் பார்த்து, அவரது அறைக்குச் சென்றார். அங்கு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு நடிக்க சான்ஸ் கேட்டார். அவரை ஏற இறங்கப் பார்த்தார் அந்த இயக்குநர்.

இயக்குநரின் பார்வையைப் புரிந்து கொண்ட நடிகையின் தங்கை படத்தின் கதை பற்றி 'டிஸ்கஷன்' செய்வதற்கு தனது அறைக்கு அழைத்தார்.

நடிகையின் தங்கையுடன் 'டிஸ்கஷன்' செய்தபின் அவருக்கு தனது தெலுங்குப் படத்தில் நடிக்க அந்த இயக்குநர் சான்ஸ் கொடுத்துள்ளார்.

## மகனுக்கு ஜோடி தேடும் டி.ஆர்.

சகலகலாவல்லவர் டி.ராஜேந்தர் தனது மகன் சிலம்பரசனை முதன் முறையாக நாயகனாக வைத்து எடுக்கும் படம் 'காதல் அழிவதில்லை'.

'உறவைக் காத்த கிளி' படத்தில் இருந்து ராஜேந்தர் கடைசியாக வெளியிட்ட 'மோனிஷா என் மோனாலிஸா' படம் வரை அனைத்து படங்களில் நடித்துள்ளார் சிலம்பரசன்.

சிலம்பரசன் கதாநாயகனாக அறிமுகமாகும் 'காதல் அழிவதில்லை' படத்தில் இவருக்கு கல்லூரி மாணவன் வேடம்.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மாணவனுக்கும்பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவிக்கும் அரும்பும் காதலைக் கூறும் படம் இது.

மகனுக்கு ஏற்ற ஜோடியைத் தேடி மும்பை சென்றுள்ளார் டி.ராஜேந்தர். லிவிங்ஸ்டன், ரோஜா, வடிவேலு, கோவை சரளா, மணிவண்ணன், விவேக், வையாபுரி, வடிவுக்கரசி ஆகியோரும் இப்படத்தில் நடிக்கின்றனர்.

வழக்கம் போல கதை, திரைக்கதையிலிருந்து படத்தின் அத்தனை விஷயங்களையும் டி.ராஜேந்தரே கவனிக்கிறார்.

## முகப்பில்

ஐஸ்வர்யா ராய்
படம்: கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

முரளி



இஷாக்-செந்தில்-ஜனகராஜ்
படம்: கண்மணி உனக்காக



ரேஷ்மா
படம்: தீ எந்தன் வானம்

தீ வி சி ஸ்ரீ

## காதோடு சொல்லுகிறோம்

...ஒருவரான ...துப் பின் ...ரண்டாவது ... நடித்தா ...டுமே. ...சமைக்கும் ...லைஞர்கள் ...வெளியாகும்.

ஜூண்டு பூ நடிகையைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று முட்டுக்கட்டை போட்டு வருபவர் பூ நடிகையின் காதலரான இயக்குநரது தாயார்தானாம்.

ஜீன்ஸ் நாயகனை வைத்து 'ஆசைப்படுகிறேன்' என்று பொருள்படும் படத்தைத் தயாரிக்கும் ஐந்தெழுத்துத் தயாரிப்பாளர், முதலில் பிரமாண்டப் படங்களைத் தயாரிக்கும் மீசைக்காரத் தயாரிப்பாளரிடம் மனேஜராக இருந்தவராம். அவரிடமிருந்து சுருட்டிய பணத்தில்தான் இப்போது பிரமாண்டமான படமெடுத்து வருகிறாராம்.

அண்மையில் வெற்றி பெற்ற இரண்டெழுத்துப் படத்தின் மூன்றெழுத்து நாயகியைப் புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப் போனால் நடிகையின் தாய்க்குலம் நிபந்தனை மேல் நிபந்தனையாகப் போட்டு வருகிறாராம்.

'எங்கே போனாலும் என் காமெடியைப் பத்தித்தான் பேசிக்கிறாங்க. இந்த நிலையில் என்னை ஹீரோவாப் போட்டு படம் எடுத்தால் பிரமாதமாக ஓடும்' எனத் தயாரிப்பாளர்கள் எல்லாரிடமும் தனது 'ஹீரோ' கனவைச் சொல்லி வருகிறாராம் தலைச்சுவை 'வேல்' நடிகர்.

யோர்த்திக் கொண்டு நடிக்கும் கோட்டை,' நாயகிக்கு பட வாய்ப்புகள் குறைந்து கொண்டு வருகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் வீட்டில் இருக்க வேண்டியதுதான் என உஷாரான நடிகை, முன்னணி நாயகர்களுக்கு வீட்டில் பார்ட்டி வைத்து வருகிறாராம்.

# கிளின்ரன் காலடியில் ராணி



படத்தைப் பார்த்ததும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் காலில் பெண் ஒருவர் விழுந்து வணங்குவதாக நினைக்கத் தோன்றும். அது தான் இல்லை.

கடந்த பெப்ரவரி மாதம் ஸ்பெயின் நாட்டு மன்னர் ஜுவாங் கார்லோஸும் அவரது மனைவியான ராணி சொபியாவும் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தனர்.

இத்தம்பதிக்கு உத்தியோகபூர்வமான வரவேற்பு வெள்ளை மாளிகையில் இடம் பெற்றது. கிளின்டன்-ஹிலாரி தம்பதிக்கு கைகுலுக்கச் சென்ற ராணி சொபியா கால் இடறி விழுந்த காட்சி தான் இது.

(பட உதவி : அஹமட் நியாஸ் - அஸாம் அலி.)

# ஆலாபனை அவளாக...

சூரியன் வந்து போனது
கிழக்கிலிருந்து மேற்குவரை
வானிலே தீக் கோடிட்டு
அவளைச் சுட்டெரித்தது;
ஊமை நிலவு
நெடு நேரம்
அவளைப் பார்த்திருந்து
தேய்ந்து மறைந்தது;
அவள் அசையவே இல்லை!
***
எல்லோரும் அவளை
அவரவர் தேவைகளின் பாதையில்
வழி கூட்டிப் போயினர்;
ஓவியம், சிற்பம்,
காவியம், கீதம்,
காதல், வாழ்க்கை என
அழகிய திருப்பங்கள்
அனைத்திலும் அவளை
நிற்கவைத்து வேடிக்கை பார்த்தனர்!
***
சாஸ்வதமான சௌந்தரியம்
அவள்தான், அவள் தான் என
ஓயாது பாடினர்!
சிலையாகவும் சித்திரமாகவும்
நிற்க வைத்து
அவளது காலடியில்
கை கூப்பித் தொழுதனர்!
***
ஐயகோ,...
சிற்பங்களில்
அவளது கண் திறபடவுமில்லை;
ஓவியங்களில்
அவளது சிரிப்பொலிகள்
கேட்கவுமில்லை!
***
அவளைச் சூழவும்
அழகிய முள் வேலிகள்.....
சுடர் வீசும் தீக்கிடங்குகள்....
அவளது சுதந்திரங்கள் யாவும்
நிஜ வாழ்வோடு
சொந்தம் கொண்டாட முடியாமல்
பின் வாங்கித் திரும்பிய போது
திகைத்து எழுந்தாள்!
***
அவளுக்குள் சுடர்விட்ட
சூரியனின் ஒளியோடு
அடர்ந்த காடுகளை விட்டு
வெளியேறி நடந்தாள்;
அன்று தான்,
தீயும் காற்றும்
அவளது குரலில் சபதமிட்டன!
***
நிகழ்காலத்திலிருந்து புறப்பட்ட
எதிர்காலத்தின்
ஒளிச்சுடரவள்-இனி
வசந்தமோ இளவேனிலோ
அவளைப் பாதிக்கமாட்டா!
வானமும் பூமியும்
அவளைப் பயமுறுத்த மாட்டா!
***
எட்டுத் திசைகளையும்
அவளது சிறகுகள்
தொட்டுத் திரும்பும் நாளையில்
வாழ்வின் உன்னதங்களில்
அவளது பாதங்கள் பதியும்-இனி
ஆலாபனையே அவளாகிப்போவாள்!

பஹீமா ஜஹான், மெல்சிரிபுர.

# பிரார்த்தனை

வட பகுதியிலிருந்து வந்த
வாடைக் காற்றா?
அது விட்டு விட்டு வீசுவதன்
விசித்திரம் என்ன?
●●●
யுத்த வேட்டுக்களால்-அங்கு
சண்ட மாருதமும்
சல்லடையாக்கப்பட்டுவிட்டதா?
●●●
சண்ட மாருதம் மட்டுமா....
சமாதானமும் தான்!
●●●
இங்குள்ள மக்களுக்கு
ரவை வேட்டுக்கள் தானோ
பண்டிகை பட்டாசானது?
●●●
ஓ....! அங்குள்ளோருக்கு
தினந்தோறும் பண்டிகையா?
இறந்தவர்க்கென தனியிடம்
அங்கு இருந்தாலும்-சிலர்
இருந்த இடமும் அங்கு
இறந்தவர் இடமானதே!
சொந்தங்களை இழந்து
சோகங்களை சுமந்து
பந்தமென இருந்தோரையும்
பரிதவிக்க விட்டு விட்டு
தஞ்சமென இடம் தேடி
தரணியின்றி தவிப்போருக்கு
வானமே கூரையானதன்
வக்கிரம் என்னவோ?
●●●
கண்ணயர்ந்து தூங்கும் போதும்,
மண் மறந்து மறைவதன்
மாயம் என்னவோ?
●●●
கல்விக்கூடமாய் இருந்த
கட்டடங்கள் பல அங்கு
கல்லறையானதே!
●●●
இனி வேட்டுக்களின் வெளிச்சம்
தான் அங்குள்ளோருக்கு
விடியலின் வெளிச்சமோ?
●●●
மனிதம் மரணித்துக்
கொண்டிருக்கின்ற
இப்பூமிக்கு சஞ்சீவி மருந்தாய்
இருப்பது சமாதானப்புறாவே!
அதுவும் சல்லடையாக்கப்படும்
முன் சமாதானத்திற்கு
பிரார்த்திப்போம்!

சிவலிங்கம் சிவகுமாரன்,
வட்டகொட.

# தேன் கிண்ணம்

## உன் நினைவு தான்

என் இதயத் திரையில் நினைவு-பேனா
தினந்தோறும் உன் பெயரையே-
கூறுகின்றது.
தூக்கமும் வருவதில்லை-உணவிலும்
நாட்டமில்லை
உறக்கத்திலும் உன்-நினைவு தான்
நீ பேசிய அந்த-வார்த்தைகள்,
அந்த நிமிடங்களை நினைக்கும்
போதெல்லாம்
உள்ளம் முழுவதும்-இனிக்கின்றதே!
உனைத் தினமும் பார்க்க-வேண்டுமென்ற
ஆசையால் ஏக்க அம்புகளால்-என்
இதயத்தை நானே-
காயப்படுத்திக்கொள்கிறேன்.
புரியாத இப்புது உணர்வு-உன் நினைவு
தான்!
புரியாத இப்புதுப்புது-உணர்வுகளால்
உன்னால் நான்-உவகைகொள்கிறேன்!

அ.யூட்மரிய அன்ரன்,
வவுனியா.

## புறப்படு.....!

என்
உள்ளத் தடாகத்துள்
கல்லெறிந்ததேன்
கண்மணி?
❑❑❑
வானம்
மழையைப் பொழிந்தாலும்
சேறாகிப் போவதோ
பூமிதான்....?
❑❑❑
வாழ்க்கையின்
எதிர் நீச்சலில்
நீ......
தோற்றுப்போகலாம்.
ஆனாலும்......
வழியை மூடி விடுவதா?
❑❑❑
ஆதாமும் ஏவாளும்
வழிகாட்டிகள் தான்
என்பதை
நீ மறந்திருக்கலாம்
அல்லது
அறியாதிருக்கலாம்!
❑❑❑
பரவாயில்லை!
பாதைகள் வேறானாலும்
பயணம் ஒன்றுதான்.
❑❑❑
புறப்படு.....!
உனது பயணமாவது
எனது உள்ளத்தை......
அமைதியாக்கட்டும்!

ஏ.அஹமது ஜுனைது,
ஏறாவூர்-06.

## நீயுமா?

தாயே!
அன்று நீ
பரம ஏழையாய்
இருக்கும் போது
உன் கன்னி மகளை
கரை சேர்க்க
கஷ்டப்பட்டாய்!
ஆனால் இன்று நீ
பணக்காரியாய்
மாறிவிட்டதால்!
உன் மகனுக்கு
ஏழைப்பெண்ணிடம்
சீதனம்
எதிர் பார்க்கின்றாய்!
இது எந்த
விதத்தில் நியாயம்?

ஆர்.கோணேஸ், நுவரெலியா.

# மனப்பார்வை



அவன் பணத்தை தொலைத்துவிட்டான்.

அடுத்த வீட்டுக்காரன் திருடி விட்டதாக அவன் நினைத்தான். அடுத்த வீட்டுக்காரனை உன்னிப்பாகக் கவனித்தான்.

அவன் தோற்றம், நடவடிக்கை, அசைவுகள் எல்லாம் அவனைத் திருடனாகவே அவனுக்குக் காட்டின.

அதன் பின்,


அந்தப் பணம் மூங்கில் குழாயில் பத்திரமாக இருப்பதைக் கண்டான் அவன்.

அப்பொழுது அடுத்த வீட்டுக்காரனை உன்னிப்பாய்ப் பார்த்தான்.


அவன் தோற்றம், நடவடிக்கை, அசைவுகள் எல்லாம் அவனைத் திருடனாகக் காட்டவில்லை.

-சீனக்குட்டிக் கதைகளிலிருந்து-

# பேனா நண்பர்கள்




பெயர்: ஏ.இன்பராஜன்,
வயது: 25
முகவரி: P.O.BOX-5054,
DOHA, QATAR.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்: என்.ராணி,
வயது: 23
முகவரி: P.O.BOX-1451
CODE NO-51015 AL-FINTAS,
KUWAIT.
பொழுது போக்கு:
பத்திரிகை.

# துருவல்



நிறைவான வாழ்க்கைக்கு இலக்கணமாக 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க' என வாழ்த்துவார்கள்.

இவைதான் அந்தப் பதினாறு:

1. கலையாத கல்வி 2. குறையாத வயது 3. கபடு வராத நட்பு 4. வளமை 5. குன்றாத இளமை 6. நோயற்ற உடல் 7. கலங்காத மனம் 8. அன்பான மனைவி 9. பண்பான பிள்ளைகள் 10. வளரும் புகழ் 11. வாய்மையும் நேர்மையும் 12. பணம் வீண் விரயமாகாத நிலை 13. நல்ல நட்பு 14. சிரமமில்லாத வருமானம் 15. நல்லாட்சியில் வாழும் பேறு 16. இறையருள்.

காதலியை மனைவியாக்கத் துணிவு தேவை;
மனைவியைக் காதலிக்க கனிவு தேவை.
-புது மொழி-

பரதன், சமதர்மன், காலன், சௌமியன், குறிப்போன், வழிப்போக்கன், வீரன், சாவடி, பேகன், சம்மட்டி, ஆணி, ஏற்றன், நக்கீரன், கொழு, வர்தன், பாரத், குயில், பாரதி, வீனஸ், மணிமொழி, தமிழன்பன், தமிழ்த்தொண்டன்.

இவையெல்லாம் என்ன?

பல்வேறு பத்திரிகைகளில் எழுதுவதற்காக அறிஞர் அண்ணாத்துரை வைத்துக் கொண்ட புனைபெயர்கள்.

# நில் கவனி முன்னேறு

## தாழ்வு மனப்பான்மையைத் தகர்க்க...



★ உங்கள் தகுதிக்கு மேல் உங்களைப் பார்த்து மற்றவர்கள் பிரமிக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கும் போது அந்த ஏமாற்றத்தால், தாழ்வு மனப்பான்மை ஏற்படுகின்றது. யதார்த்தமாக இருங்கள். மற்றவர்கள் யதார்த்தமாக உங்களுடன் பழகுவதையே எதிர்பாருங்கள்.

★ உங்கள் எதிர்பார்ப்புக்களைக் குறைத்துக் கொள்ளுங்கள். ஒரே நேரத்தில் பலரிடம் காண்கிற சாதனைகளை நீங்களும் செய்ய வேண்டும் என்று பதறாதீர்கள்.

★ சின்னச்சின்னத் தோல்விகளால் உடைந்து போகாதீர்கள். அடுத்த வெற்றியை எதிர் நோக்குங்கள்.

★ உங்கள் குறைகளை நினைத்துப் பட்டியல் போட்டுக் கொண்டிருக்காதீர்கள். உங்களுடைய நிறைகளை நீங்கள் மதியுங்கள்; பிறரும் மதிப்பார்கள்.

★ பிறருடைய வெற்றியைப் பார்த்துப் புழுக்கம் அடையாதீர்கள்.

★ காதலிலும் சரி, நட்பிலும் சரி,.... நீங்கள் விரும்புவது போலவே மற்றவர்களும் உங்களை விரும்ப வேண்டும் என்ற கட்டாய விதி இல்லை என்று உணருங்கள். நட்போ காதலோ வெறும் ஒப்பந்தங்கள் அல்ல.

★ பக்கத்தில் இருப்பவரைப் போல் நீங்களும் திறமைசாலி தான் என்பதை நம்புங்கள்.

★ இன்னொருவனால் சாதிக்க முடிந்ததை வாழ்த்தப் பழகுங்கள், உங்களுடைய அடுத்த சாதனை வாழ்த்துப் பெறும்.

# இந்தவாரம் உங்கள் பலன்

19.03.2000 முதல் 25.03.2000வரை

ஜோதிடர் 'கானா'

**மேடம் :**
பிரச்சனைகள் தீரும். மருத்துவச்செலவு ஏற்படும். உறவினர்கள் வந்து சந்திப்பார்கள். தொழில் கல்வி சீராக அமையும் பரணி நட்சத்திரத்தார் நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 21, 22.

**இடபம் :**
தொழில் சிறக்கும். குடும்பப்பிரச்சனைகளை கவனிக்கவும், மனைவிவழியால் பற்பல சிக்கல்கள் வந்து போகும். தருமகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும். தடுமாற்றநிலை மறையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 23, 25.

**மிதுனம் :**
கல்விமுன்னேற்றமுண்டு. திருமணப் பேச்சுக்கள் இடம் பெறும். குடும்பத்தில் சுப நிகழ்வுக்கிடமுண்டு. பலபிரச்சனைகள் தீரப்பெறும். மாறுபட்ட நிலை நன்மையான பற்பல விடயங்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : ஒரேஞ்சுவர்ணம்; எண்:03.
அதிஷ்ட திகதிகள் : 21, 24.

**கடகம் :**
குடும்பத்தில் குழப்பமும் எதிலும் அச்சமுடைய நிலையும் தடுமாற்றமும் ஏற்படும். கொடுத்த சொல்லை காப்பாற்ற முடியாது மனந்தடுமாறும். உறவினர் உதவியும் வருகையும் அமையும். ஆயிலியக்காரர் கவனமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன் செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 22, 25.

**சிம்மம் :**
மாற்றங்கள் பல நிகழும். பண வரவுண்டு. நண்பர்களின் சேர்க்கை. அத்துடன மனைவி, காதலர்களின் ஒற்றுமை; திட்டமிட்ட பிரயாணங்கள் ஒழுங்கு தவறாதிருத்தல் நலன் தரும். மகபூர நட்சத்திரர் பற்பல யோகங்களை அடைவர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 19, 23.

**கன்னி :**
பயண அலைச்சல், உணவில் பிரியமின்மை உடல் சோம்பலான நிலை ஏற்படும். கணவரினால் குடும்பத்தில் சிலசங்கடமானநிலை ஏற்படலாம். பணவரவுண்டு, புதிய மாற்ற நிலை தென்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 20, 22.

**துலாம் :**
தொழில் வசதியும் பணப்பெருக்கமும் ஏற்படும். உறவினர்களது உதவிகள் கிடைக்கும். புதிய செய்திகளால் மனநிம்மதியும் இருப்பிட அமைப்பில் பெரிய மாற்றங்களும் காணப்படும். சகோதரர்களின் அன்பும் ஆலயவழிபாடும் அமையும். சுவாதி, விசாக பெண்களுக்கு யோகசித்தியானவாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 19, 23.

**விருட்சிகம் :**
அரசஎதிர்ப்பு, குடும்பத்தில் அச்சமான நிலை உருவாகும். புதிய மாற்று உத்திகளால் காரிய வெற்றியளிக்கும். ஆலயதரிசனமும் ஊர் மக்களால் நற்பெயரும் ஏற்படும். தொழில் நுட்பக்கல்வி பயில்வோர் பாராட்டுகள் பெறுவர். கேட்டை நட்சத்திரருக்கு வெற்றிகள் கூடும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 21, 24.

**தனுசு:**
பயணங்களுக்கிடமுண்டு. எடுத்த கருமம் சுபமாக முடியும். பண வரவுக்கிடமுண்டு. விவசாய முயற்சி உள்ளோருக்கு உதவியும் வருமானமும் கிட்டும். நோய் துன்ப மாற்றம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : வெண் மஞ்சள்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 22, 24.

**மகரம்:**
தொழில் நிலை பலமடையும். கடன் பிரச்சனைகள் பைசலாகும். சகோதர வழியில் பண உதவிகள் கிடைக்கும். நோய் துன்ப மாற்றம் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : மருண்வர்ணம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 23, 25.

**கும்பம்:**
உடல் நிலை மாறுபடும். குடும்பத்தில் செலவுகளும் அலைச்சல்களும் காணப்படும். எதிர் பார்த்த விடயங்கள் சிக்கலுடன் செல்லும். அரச உத்தியோகத்தில் உள்ளோர் பல விதமான பிரச்சனைகளை எதிர் நோக்குவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 21, 23.

**மீனம்:**
திருமணப் பேச்சுக்கள் கைகூடும். பரீட்சைகள், எடுக்கும் கல்வி முயற்சிகள் அனுகூலமடையும். தூரதேச பயணம் வெற்றியாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்,
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 23, 24.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சங்குக் கழுத்து வேண்டுமா?



அழகான பெண்ணை பளிச்சென்று காட்டுவது கழுத்தின் அழகு மட்டுமே. கழுத்து அழகாக இருந்தால் ஒட்டுமொத்த அழகும் பளிச்சிடும். அதாவது சங்கு போல கழுத்தின் அமைப்பு நீண்டு இருக்க வேண்டும். அதற்காக என்ன செய்யலாம்?

கழுத்தை கவனிக்க கொஞ்சம் சிரத்தை தேவை. அவ்வளவுதான்.

உயரமான தலையணை வைத்து தூங்க வேண்டும். இதனால் கழுத்துப் பகுதி உறுதியாகுவதுடன், மிடுக்கான அழகைப் பெறும். உறுதியான தலையணையை வைத்துப் படுத்துக் கொண்டால் கழுத்தின் அழகு சீர் குலையாது.

வறட்சியான தோல் கழுத்தின் அழகையே கெடுத்துவிடும். இயற்கையாக உள்ள தோலின் ஈரத்தன்மை பாதிக்கப்படும்போது கழுத்தின் அழகு கெட்டுவிடுகிறது.

கிரீம், சவர்க்காரம் இவைகள்கூட தோலின் ஈரத்தன்மையை குலைத்து விடுகிறது.

அதற்காக கழுத்துப் பகுதிக்கு மசாஜ் செய்து விடலாம்.

வாரத்திற்கு ஒரு முறை மசாஜ் செய்யும் போது கழுத்துப் பகுதியிலுள்ள இறந்த செல்கள் அழிக்கப்பட்டு இரத்த ஓட்டம் சீராவதுடன் கழுத்து அழகாக மாறிவிடுகிறது.

கழுத்தின் அழகைக் கெடுக்க மன ரீதியான காரணங்களும் உண்டு. அடிக்கடி டென்ஷனாகி விடுபவர்களுக்கு கழுத்துப் பகுதியில் சுரக்கும் ஹார்மோன்கள் வேகமிழக்கிறது. இதனால் 30 வயதுக்கு மேல் உள்ள பெண்களின் கழுத்து அசிங்கமாகிவிடும். இது எல்லாப் பெண்களுக்கும் வருவதில்லை.

இதைப் பயிற்சிகளின் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

விரல்களை வாயின் ஓரத்தில் வைத்துக் கொண்டு கீழ் உதடை லேசாகத் திறந்து கழுத்திற்கு அசைவு கொடுக்கலாம். இதை ஐந்து முறை செய்ய வேண்டும்.

முஷ்டியை முகவாய்க் கட்டைக்கு அடியில் வைத்துக்கொண்டு வாயை சிறிது திறந்து தாடையை உறுதியாக நிறுத்தி மூச்சை உள்ளிழுத்து பிறகு வெளியிட வேண்டும்.

இடது பக்கமும், வலது பக்கமும் மாறி மாறி வேகமாக திருப்பிவிட வேண்டும். இப்படிச் செய்வதால் கழுத்து உறுதியாகி அழகாகி விடும்.

## பெண்களும் இரத்த அழுத்தமும்



நாற்பது வயதுக்கு மேல் பெரும்பாலான பெண்களுக்கு தாக்குவது இரத்த அழுத்த நோய் தான். அதுவும், அதிக இரத்த அழுத்தத்தைவிட குறைந்த இரத்த அழுத்தம் வந்துவிட்டால், பெரும் அவஸ்தைதான்.

தலைவலி, சோம்பேறித்தனம், எதிலுமே விருப்பம் இல்லாமை, கோபம், இவையெல்லாம் பக்க விளைவுகளாக வந்து ஒட்டிக்கொள்ளும்.

இரத்த அழுத்தம். என்பது ஒரு நோயே இல்லை என்கிறார்கள் மருத்துவர்கள். அவர்களைப் பொறுத்தவரை உடல் உபாதைத் தொந்தரவுகளில் இதுவும் ஒன்று என்று மட்டுமே சொல்கிறார்கள். உணர்ச்சிவசப்படுபவர்களுக்கு இரத்த அழுத்த நோய் மிகச் சீக்கிரமாக வருமாம்.

மனதை உறைய வைக்கும் படக் காட்சிகள், துக்கமான சம்பவங்கள் இவையெல்லாம் பெண்களுடைய மென்மையான மனதை உடனே தாக்குவதால், பெண்களுக்கு பிரஷர் குறைந்த வயதிலேயே வருகிறது.

தலைசுற்றல், தொடர்ந்து 20 நிமிடங்களுக்கு மேல் நின்றால், பார்வை மங்கினால், இரத்த அழுத்தம் வரப்போகிறது என்று தெரிந்து கொள்ளலாம். இந்த நோயை பரம்பரை நோய் என்பது மருத்துவர்களின் முடிவு. பெற்றோர்களுக்கு இந்நோய் இருக்கும் பட்சத்தில் பிள்ளைகளுக்கும் வந்து விடும்.

நீண்ட நேரம் நின்று கொண்டு தொழில் பார்ப்பவர்களை இந்த நோய் எளிதாக தொற்றிக் கொள்ளும். உணவில் அதிகளவில் உப்பு, சூடான குளிர்ச்சியான உணவுகளை எடுத்துக் கொண்ட பிறகும்கூட தலைசுற்றல், இருந்தது என்றால், உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

நடுத்தர வயது, இளவயது என்ற பாகுபாடு இல்லாமல் இரத்த அழுத்தம் வரலாம். பெண்களுக்கு இந்த நோய் சர்வசாதாரணமாக வருவதற்கு முதல் காரணம், சரியான உணவு எடுத்துக்கொள்ளாமல் சோம்பேறித்தனமாக பகல் வேளையில் தூங்குவதால் தான்.

சாதாரணமாக பெண்களுக்கு வரும் அனிமியா நோய் இரத்த அழுத்த நோய் வருவதற்கும் காரணமாகிறது. இரத்த அழுத்த நோய்க்கான அறிகுறிகள் சாப்பிட்ட பிறகு தான் மிகவும் தொல்லைபடுத்தும்.

### தடுக்கும் வழிகள்

பெண்கள் தினமும் சத்தான உணவை சாப்பிட்டு விட்டமின் தாதுப்பொருட்கள் கலந்த உணவு, காய்கறிகள், இலைகள், பழங்கள் உப்புச்சத்து போன்றவற்றை அதிகமாக எடுத்துக் கொண்டால், இரத்த அழுத்த நோயிலிருந்து பெண்கள் தப்பித்து விடலாம்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HG

பெயர்:.....................

முகவரி:.....................

.....................

தொழில்:.....................

கையொப்பம்:.....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-03-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா

30

# மோனிக்கா என் மோனிக்கா

ஓவல் அலுவலகத்தில் இருந்து வெளியே வருவதற்கு முன்னர் தன்னுடைய உள்ள நெருடல்களை முகத்தில் காட்டிக் கொள்ளாதவாறு. போலித்தனமான புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள். எதுவுமே நடைபெறாதது போல் காட்டிக் கொண்டாள் மோனிக்கா.

தொடர்ந்தும் வெள்ளை மாளிகையில் தங்கியிருந்தால் பொங்கி வரும் அழுகையை எப்படியும் கட்டுப்படுத்த முடியாமல் போய் விடும் என்று முடிவெடுத்தாள். கையில் வைத்திருந்த கோப்புக்களை தனது அலுவலக மேசையின் மீது வீசி எறிந்துவிட்டு விறுவிறுவென்று வெளியேறினாள். தனது வண்டியில் ஏறிக்கொண்டு தனதில்லம் புறப்பட்டாள்.

வீட்டின் முன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனதும், அதுவரை கட்டுப்படுத்தப்பட்டிருந்த கண்ணீர் மடை திறந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்தது. மாடியில் உள்ள தனது அறைக்குள் வேகமாக நுழைந்த மோனிக்கா கட்டிலில் முகம் குப்பிற வீழ்ந்து அழத் தொடங்கினாள்.

மோனிக்கா அவசர அவசரமாக மாடிப் படியேறிச் செல்வதை அவருடைய தயார் மார்சியாவும் இவளுடைய சித்தி தெப்ராவும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இவ்விருவருக்கும் ஜனாதிபதி கிளின்டனுடன் மோனிக்கா வைத்திருந்த அந்தரங்கத் தொடர்பு பற்றிய விபரங்கள் தெரிந்திருந்தன. கிளின்டனுடன் தான் மிக நெருக்கமாகப் பழகுவது பற்றி மோனிக்காவே தாயாரிடமும், சித்தியிடமும் பல கதைகள் ஏற்கனவே கூறியிருக்கிறாள். இருப்பினும் அவர்கள் பல காலமாக இதனை ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

இப்பொழுது கிளின்டன் மோனிக்கா தொடர்பு மோனிக்காவின் வாழ்வைப் பாழடித்துவிடுமோ என்று கவலை கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

அண்டி பிளெய்லருடனான மோனிக்காவின் நெருக்கமான உறவுமறைந்து விட்டமையினால் மார்சியாவும் தெப்ராவும் ஓரளவு மகிழ்ச்சி அடைந்திருந்தனர். ஆனால் மற்றொரு திருமணமான- அவளுடைய வயதிற்குப் பொருத்தமில்லாத- அந்தஸ்துக்கு எட்ட முடியாத- நாட்டின் தலைவருடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டாளே என்று விசனமடைந்திருந்தனர். நாளுக்கு நாள் அவர்களுடைய கவலை அதிகரித்த வண்ணமேயிருந்தது.

இன்று மோனிக்கா வழக்கத்திற்கு மாறாக நேரகாலத்துடன் வீட்டுக்கு வந்து சேர்ந்துள்ளாள். அதுமட்டுமல்லாமல் மோனிக்காவின் முகம் மிகவும் விகாரமாக காணப்பட்டது. அழுதழுது முகம் சிவந்து வீங்கியும் இருந்தது.

மோனிக்காவைப் பின் தொடர்ந்து சென்று அவளுடைய அப்போதைய நிலைக்கான காரணத்தையும் அவர்களால் விசாரித்தறிய முடியாதிருந்தது.

### தாயாரின் ஏக்கம்

தாய் மார்சிய இவ்வாறு கூறுகிறார்! "எனது மகள் கிளின்டனுடன் ஓரளவு நெருங்கிப் பழகுகிறாள் என்பதையறிந்து, சாதாரணமான உறவு என்று தான் இதனைக் கருதினேன். அது அவளுடைய தனிப்பட்ட அலுவல் என்று பேசாதிருந்துவிட்டேன். ஆனால் தொடர்ந்து வந்த தகவல்கள் கிளின்டனுக்கும் மோனிக்காவுக்குமிடையில் நெருக்கமான காதல் உறவு மலர்ந்து விட்டிருக்கிறது என்பதையறிந்து திகைப்படைந்தேன் அதனையிட்டு அவளிடம் எதனையும் விசாரித்தறிய என்னால் முடியாதிருந்தது. என் மகளுக்கு வருங்காலம் அவளுடைய வாழ்க்கையை பெரிதும்பாதிப்புக்குள்ளாக்கக் கூடிய ஒரு சம்பவம் நடைபெறுகிறது என்பதை பூரணமாக அறிந்தபின்னரும் நான் அதில் தலையிடாதிருக்க முடியாது என்ற நிலைக்குள்ளானேன்.

என் மகளுடைய தகுதிக்கும் அந்தஸ்துக்கும் மீறிய உறவு வளர்வதை என்னால் அனுமதிக்கமுடியாதிருந்தது. அவளோர் இளம் பெண். இறுதியில் அவளுடைய வாழ்க்கை நாசமாகப் போகக்கூடிய நிலை உருவாவதை தடுத்தாக வேண்டிய நிர்பந்தம் எனக்கிருந்தது.

என் மகளுடைய வாழ்க்கைபற்றிய அக்கறை எனக்கு இருக்கிறது என்பதையும், அவள் உணர்ந்துதான் உள்ளாள். இருப்பினும் அவளுடைய பிரச்சனைப் பற்றி என்னிடமோ அவளை மிகவும் நேசிக்கும் அவளுடைய சித்தியிடமோ அவள் பிரஸ்தாபித்ததில்லை.

வெள்ளை மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி கிளின்டனின் அலுவலக வாயிற் காப்பவனிடம் 'நான் தான் மோனிக்காவின் தாயார் உடனடியாக ஜனாதிபதியிடம் போக விடு!' என்று அனுமதி கேட்டு உள் நுழைந்து ஜனாதிபதியிடம், "என்னுடைய மகளை தொந்தரவு செய்யாமல் விட்டுவிடு! என்று கூறிவிட என்னால் முடியுமா? ஆகவே எதையும் செய்ய முடியாமல் நான் தத்தளித்தேன். என்னுடைய மனக்கொதிப்பை என் சகோதரி தெப்ராவுடன் தான் என்னால் பகிர்ந்து கொள்ள முடிந்தது." இவ்வாறு மார்சியா பின்னர் தனது வேதனையை வெளியிட்டிருந்தார்.



### மோனிக்காவின் சினேகிதி

கத்தரின் ஆல்டேடேவிஸ் என்ற

## மனப்போராட்டம்



மோனிக்காவின் நெருக்கிய சினேகிதியிடம், ஜனாதிபதிக்கும் அவளுக்குமிடையில் உள்ள அந்தரங்க உறவு பற்றிய முழுவிபரத்தையும் மோனிக்கா கூறுயிருந்தாள். ஆரம்பத்தில் மோனிக்கா கிளின்டன் உறவு பற்றி கத்தரின் பெரிதாக நினைக்கவில்லை. தன்னுடைய சினேகிதி அண்டி பிளெய்லருடன் கொண்டிருந்த தகாத உறவு முறிந்த பின்னர், கிளின்டனுடன் தற்காலிகமாக சாதாரண நட்பு மட்டும்தான் மோனிக்கா கொண்டிருக்கிறாள் என்று கருதினாள். மோனிக்கா காலஞ் செல்லச் செல்ல தனக்கும் ஜனாதிபதிக்குமிடையில் ஏற்பட்டு வரும் உறவு பற்றி முழுவிபரத்துடன் கூறிவருவதை அவதானித்த கத்தரின் கலக்கமடைந்தாள். இளம் பெண்ணான மோனிக்காவுக்கு இத்தகைய உறவு அவசியம்தானா, என்று கருதியதுடன் மோனிக்காவுக்கும் இத்தகைய உறவினை வளர்க்காமல் முறித்து விடுமாறும் ஆலோசனைகள் கூறி வந்திருக்கிறார்.

"மோனிக்காவுக்கு அவளை மட்டுமே நேசிக்கும் ஓர் ஆடவனின் உறவு தேவை. ஆனால் உலகத்திலேயே சுலபமாக அடைய முடியாத ஒரு பிரபல்யமான மனிதனுடன் அவள் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தாள். அவரும் விரைவில் முறிந்துபோகும், தற்காலிக உறவுதான் இது என்று உணராமல் மோனிக்காவை தனது மாயையில் சிக்க வைத்திருக்கிறார். இவ்வாறு மோனிக்காவின் சினேகிதி பின்னர் உள்ள காலங்களில் கருத்துத் தெரிவித்தாள்.

உண்மையில் மோனிக்கா கிளின்டனிடம் இருந்து, தான் எப்போதாவது விலகி இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கருதியதாகத் தெரியவில்லை. நிரந்தரமான உறவு என்றுதான் அப்போது நினைத்திருந்தாள்.

தன்னுடனான உறவு முடிந்துவிட்டதாக கிளின்டன் மோனிக்காவிடம் கூறிய அன்றைய தினம் முழுவதும் அவள் நரக வேதனையை அனுபவித்தாள். இருப்பினும் அடுத்த நாளே வெள்ளை மாளிகைக்கு தன் பணியை மேற்கொள்ளச் சென்றிருந்தாள். கூடுமானவரை தனது உள்ளக் கிடக்கையை அவள் வெளிப்படுத்தவில்லை. இருப்பினும்வழமையான தன் மோகனச் சிரிப்புடன் கிளின்டன் தோன்றும் புகைப் படங்கள் வெள்ளை மாளிகையின் பல இடங்களிலும் சுவர்களில் மாட்டப்பட்டிருந்தன. கிளின்டன் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

உலகிலேயே மிக முக்கியமான ஒருவருடன்தான், தான் உறவு வைத்திருப்பதாக அவளுக்குத் தோன்றினாலும்கூட அவர் திருமணமாகிய குடும்பஸ்தர் என்பதை அவள் உள்ளம் ஏனோ மறுத்தே வந்திருக்கிறது.

முந்திய வருட கிறிஸ்மஸ் தின வெள்ளை மாளிகை விருந்தின் போது நாட்டின் முதல் பெண்மணியான ஹிலாரி கிளின்டன் அவ் விருந்தில் கலந்து கொண்டார். அவரைப் பார்த்ததும் மோனிக்காவுக்கு பொறாமையாகவும் இருந்தது. 'இவர் எனது காதலனின் மனைவி' என்று மட்டுமே கருதத் தோன்றியது.

பிற்பட்ட காலத்தில் கிளின்டனினுடைய உறவைப் பற்றி மோனிக்கா கொண்டிருந்த கருத்துக்களை பகிரங்கமாக வெளிப்படுத்தினாள். "கிளின்டனுக்கும் ஹிலாரி கிளின்டனுக்குமிடையிலான உறவு அவருடைய ஜனாதிபதிப் பதவிக்காலம் முடிவடைந்ததும் நீங்கிவிடும், என்று நான் கருதிய நாட்களும் உண்டு. எப்போதாவது ஒரு நாள் கிளின்டனுடன் கைகோர்த்த வண்ணம் உலா வரும் நாள் வரவே செய்யும் என்று பல தடவைகள் நாள் சிந்தித்ததுண்டு." என்று தெரிவித்தாள்.

இருவரும் பிரிந்து ஒரு வாரத்தின் பின்னர் வெள்ளை மாளிகையின் தரை மட்டத்துக்குக் கீழ் உள்ள மண்டபம் ஒன்றின் மேற்குப் புறமாக ஜனாதிபதி சில உதவியாளர்களுடன் உரையாடிக் கொண்டு போவதை மோனிக்கா கண்டாள். அவர்களை கண்டும் காணாதது போல் போவதற்கு அவள் முயற்சித்தாள்.

கிளின்டனுடன் பேசிக்கொண்டு போனவர்களில் எவலின் லைபர்மேன் என்பவரும் ஒருவர். ஊழியர்களின் பிரதித் தலைவரான அவர் மோனிக்காவுக்கு பிடித்தமில்லாத ஒருவர். அவளைக் காணும் போதெல்லாம் சந்தேகக் கண்ணுடன் தான் பார்ப்பது வழக்கம். ஆகவே அவரை நெருங்குவதையோ அவருடன் உறவாடுவதையோ மோனிக்கா தவிர்த்து வந்தாள்.

அன்றைய தினமே அவளுடைய வீட்டு தொலைபேசிக்கு கிளின்டனுடைய அழைப்பு வந்தது. (வருவாள்)

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!


இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞ இ. நிஷாந்தினி, 93, வாசல வீதி, கொழும்பு-13.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## பாப்பா முரசு சிறுகதை

# நரியின் தற்பெருமை

**இரை** தேடியபடி, குளக்கரையின் வழியே சென்று கொண்டிருந்த நரி, குளத்தில் இரை தேடியபடி நின்று கொண்டிருந்த நாரையைப் பார்த்தது.

நாரையின் தோற்றத்தைப் பார்த்ததுமே அதற்குச் சிரிப்பு வந்தது. உடனே அது "ஹேஹ்..ஹே...." என்று சத்தம் போட்டுச் சிரித்தது.

நாரை திரும்பி நரியைப் பார்த்தது.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டது.


"உன் அவலட்சணமான, குறைபாடுள்ள தோற்றத்தைக் கண்டேன். சிரிப்பு வந்து விட்டது!" என்றது நரி.

"என்னது! அவலட்சணமான குறைபாடுள்ள உடம்பா? யார் சொன்னது?" என்று கோபத்துடன் கேட்டது நாரை.

"வேறு யார் சொல்வார்? நான்தான் சொல்லுகிறேன்!"

"என் உடம்பில் எங்கே அவலட்சணம் உள்ளது? எங்கே குறைபாடுள்ளது?"

"முதலில் அவலட்சணத்தைச் சொல்லுகிறேன். ஒரு வடிவமே இல்லாத வளைந்து உப்பிய உடல். அந்த உடலுக்குச் சிறிதும் பொருத்தமில்லாத நீண்ட கழுத்து. அந்தக் கழுத்துக்குச் சிறிதும் பொருந்தாத தடித்த, நீண்ட அலகு. அந்த மொத்த உடம்புக்கும் பொருந்தாத தட்டைக் குச்சி போன்ற நீண்ட கால்கள்."



நாரைக்குக் கண்கள் சிவந்தன.

அடுத்து குறைபாடுகளைச் சொல்லுகிறேன். எனக்கு நான்கு கால்கள். உனக்கோ இரண்டே கால்கள்தான். எனக்கு இரண்டு காதுகள் உண்டு. உனக்கோ காதுகளே இல்லை. என் வாயில் பற்கள் உண்டு. உனக்குப் பற்களே கிடையாது. எனக்கோ நீண்ட வால். உனக்கோ குட்டி வால். எனக்கோ பெரிய கண்கள். உன் கண்களோ மிகச் சிறியவை. இப்போது தெரிந்து கொண்டாயா உன்னிடமுள்ள குறைபாடுகளை?" என்று சொல்லி விட்டு மீண்டும் சிரித்தது நரி.

நாரைக்கோ ஆத்திரம் பொங்கியது.

"இதோ பார்! இவற்றை அவலட்சணமென்றோ, குறைபாடென்றோ சொல்லாதே. இது இயற்கையின் படைப்பு. உன்னையும் சரி, என்னையும் சரி, காரணமில்லாமல் இறைவன் படைத்திருக்க முடியாது. அதை முதலில் புரிந்து கொள்!" என்றது நாரை.

"ஏய்! என்ன இயற்கை, இறைவன் என்று கதை விடுகிறாய். இப்படிச் சொன்னால் நான் நம்பி விடுவேனா. இப்போது எனக்கு இன்னொரு சந்தேகம் வருகிறது. உன் தலைக்குள் மூளை இருக்குமா என்றுதான்...!" என்று சொல்லி 'இடி... இடி...' என்று சிரித்தது.

"உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று எரிச்சலுடன் கேட்டது நாரை.

"உன்னைப் போல் இன்னும் இரண்டு, மூன்று நாரைகளைப் பார்த்தால், இந்தக் குறைபாடுகளை நினைத்து, நினைத்துச் சிரித்தே எனக்குப் பைத்தியமும் பிடித்து விடும் என்று சொல்லி விட்டு மேலும் சிரித்தது.

நாரைக்கு இப்போது வருத்தம் உண்டாயிற்று. நரி, தன்னைப் பார்த்து கேலி செய்து சிரிக்கும் அளவுக்கு நம் உடல் குறைபாடுடையதுதானா என்ற சந்தேகம் அழுத்தமாக உண்டாயிற்று.

அது குனிந்து தன் உடலை ஒரு முறை பார்த்தது.

பிறகு நிமிர்ந்த போது-

மிக அருகே, கையில் வில் அம்போடு ஒரு வேடன் நிற்பதைக் கண்டது.

அந்த வேடன் நரியையும், நாரையையும் மாறி மாறிக் குறிபார்த்துக் கொண்டிருந்தான்.

நாரை பதட்டமடைந்தது.

அது நரியைப் பார்த்து, "நரி! ஒரு வேடன் நம்மைக் குறிபார்த்துக் கொண்டிருக்கிறான். தப்பி ஓடு!" என்று கத்தியது.

அதற்கு நரி, "ஆ! பெரிய கண்டுபிடிப்பு! வேடன் வந்தது எனக்குத் தெரியாதா. அவனிடமிருந்து தப்பிக்க எனக்கு ஆயிரம் வழிகள் தெரியும். முதலில் உடல் குறைபாடுள்ள நீ தப்பிக்கும் வழியைப் பார்!" என்று கூறிவிட்டு நரி சிரிப்பாய் சிரித்தது.

நாரை இறக்கைகளை அடித்து விர்ர்ரென்று நீரிலிருந்து செங்குத்தாகக் கிளப்பி, விரைவாகப் பறந்தது.

சட்டென்று நரிக்கு ஒரு அதிர்ச்சி.

ஐயோ! நாரை பறந்து விட்டது. இனிமேல் இங்கு நின்று கொண்டிருந்தால் ஆபத்து!' என்று நினைத்து அது ஓட முயன்ற போது-


வேடனிடமிருந்து புறப்பட்டு வந்த அம்பு, நரியின் உடலைத் துளைத்தது.

"ஹாவ்!" என்று கத்தியபடி நரி துள்ளி விழுந்து ரத்த வெள்ளத்தில் துடித்தது.

அப்போது அது நினைத்தது:

'என்னை முழு நிறைவுடன் இருக்கிறேன் என்று நினைத்தேன். ஆனால், எனக்கும் ஒரு குறைபாடு இருந்துள்ளது. அதுதான் இறக்கை. அவை இருந்திருந்தால் இந்நேரம் நானும் பறந்து தப்பி இருப்பேன். ஹூம்... என்ன செய்வது..? என் தற்பெருமைக்குப் பரிசாக இப்போது மரணத்தையே தேடிக் கொண்டேன்' என்று நினைத்தது.

அடுத்த வினாடி அது உயிரை விட்டது.






## வழியைச் சொல்லுங்கள்

அணிலாரிடம் பென்சில் இருக்கிறது. எழுதுவதற்குக் கொப்பி குழப்பமான பாதைக்கு அப்பால் கிடக்கிறது. நீங்கள் கொப்பி இருக்கும் இடத்திற்கு சரியான வழியைச் சொல்லி விடுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **25.03.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **336**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 334

**பரிசுக்குரியவர்:**
ஹெரான் பெட்னிகோ விக்டர்,
சென். தோமஸ் கல்லூரி, கல்கிசை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| என். நி..பான், நேகம முஸ்லிம் மகா.வித்., நேகம்பஹ. | எ..ப். கிளின்டன், ஸ்ரீ. முத்துமாரியம்மன் வித்., கம்பளை. |
| த.விதுரன், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | ஜெ. தயாழினி, சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், லிந்துல. |
| எஸ். ஜீவானந்தன், த.ம.வி., தலவாக்கெலை. | தனிகாசலம் தசரதன், மட்/சந்திவெளி சி.வி.வி., முறக்கொட்டான்சேனை. |
| செல்வநாதன் சுதாகர், தவசிகுளம், வவுனியா. | ஷர்மினா கிரிதரன், சைவ மங்கையர் கழகம், கொழும்பு-06. |
| கே.சந்திரகுமார், முருகனூர், வவுனியா. | பாத்திமா நஸ்ஹா ரிஸ்வி, முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டிய. |

## ரோபர் ப்ளைஸ்



**பா**ர்ப்பதற்கு வெட்டுக்கிளி போல் தோற்றமளிக்கும் இதன் பெயர் 'ரோபர் ப்ளைஸ்'. இது பூச்சிகளைப் பிடித்து அப்படியே உறிஞ்சிச் சாப்பிட்டு விட்டுத் தூக்கிப் போட்டுவிடும்.

இந்த 'ரோபர் ப்ளைஸ்' பறந்து கொண்டே இரைதேடும். இதன் பெரிய கண்களில் எந்தப் பூச்சிகளும் தப்ப முடியாது. ஒரு சின்ன அசைவை வைத்தே அந்தப் பூச்சியைப் பின்தொடர்ந்து அப்படியே 'லபக்'கென்று பிடித்து விடும்.

கூர்மையான மூக்கும் கால், கைகளில் அமைந்துள்ள வலுவான முடிகளும் இது இரைகளைப் பிடித்துக் கொள்வதற்கு மட்டும் பயன்படாமல், அவற்றினால் தாக்குதல் ஏற்படா வண்ணம் தன்னைப் பாதுகாக்கவும் பயன்படுகிறது.

## முக்கியமானவர்களின் உறைவிடம்

வத்திக்கான் நகர் –
போப்பாண்டவரின் அலுவலக இல்லம்.

வெள்ளைமாளிகை –
அமெரிக்க ஜனாதிபதியின் இல்லம்.

10 டவுனிங் தெரு –
இங்கிலாந்துப்பிரதமரின் இல்லம்.

ராஷ்டிரபதி பவன் –
இந்திய ஜனாதிபதியின் இல்லம்.

பக்கிங்காம் மாளிகை –
எலிசபெத் மகாராணியின் மாளிகை.

போகர் மாளிகை –
இந்தோனேஷியத் தலைவரின் மாளிகை.

எலிஸி மாளிகை –
ஃபிரெஞ்சுத் தலைவரின் மாளிகை.

## செய்து பாருங்கள்



### பொம்மை தபேலா

**தேவையானவை:**

தேங்காய்ச் சிரட்டை 2, 4 மீட்டர் நீளமான சின்னக் கயிறு, வெள்ளைக் கடதாசி, கறுப்பு ஸ்கெட்ச் பேனா, பசை, பெரிய வளையல்கள் 2, கத்தரிக்கோல்.

**செய்முறை:**

1. தேங்காய்ச் சிரட்டையில் உள்ள தும்புகளைச் சுத்தம் செய்து கொள்ளவும்.
2. படத்தில் இருப்பது போல் கயிற்றினால் 2 தேங்காய்ச் சிரட்டைகளிலும் மாற்றி மாற்றி இணைந்து அடிப்பாகத்தில் முடிச்சுப் போட்டுக்கொள்ளவும்.
3. தேங்காய்ச் சிரட்டைகளின் வாய் அகலத்திற்கு வெள்ளைக் கடதாசியில் வைத்து 2 வட்டம் வரைந்து அவற்றை வெட்டி எடுத்து விடவும்.
4. நடுவில் ஒரு சின்ன வட்டத்தை ஸ்கெட்ச் பேனாவால் வரைந்து கொள்ளுங்கள்.
5. இந்தக் கடதாசி வட்டங்களைத் தேங்காய்ச் சிரட்டையின் மேல் வைத்து பசையால் ஒட்டி விடவும்.
6. மீதியுள்ள கயிற்றை வளையல்களில் சுற்றி அதை ஸ்டாண்ட் போல் செய்து இந்த தபேலாக்களை வைத்து விடுங்கள்.

## விடுகதைகளும் விடைகளும்

1. உயரமாக இருக்கும்; கடித்தால் கோபப்படாமல் இனிக்கும் தியாகி. அது என்ன?
2. பச்சை நிறப்பெட்டிக்குள் சுவையான பழங்கள் நிறைய இருக்கும். அது என்ன?
3. கல கல எனச் சிரிப்பான்; அவனை எடுத்தால் அவனோடு பேசலாம். அவன் யார்?
4. சிவப்புச் சட்டைக்காரன்; உள்ளே வந்தவரை வெளியே அனுப்புவான். அவன் யார்?
5. நோயில்லை நொடியில்லை; ஆனால் அடிக்கடி வந்து ஊசிபோடுவான். அவன் யார்?
6. காற்றடித்தால் கடலில் உருவாகும். அது என்ன?
7. கடலில் கிடைக்கும் பொருளைக் கொண்டு வீட்டை அலங்கரிப்பர். அது என்ன?
8. பச்சை நிறக்காய்க்குள் வெள்ளை நிற மணிகள். அது என்ன?
9. அவன் பாடினான் அதுவும் பாடியது. அது என்ன?
10. உயரத்தில் இருப்பவன் நகரத்தைக் கொதிக்க வைப்பான். அவன் யார்?

### விடைகள்

| | |
|---|---|
| 1. கரும்பு | 2. பலாப்பழம் |
| 3. தொலைபேசி | 4. தபால் பெட்டி |
| 5. நுளம்பு | 6. அலை |
| 7. சங்கு | 8. வெண்டிக்காய் |
| 9. எதிரொலி | 10. சூரியன் |

## எப்படி வந்தது?

**அ**மெரிக்காவில் உருளைக்கிழங்கை டிடி என்றும் அழைப்பார்கள்.

உருளைக்கிழங்கிற்கு இந்தப் பெயர் எப்படி வந்தது. என்று தெரியுமா?

உருளைக்கிழங்கைச் சாப்பிடலாம் என்று கண்டுபிடித்த அமெரிக்கரின் பெயர் டிடி. அதனால் தான் உருளைக் கிழங்கிற்கு டிடி என்ற பெயர் வந்தது.

இப்போதும் அமெரிக்கவில் சிலர் உருளைக் கிழங்கை டிடி என்று அழைத்து வருகிறார்கள்.

## திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 18

க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

'இந்த ரிப்போர்ட்டில் ஒரு முக்கியமான விஷயம்' என்று ஆரம்பித்த லேப் டெக்னீஷியனை சற்றே கவலையோடும் பயத்தோடும் பார்த்தார் ஃபாரன்ஸிக் ஆபீஸர்.

"சொல்லுங்கள்..."

"இது ஒரு 'ஆர்கானிக்-டாக்ஸிங்' சம்பந்தப்பட்ட பாய்ஸன் கண்டெய்னர். வெளிநாடுகளில் மட்டுமே இது மாதிரியான கண்டெய்னர்கள் கிடைக்கும். அதுவும் சில முக்கியமான கிரிமினல்ஸ்கிட்டேயிருந்துதான் இதை வாங்க முடியும்.

இந்த கண்டெய்னர்களுக்கு 'ஸ்லீப் கில்லர்' என்கிற செல்லப்பெயரும் உண்டு. ஏர்கண்டிஷனர்களுக்குள்ளே இதை ஃபிக்ஸ் பண்ணிவிட்டால், பன்னிரெண்டு மணி நேரத்திற்குள் முழுதும் ஆவியாகி, அறைக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் அத்தனை பேர்களையும் அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போதே தீர்த்துக் கட்டிவிடும். வேண்டாதவர்களைத் தீர்த்துக்கட்ட வெளிநாடுகளில் இந்த கண்டெய்னர்கள் மிகவும் பிரபலம்..."

ஃபாரன்ஸிக் ஆபீஸர் கேட்டார்: "இது மாதிரியான பாய்ஸன் கண்டெய்னர்களை உபயோகப்படுத்தி தமிழ் நாட்டில் யாராவது கொலை செய்யப்பட்டிருக்கிறார்களா?"

"திருச்சியில் ஒரு தொழில் அதிபர் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஏர்க்கண்டிஷனரில் வைக்கப்பட்ட பாய்ஸன் கண்டெய்னர் மூலமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்..."

"கொலையாளி பிடிபட்டானா?"

"ம்... பிடிபட்டதாய் ஞாபகம்... உங்களுக்கு முழுத் தகவல்கள் வேண்டுமென்றால் ஃபைலைப் பார்த்துதான் சொல்ல வேண்டும்..."

"ப்ளீஸ்..."

லேப் டெக்னீஷியன் உள்ளே போய் ஒரு பத்து நிமிஷ அவகாசத்துக்குப் பிறகு, ஒரு பெரிய ஃபைலோடு வந்து உட்கார்ந்தார்.

தாள்களைப் புரட்டி சாணி நிறத்தில் கற்றையாய் இருந்த பேப்பர்களை அள்ளி, அவைகளின் மேல் பார்வையைப் போட்டார்.

"சம்பவம் இரண்டு வருஷத்துக்கு முன்பு, நவம்பர் மாதம் இருபத்தியாறாம் தேதி நடந்திருக்கிறது. கொலையான நபர் பெயர் மோகனரங்கம் திருச்சியில் பெரிய புள்ளி. கொலைக்குக் காரணம் பிசினஸ் தகராறு கொலையாளியின் பெயர் ரெமி என்கிற கிருஷ்ணன்..."

ஆச்சார்யா, பங்கஜ் கொலைகளுக்குக் காரணமான அந்த தீவிரவாதக் கும்பலைப் பிடிக்கணும்.

கிரிக்கெட் அணியின் காப்டன் நரேஷ் தெய்வாதீனமா அந்த பாய்ஸன் கண்டெய்னர் விவகாரத்திலிருந்து தப்பிச்சுட்டார். அந்த பாய்ஸனுக்கு அவர் பலியாகியிருந்தா நிலைமை இன்னமும் மோசமாப் போயிருக்கும்... யார்க்கு எந்த நேரத்துல என்ன ஆபத்து வரும்ன்னே சொல்ல முடியலை.

மார்பில்-புரளும் டை, கலைந்த கிராப், கண்களைக் கவ்வியிருந்த குளிர் கண்ணாடி.

கமிஷனர் கை குலுக்கி வரவேற்றார்.

"வெல்கம் மிஸ்டர் விவேக்...! ஹி ஈஸ் சார்லஸ்- அஸிஸ்டண்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ். இந்த சிகப்பு வணக்கம் கேஸில் உங்களுக்கு உதவியா இருக்கப் போகிறவர்..."

"ப்ளீஸ் மீட் யூ.." மூன்று பேரும் அறைக்குள் போய் நாற்காலிகளுக்குச் சாய்ந்தார்கள்.

விவேக் சில விநாடி மௌனத்துக்குப் பிறகு சார்லஸை ஏறிட்டான்.

"இதுவரைக்கும் யாரும் பிடிபடவில்லை..?"



நாம ஏதாவது பண்ணியாகணும். இந்த விபரீதக் கொலைகள் இனியும் நடக்காமே ஒரு முற்றுப் புள்ளி வெச்சாகணும்..."

"ஸார்...! இனிமே எந்த அசம்பாவிதமும் நடக்காது ஸார். எல்லா ப்ளேயர்கஸுக்கும் டைட் செக்யூரிடி கொடுத்து இருக்கோம். நம்பிக்கைக்குகந்த போலீஸ் ஆபீஸர்ஸ் தவிர வேற யாருமே ப்ளேயர்ஸ் பக்கத்துல போக முடியாது..."

"இந்தப் பாதுகாப்பை எத்தனை நாளைக்கு இப்படியே கொடுத்துட்டிருக்க முடியும்...? மத்த ப்ளேயர்ஸ் அவங்கவங்க சொந்த மாநிலத்துக்குப் புறப்பட்டுப் போக வேண்டாமா...?"

"ஸார்...! அதுக்குள்ளே கொலையாளிகளைப் பிடிக்கப் புதுசா வியூகம் ஒண்ணை போட்டாகணும். நீங்க ஏதோ ஒரு அதிரடி நடவடிக்கை எடுக்கப் போறதா சொன்னீங்களே ஸார்..?"

"நான் நடவடிக்கை எடுத்துட்டேன்..."

"என்ன நடவடிக்கை ஸார்...?" குரலில் ஆர்வம் சிதறக் கேட்ட சார்லஸைப் புன்னகையோடு பார்த்தார்.

"க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸர் மிஸ்டர் விவேக்கை இந்த கேஸில் இன்வால்வ் பண்ணச் சொல்லி, சி.பி.ஐ. உத்தரவு. நானும்

"இல்லை..."

"சந்தேகப்படற நபர்களையாவது லிஸ்ட் பண்ணியிருக்கீங்களா?"

"இல்லை..."

"இன்வெஸ்டிகேஷன்ல என்ன ப்ராக்ரஸ்? எனி யூஸ்ஃபுல் பார்ட்டி குலர்ஸ்...?"

"ஸாரி ஸார்...! சம்பவங்கள் எல்லாம் மின்னல் வேகத்தில் நடந்துட்டதால யாரையும் சஸ்பெக்ட் பண்ண முடியலை. ஒரு தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த முரளி கோஷ்டி பைரவிங்கிற பெண்ணை மனித வெடி குண்டாக தயார் பண்ணி, ஏர்போர்ட்டுக்கு அனுப்பியிருந்தாங்க.

பட் உளவுப்படை மூலமா விஷயத்தைத் தெரிஞ்சுகிட்ட விஜிலன்ஸ் ஸ்க்வாட் போலீஸ், அந்த பைரவியை மடக்கி-அவளை ஒரு வீட்ல கொண்டு போய் ரகசியமா வெச்சுகிட்டு, முரளி கோஷ்டியை பொறி வெச்சுப் பிடிச்சுட்டாங்க. கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா அணியின் சுழற்பந்து வீச்சாளர் பங்கஜ் கொலையுண்டதுக்கு நாங்க காரணம் கிடையாது'ன்னு தீர்மானமா சொல்லிட்டாங்க.

அதே மாதிரி பெண் நிருபர் மாதிரி வேஷம் போட்டுக்கிட்டு வந்த பால சுப்ரமணியனும் நடந்த கொலைகளுக்குக் காரணமானவன் அல்ல... கிரிக்கெட் ப்ளேயர்ஸை

"கொலையாளி தான் பண்ணின கொலையை ஒத்துக் கொண்டானா?"

"ம்... ஒத்துக் கொண்டான். கேஸ் கோர்ட்டில் இருக்கிறது. ஆள் இன்னமும் போலீஸ் காவலில் வைக்கப்பட்டு இருக்கிறான். ஜாமீன் கொடுக்கப்படவில்லை..."

"அதுவும் இதே மாதிரியான பாய்ஸன் கண்டெய்னர்தானா...?"

"ஆமாம்..."

"அந்த பாய்ஸன் கண்டெய்னர் அவன் கைக்கு எப்படிக் கிடைத்தது என்று சொல்லியிருக்கிறானா?"

"வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப் பட்டது என்கிற தகவலை மட்டும் சொல்லியிருக்கிறான்..."

"அந்த ரெமி இப்போது எந்த ஊர் சிறைச்சாலையில் இருக்கிறான்...?

"திருச்சி மத்திய சிறையில் தான்..." லேப் டெக்னீஷியன் நீட்டிய ரிப்போர்ட்டை வாங்கிக் கொண்டு யோசனையோடு எழுந்தார் ஃபாரன்ஸிக் ஆபீஸர்.

★★★

போலீஸ் கமிஷனர்க்கு முன்பாய் கெட்டியான கவலை முகத்தோடு நின்றிருந்தார் அஸிஸ்டண்ட் கமிஷனர் சார்லஸ். சுவரில் மகாத்மா காந்தியும் ஜவஹர்லால் நேருவும் போட்டோ பிரேமுக்குள் ரகசியம் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தியாவின் வரைபடம் ஃபோன் காற்றுக்குச் சத்தமில்லாமல் ஊஞ்சலாடியது.

"மிஸ்டர் சார்லஸ்..."

"ஸார்..."

"கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பங்கஜ் கொலையுண்டது நம்ம நாட்டையே உலுக்கியிருக்கு. டெல்லியில் இருக்கிற ப்ரைம் மினிஸ்டர் அலுவலகத்திலிருந்து, தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு ஃபோன் கால்ஸ் வந்துட்டேயிருக்கு. நிலைமை மேலும் மோசமாகறதுக்குள்ளே

அவர்கிட்ட பேசிட்டேன். நவ்ஹி ஈஸ் ஆன் த வே... இன்னும் பத்து நிமிஷத்துல இங்கே வந்துடுவார். வீ ஆர் கோயிங் டூ டிஸ்கஸ் த மேட்டர்..."

சார்லஸ்ஸின் முகத்தில் பரவசம் பரவியது. "ஸார்... இந்தப் பிரச்சனைக்கு மிஸ்டர் விவேக் ஈஸ் த ரைட் பர்ஸன்! சர்வம்தச அமைப்பில் அவர் நிகழ்த்தியிருக்கிற சாதனைகள் போலீஸ் துறைக்கே பிரமிப்பைக் கொடுத்திருக்கு.."

"மிஸ்டர் சார்லஸ்! விவேக் இந்த சிகப்பு வணக்கம் கேஸை எப்படி டீல் பண்ணப் போறார்ன்னு தெரியலை? நீங்க அவர்க்கு உதவியாயிருந்து அவர் கேக்கிற தகவல்களைக் கொடுத்து உதவ வேண்டியது உங்க கடமை..."

"எஸ்... ஸார்..."

சார்லஸ் தலையாட்டிக் கொண்டிருக்கும் போதே மேஜைமேல் இருந்த இண்டர்காம் மெலிதாய் ஊளையிட்டது. கமிஷனர் எடுத்தார்.

"எஸ்..."

"...."

மலர்ந்தார். "ஈஸிட்! அனுப்பி வையுங்கள். அவர்க்காகத்தான் இங்கே காத்துக் கொண்டிருக்கிறோம்." கமிஷனர் ரிஸீவரை வைத்துவிட்டு சார்லஸ்ஸை ஏறிட்டார்.

"விவேக் ஈஸ் கம்மிங்..."

இருவரும் எழுந்து அறைக் கதவுக்கருகே வந்து, விவேக்கை வரவேற்கிற வகையில் காத்திருக்க, இரண்டு நிமிஷங்களின் முடிவில் விவேக் பார்வைக்குக் கிடைத்தான்.

வெள்ளை பேண்ட், வெள்ளை சர்ட்,

பக்கத்தில் இருந்து பார்க்கணும்ங்கிற ஒரே ஒரு குறிக்கோள்தான் அவனுக்கு! மற்றபடி அவனுக்கு எந்த இன்டென்ஷனும் கிடையாது..."

விவேக் தன் இடது கை விரல்களால் மோவாயைத் தாங்கினான்: "ஸோ... இது வேற ஒரு கோஷ்டியோட வேலையாய் இருக்கலாம்னு நீங்க நினைக்கறீங்க...?"

"எஸ்... ஸார்..."

"மறுபடியும் அந்த கோஷ்டியைச் சேர்ந்தவங்க உங்களை டெலிபோன்ல காண்டாக்ட் பண்ணலையா...?"

"பண்ணலை. இருபத்திநாலு மணி நேரம் டயம் கொடுத்து இருக்காங்க... அதுக்குள்ளே அவங்க சொன்ன கோரிக்கைகளை நிறைவேத்தலைன்னா விபரீதங்கள் தொடரும்ன்னு சொல்லியிருக்காங்க..."

"அந்த அவகாசத்துக்குள்ளே கொலைக் குற்றவாளிகளை நாம கண்டுபிடிச்சாகணும் இல்லையா...?"

"எஸ்... ஸார்..."

விவேக் யோசனையோடு மேஜையின் மேல் கிடந்த 'சிகப்பு வணக்கம்' ஃபைலை எடுத்து சில பக்கங்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு, மறுபடியும் சார்லஸை ஏறிட்டான்.

"ஆச்சார்யா கொலை செய்யப்பட்டது, செல் போனில் வெச்சிருந்த பட்டன் சைஸ் டைனமைட் ப்ளாஸ்ட்டானதால்... இல்லையா...?"

"ஆமா ஸார்.."

"பட்டன் சைஸ் டைனமைட்டை அவரோட செல்போனில் ஃபிக்ஸ் பண்ணினது யார்ங்கிற உண்மையைக் கண்டுபிடிக்க இதுவரைக்கும் என்னென்ன முயற்சிகளை எடுத்திருக்கீங்க...?"

"ஸார்.. அந்தப் பொறுப்பை 'பாம் ஸ்க்வாட்' எத்துக்கிட்டாங்க. ரிப்போர்ட் இன்னும் வரலை..."

(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி. சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# சத்திய ஒப்பந்தம் 28

அவன் மனம் அவர்களுக்காக இரக்கம் காட்டியது. திடீரென்று ஒரு குடிசையின் உள்ளிருந்து அலறியபடி ஒரு பெண் ஓடிவந்தாள். அவளை விரட்டிக் கொண்டு இன்னொரு ஆண், குடிசையிலிருந்து வெளிப்பட்டான்.

இவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. குடிசையிலிருந்து வெளியேறிய பெண்ணை, தலைமுடியைப் பிடித்து இழுத்து, அடிக்க ஆரம்பித்தான் அந்த ஆண். பதிலுக்கு அவளும் போராடினாள். 'போடா, வாடா' என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினாள். ஒரு குழந்தை அழுதபடி அவர்களைச் சுற்றி வந்தது.


என்ன கொடுமை இது என்று அவன் மனம் பதைத்து அந்த ஆணை கண்டிக்க முற்பட்டபோது, இந்த நிகழ்ச்சிகளை சாதாரணமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு கிழவிசொன்னாள்: "அது புருஷன், பொண்டாட்டி தகராறுங்க. நீங்க போங்க" என்றாள்.

அதற்குள் பஸ் வந்துவிடவே, வேடிக்கை பார்த்தபடியே பஸ்ஸில் ஏறினான். பஸ் அங்கிருந்து புறப்படும் வரையிலும் அந்தப் புருஷன், பொண்டாட்டி சண்டை நடந்து கொண்டே இருந்தது.

## விடையில்லா வினாக்கள்

பஸ்ஸில் உட்கார்ந்த பிறகும் அவன் மனம் அமைதி அடையவில்லை. 'நம்முடைய மண வாழ்க்கை தான் இப்படி என்றால் தெருவோரக் குடிசையில் வாழும் புருஷன், பொண்டாட்டி கூட அமைதியில்லாமல்தான் வாழ்கிறார்களா?

இப்போது நடந்த சண்டையின் முடிவு என்னவாகும்? அடிபட்ட மனைவி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவாளா? அல்லது அவனை நிரந்தரமாகப் பிரிந்து விட முடிவு செய்வாளா? அவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கை தொடருமா? இப்படித்தொடரும் இந்த வினாக்களுக்கெல்லாம் அவனால் விடை



கண்டுபிடிக்க முடியவில்லை.

கோர்ட்டுக்குச் சென்றான். தன் தரப்பு வக்கீலைச் சந்தித்து, "இந்த வழக்கு எப்பதான் சார் முடியும்? சீக்கிரமா முடிச்சு, விவாகரத்து வாங்கிக் கொடுங்க சார்" என்றான்.

வக்கீல் அவனுக்கு ஆறுதல் கூறினார். "நம்ம பக்கம் தான் ஜெயிக்கும்" என்று நம்பிக்கையூட்டினார்.

வழக்கு மன்றத்தின் இன்னொரு பகுதியில் அவனது மனைவியும், மனைவியின் பெற்றோரும் அவர்களது வக்கீலோடு ஆலோசனை செய்து கொண்டிருந்தனர்.



இவன் தரப்பு வக்கீலைப் போலவே அந்தத் தரப்பு வக்கீலும் அவர்களுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டிருந்தார். "நீங்க எதுக்கும் கவலைப் படாதீங்க. நான் ஜெயிச்சுக் காட்டுறேன்".

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இவனுக்கு சிரிப்பு வந்தது. 'எதை ஜெயிக்கப் போகிறார்? வழக்கில் ஜெயித்து அவர் எதைக் கைப்பற்றப் போகிறார்? ஜெயித்த பிறகு கைப்பற்றுவதற்கு என்னுடைய மனம் என்ன, வீடா, நிலம் போன்ற ஜடப் பொருளா? சேராத இரண்டு மனங்களைச் சேர்த்து வைக்க, அரசியல் சட்டத்தின் எந்த செக்ஷனுக்கு சக்தி இருக்கிறது? இங்கே ஜெயிக்க வேண்டிய தும், விட்டுக் கொடுக்கப்பட வேண்டியதும் இரண்டு மனங்கள் அல்லவா? மனம் விரும்பாத இரண்டு பேரையும் நீதிபதியின் தீர்ப்பு வாழ வைத்து விடுமா?'

வழக்கம்போல இவர்களது வழக்கும் நீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இரண்டு தரப்பு, வக்கீல்களும் வாதாடினார்கள். வழக்கு அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

சோர்ந்து போய், வீடு திரும்ப பஸ் ஏறினான். இப்போது காலையில் பஸ் ஏறிய பஸ் நிறுவனத்தின் எதிரில், அந்தக் குடிசைப் பகுதியைப் பார்த்தான்.

இந்நேரம் காலையில் சண்டை போட்டுக் கொண்ட தம்பதிகள் பிரிந்திருப்பார்களா? என்று எண்ணியபடிய பார்வையைச் செலுத்தினான்.

அங்கு அவனுக்கு அதிர்ச்சிதான் காத்திருந்தது. காலையில் எலியும், பூனையுமாகப் பகையாளிகளைப் போல ஒருவருக்கொரு வரை, அடித்தும், திட்டியும் சண்டை போட்டுக் கொண்ட குடிசைத் தம்பதிகள், காலையில் அப்படி ஒரு நிகழ்ச்சி நடத்ததற்கான சுவடே தெரியாமல் சந்தோஷமாக உட்கார்ந்திருந்தார்கள்.

அந்த மனைவி கால்களை நீட்டியபடி உட்கார்ந்து தன் கால்களின் இடுக்கில் ஒரு கையகலக் கண்ணாடியை வைத்து, தலைவாரிக் கொண்டிருந்தாள். அவள் அருகில் அவளது புருஷன்.

குழந்தைக்கு ஏதோ மிட்டாய் வாங்கிக் கொடுத்து விட்டு, அது தன் சட்டையெல்லாம் எச்சில் ஒழுக சாப்பிடுவதைப்பார்த்து, தன் கைகளால் அந்த எச்சிலைத்துடைத்துக் கொண்டிருந்தான்.

இப்போது அந்த இளைஞனுக்கு எதுவுமே புரியவில்லை. அந்தத் தம்பதிகளுக்குள் காலையில் நடந்த சண்டையின் உக்கிரமும், இப்பொழுது அவர்கள் கண்ணெதிரே சிரித்துபேசிக் கொண்டிருப்பதையும் பார்த்து, இவர்களுக்குள் சமரசம் எப்படி ஏற்பட்டது? எந்த வக்கீல் இவர்களுக்காக வாதாடினார்கள்? எந்த நீதிபதி, இ.பி.கோ.வின் எத்தனையாவது செக்ஷன்படி இவர்கள் சேர்ந்து வாழ உத்தரவிட்டார்? புரியவில்லை.

இவர்களுக்குள் ஏற்பட்ட சண்டையும், சமாதானமும் வெளியிலிருந்து வேறு ஒருவரால் ஏற்படுத்தப்பட்டவை அல்ல? அவர்களுக்குள் அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்டது.

## மனமாற்றம்

குடும்ப வாழ்வு என்பது சட்டங்களும், சாஸ்திரங்களும் கட்டிக் காப்பவை அல்ல. ஒன்றுபட்ட இரண்டு மனங்கள், ஒருவரை ஒருவர் மனதார நம்புகிற மனங்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளுகிற சந்தோஷங்கள் தான்.

இந்த சந்தோஷத்தைக் கொடுக்க எந்தச் சட்டத்தாலும் முடியாது. பிரச்சனைகளை விவாதிக்க வேண்டியது, விசாரிக்க வேண்டியது, வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க வேண்டியது, சம்பந்தப்பட்ட கணவன், மனைவி இருவரின் மனங்களே தவிர, மற்றவர்கள் அல்ல என்பதைப் புரிந்துகொண்டான்.

அடுத்து அவன் போக விரும்பியது கோர்ட்டுக்கல்ல, தன் மனைவியின் வீட்டிற்கு, பேச வேண்டியவைகளை தானே நேரடியாகப் பேசி, பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைக்க முடிவெடுத்தான்.

(அனுபவங்கள் தொடரும்)

# வீரன் தான் பிரீன் 24

**தமிழில் ப.ராமஸ்வாமி**

**ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்— 1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழச்சிமிகு உண்மை வரலாறு இது.**

கொலைக்கு அஞ்சாத பாதகர்கள் தனக்கு இருபக்கத்திலும் அமர்ந்திருந்ததால், எந்த நிமிஷத்தில் என்ன அபாயம் நேருமோ என்று தான் பிரீன் மிகவும் எச்சரிக்கையாகக் கவனித்துக் கொண்டிருந்தான். கொலைகாரர்கள் தன்னைக் கண்டு வந்தார்களா, அன்றித் தாங்களாகவே வேறு வேலைகளுக்காக வந்தார்களா என்பது புலனாகவில்லை.

ஆனால் இருவர் அவன் பக்கத்தில் வந்து உட்காரக் காரணம் என்ன? இவ்வாறு அவனுக்குப் பல யோசனைகள் தோன்றின. என்ன நேர்ந்தாலும் அவன் போராட்டத்திற்குத் தயாராயிருந்தான். உயிரோடு பகைவர்கள் கையிலே சிக்காமல் அரும்போராட்டம் செய்து எதிரிகளில் பலரைச் சுட்டுக்கொன்ற பின்பே தன் உயிரை விடவேண்டும் என்று அவன் வெகு காலத்திற்கு முன்பே தீர்மானித்திருந்தான்.

மணி 11க்கு மேலாகிவிட்டது. கேர்பியூ உத்தரவு 12 மணி முதல் ஆரம்பம். டிராம் வண்டி பார்னல் ஸ்குவயர் பக்கம் சென்றது. அப்பொழுது இரண்டு பக்கத்திலும் இருந்த கொலைஞரும் சட்டைப் பைக்குள் கைவிட்டு எதையோ எடுக்க முயன்றனர். தான் பிரீனுக்கு விஷயம் நன்றாக விளங்கிவிட்டது. உடனே அவன் தன் றிவோல்வரையும் சரேலென்று உருவிக் கையில் பிடித்துக் கொண்டான்.

அவனுடைய நோக்கமும் பகைவர்களுக்குப் புலனாயிற்று. மேற்கொண்டு அங்கு தங்கினால் உயிருக்கு அபாயம் நேரும் என்று தெரிந்து கொண்டு வண்டியின் உட்புறத்திலிருந்த மூன்று கொலைஞரும், திடீரென்று எழுந்து ஒருவர்மேல் ஒருவர் விழுந்து வெளியே குதித்து ஓடினர். தான் பிரீன் அவர்களைத் தொடர்ந்து சென்றான். ஆனால் அந்த இடத்தில் சுடுவது அபாயம் என்று கருதினான்.

அவன் சுட்டிருந்தால், வண்டியிலுள்ளவர்கள் கலவரமடைந்திருப்பார்கள். குண்டுகளின் ஓசை கேட்டுப் பக்கத்தில் எங்கேனும் நிற்கும் பீலர்களும் பட்டாளத்தாரும் அங்கு வந்து கூடியிருப்பார்கள். அதனால் தான் பிரீனுடைய உயிருக்கே ஆபத்து வந்துவிடும். தெருவில் பல மக்கள் நடமாடக்கூடிய தெருவாக இருந்தது. தான் பிரீன் தெருவில் குதித்து, செயின்ட் ஜோசப் மாளிகைக்குப் பக்கம் அருகேயிருந்த ஒரு தெருவுக்கு விரைந்து சென்றான்.

அவன் செல்வதைக்கண்ட கொலைஞர் மூவரும் வேறொரு தெருவின் வழியாகச் சென்று, அவனைத் தெருவின் மறுபுறத்தில் மறித்துக்கொள்ளலாம் என்று கருதி ஓடினர். தான் பிரீன் அவர்களுடைய சூழ்ச்சியையறிந்து, அத்தெருவின் வழியே செல்லாமல் திரும்பி வந்து, தெருவில் அப்பொழுதுதான் வந்து நின்ற வயிட்ம் ஹாலுக்குச் செல்லும் டிராம் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

அப்பொழுதுதான் அவனுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி சிந்திக்கச் சிறிது அவகாசம் ஏற்பட்டது. மூன்று பகைவர்களும் ஓடும் பொழுது வண்டியிலிருந்த மற்ற இருகொலைஞரும் ஏன் அவர்களுக்கு உதவிக்கு வராமல் இருந்துவிட்டனர் என்பது புலனாகவில்லை.

தங்கள் உயிருக்கே அபாயம் நேரும் பொழுது, அவர்கள் தோழர்கள் என்றும் வேண்டியவர்கள் என்றும் கவனித்து உதவிசெய்ய வருவது வழக்க மில்லைப் போலும்! கூலிக்கு மாரடிக்கும் ஒற்றர்களுக்குப் பொறுப்பேது? ஒழுக்கமேது?

அந்த ஐவரில் ஒருவன், பின்னால் தான் பிரீனும் தோழர்களும் டிரம்கொண்டராவில் இருந்ததை எப்படியோ அறிந்து பின்தொடர்ந்தான். அவன் அன்றிரவே தான் பிரீனுக்கு பின்னால் வேறொரு டிராம் வண்டியிலேறிச் சென்று புலன் விசாரிக்கவுங் கூடும். தான் பிரீன் மறுநாள் காலையில் டிரீஸியிடம் தனக்குநேர்ந்த விபத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது அவன், 'உன்காலம் நெருங்கிவிட்டது போலிருக்கிறது: நீ இனி மேல் வெகுநாள் தப்பியிருக்க முடியாது!" என்று வேடிக்கையாகக் கூறினான். ஆனால் பின்னர் இருவரும் இவ்விசயத்தைக் குறித்துத் தீர்க்கமாக ஆராய்ச்சி செய்தனர். அன்று முதல் வெளியே செல்வதானால் இருவரும் சேர்ந்து செல்லவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டனர். அன்று சனிக்கிழமை. இருவரும் காலையிலேயே பிட்ஜெரால்டு அம்மையின் வீட்டுக்குச் சென்று பகல்முழுவதும் படுத்துறங்கி ஓய்வெடுத்துக் கொண்டனர். அந்த அம்மையும் திப்பெரரியைச் சேர்ந்தவளாதலால் அவர்களை அன்புடன் ஆதரித்தாள்.

மறுநாள் அவர்கள் அரைமைல் தூரத்திலிருந்த கெயிலிக் தேகப்பயிற்சிச் சங்கத்தின் தலைமைக் காரியாலத்திற்குச் சென்று பொழுதைப் போக்கினர். அங்கிருந்த நண்பர்களுடன் அவர்கள் சீட்டு விளையாடவும் சந்தர்ப்பம் கிடைத்தது. பந்தயப் பணம் அதிகமாயில்லாததால் தான் பிரீன் பணம் வைத்து விளையாடுவதில் சலிப்படையவில்லை. சீட்டாட்டத்திலுங்கூட அதிஷ்டம் அவன் பக்கத்திலிருந்தது. அவன் கையில் கொஞ்சம் பணம் சேரவும் இது ஒரு வழியாயிற்று. அச்சமயத்தில் அவனுக்குப் பிற்கால வேலைகளைப்பற்றி மனதில் முடிவான திட்டம் எதுவுமில்லை. தலைமைக் காரியாலயத்தார் அவனையும் அவன் நண்பர்களையும், சில போலியான காரணங்களைச் சொல்லி, டப்ளினிலேயே பலநாள் தாமதிக்கும்படி செய்தனர். தலைவர்கள் முன்னால் நின்று வழிகாட்டத் தயாராயிருக்கவில்லை; மற்றவர்கள் சுயேச்சையாக வேலை செய்யவும், வழிவிடவில்லை.



டின்னி லேஸி தான் பிரீனை எதிர்த்துத் திப்பெரரியில் தான், தலைமைக் காரியாலயத்தார் பொறுப்பேற்க அஞ்சினதோடு, தான் பிரீனை விரைவாக ஊருக்கு அனுப்பத் தயாராயில்லை. ஆனால் தொண்டர்கள் அடிக்கடி பயிற்சி செய்து வந்ததால், அதிக தைரியத்தையும் பயிற்சிகளையும் பெற்று வந்தனர். அவர்களுடைய குடியரசுப் படை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தது.

சுடச்சுட ஒளிருப்பொன்போல், துன்பங்களை அனுபவித்து, அனுபவித்து அப்படை மிக்க வல்லமையுடையதாகிவிட்டது.

11ம் திகதி மாலை தான் பிரீன் டிரீஸியை அழைத்துக் கொண்டு சினிமா ஒன்றைப் பார்க்கச் சென்றான். அதுபொழுது போக்காகயிருக்கும் என்று அவன் கருதினான். கொட்டகையில் டிரம் கொண்டரா வைச் சேர்ந்த பிளெமிங் குமாரிகள் இருவரையும் இமன் ஒபிரியனுடைய மனைவியையும் சந்தித்தான். அவர்கள் அவனையும் டிரீஸியையும் கண்டு திடுக்கிட்டுப்போயினர். இருவரையும் பிடிப்பதற்குத் தேசம் முழுவதும் பட்டாளங்களும் பீலர்களும் இரவு பகலாய் அலைந்து தேடிக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் தலைநகரத்தில் பல்லாயிரம் மக்கள் கூடியுள்ள கொட்டகையில் வந்து நின்றது பெரும் வியப்பாகவே தோன்றியது.

அவர்களை எந்தச்சிப்பாய் கண்டாலும் சுட்டுத்தள்ளும்படி சர்க்கார் உத்தரவு போட்டிருந்தது. தான் பிரீன் அந்தப் பெண்களோடு குடும்ப நலன்கள்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான் காட்சிமுடிந்த பின்பு எல்லோரும் சேர்ந்து வெளியேறினர்.

கொட்டகை வாயிலில் ஒற்றன் ஒருவன் நின்றுகொண்டு வெளியே போகிறவர்களைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடன் அவன் யாரென்பது தான் பிரீனுக்குப் புலனாகிவிட்டது. சில தினங்களுக்கு முன்னால் டிராம் வண்டியில் அவன் பக்கத்தில் உட்கார்ந்த இருவரில் அவன் ஒருவன் அவன் தான் பிரீன் எப்பொழுது வருவான் என்று எதிர்பார்துக் கொண்டே நின்றான். அந்த இடத்திலேயே அவனை சுட்டுத்தள்ளிவிடலாம் என்று தான் பிரீன் யோசனை செய்தான். ஒரு வேளை அவனுக்கு உதவியாக வேறு ஒற்றர்கள் அங்கு வந்திருக்கலாம் என்பதாலும் பொது மக்கள் அண்மையில் இருந்ததாலும் அவன் துப்பாக்கியை வெளியே எடுக்காமல் ஒன்றும் அறியாதவன் போல் அப்பெண்களுடன் போய்விட்டான்.

அவர்கள் ஐவரும் டிரம் கொண்டராவுக்குச் செல்லும் ஒரு டிராம் வண்டியில் ஏறிக்கொண்டனர். தான் பிரீன் மட்டும் கடைசியாக ஏறினான். பெண்களில் ஒருத்தி அவனைப் பார்த்து 'அதோ, ஒரு நண்பன் தொடர்ந்து வருகிறான்!' என்று மெதுவாகக் கூறினாள். தான் பிரீன் திரும்பிப்பார்க்கையில் பழைய சாக்கன்தான் அவனைத் தொடர்ந்து வந்து வண்டியிலேற முயன்று கொண்டிருந்தான். ஆனால் தான் பிரீன் கால்சட்டைப் பையிலிருந்த றிவோல்வரில் கைபோட்டுக் கொண்டிருந்த நிலையைக்கண்டு அவன் மெதுவாக பின்வாங்கி நகர ஆரம்பித்தான். நகர்ந்து கூட்டத்தோடு கூட்டமாய் மறைந்து விட்டான். அந்த இடத்திலேயே தான் பிரீன் அவனைச் சுட்டிருந்தால், பின்னால் அவனால் இடையூறு நேர்ந்திராது. ஆனால் பெண்களின் மத்தியிலே நின்று போராடினால் எதிரியின் குண்டுகள் அவர்களையும் காயப்படுத்துமே என்றெண்ணி அவன் அந்த நேரத்தில் ஒற்றனை உயிரோடு விட்டுவிட்டான்.

அப்பொழுது உயிர் தப்பிய அந்தக் கயவனே அன்றிரவு தான்பிரீன் டிரம் கொண்டராவில் தங்கியிருந்த இடத்தில் சிப்பாய்கள் சென்று தாக்குவதற்குக் காரணமானான்.

அன்றிரவு 11 மணிக்குத் தான் பிரீனும், டிரீஸியும் பிளேமிங் குடும்பத்தாருடைய வீட்டிலிருந்து புறப்பட்டனர். வாயில் வழியாகச் சென்றால் பொலிஸ் ஒற்றர்கள் ஒரு வேளை கவனித்து விடக் கூடும் என்று அவர்கள் கொல்லைப்புறமாகவே வெளியேறினர். சந்திரனின் ஒளி மிகப் பிரகாசமாயிருந்தது. அருகேயிருந்த ஒரு தோட்டத்திற்குள்ளே சென்று அவர்கள் மேற்கொண்டு எங்கு போகலாம் என்பதைப் பற்றி யோசித்தனர். திருமதி பிட்ஜெரால்டின் வீடும். கரோலன் என்ற நண்பருடைய வீடுமே அவர்கள் அன்றிரவு தங்குவதற்கு ஏற்ற இடங்கள். முடிவாக கரோலனுடைய வீட்டை நோக்கியே அவர்கள் புறப்பட்டனர். வழியில் டோல்கா-நதியின் மேல் கட்டப்பட்டிருந்த ஒரு பாலத்தைக் கடக்க வேண்டியிருந்தது. அப்பாலத்தின் மேல் செல்லும் பொழுது அவர்கள் வெகுதூரத்தில் இராணுவ லொறிகள் ஓடிக் கொண்டிருந்த ஓசையைச் செவியுற்றனர். அப்பொழுது 'கேர்பியூ' உத்தரவு அமுலில் இருந்ததால் 12 மணிக்கு மேல் யாராவது தெருவில் வருகிறார்களா என்று பார்ப்பதற்கு இராணுவத்தார் சுற்றிக் கொண்டிருந்தனர். அதற்கு வெகுநேரத்திற்கு முன்பே தெருக்களில் ஜனநடமாட்டம் நின்று போய்விட்டது.

தான் பிரீன் எப்போழுதும் கரோலனுடைய வீட்டுக்கு இரவு 11 மணிக்கு முன்பே போய்விடுவது வழக்கம். ஆனால் இந்தத் தடவை அங்கு சேரும்பொழுது மணி 11.30 ஆகிவிட்டது. வீட்டில் வெளிச்சமொன்றும் காணப்படாமையால் வீட்டிலுள்ளவர்கள் உறங்கிவிட்டனர் என்று தெரிந்து. தான்பிரீனும், டிரீஸியும் சந்தடி செய்யாமல் மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே புகுந்தனர். அவர்கள் எந்த நேரமும் தங்குவதற்காக மேல்மாடியின் பின்புறத்தில் நாற்றுக்கூட்டத்தின் பக்கம் ஓர் அறையில் படுக்கை முதலானவை போடப்பட்டிருந்தன. அவர்கள் வீட்டிலுள்ளவர் எவரும் அறியாமலே அங்கே சென்று படுத்துக்கொண்டனர்.

இரண்டு பேர்களும் ஒரே படுக்கையில் படுத்துக் கண்களை மூடிக்கொண்டு உறங்க முயன்றனர். ஆனால் உறக்கம் வரவில்லை. (பயணம் ...தொடரும்)

---

# அரங்கம் அந்தரங்கம்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 49**

**கவியரசு கண்ணதாசன்**



**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

—கண்ணதாசன்—

"சேடியரும் இல்லாமல் தேன்மொழியே இவ்வனத்தை நாடிவரப் பெற்றதுவும் நான் செய்த பாக்கியமோ?" என்று உச்சி முகர்ந்து மெச்சிப் புகழ்கிறேன்.

வாயெல்லாம் தமிழாக வாய்க்கப் பெற்ற கம்பனின் மகனுக்கு, அவள் வாயெல்லாம் தேனாக ஊற்றித் தருகிறாள்.

அடங்கா மயிலூர்தி ஐயனைப் பணியும் பக்தனைப் போல், நான் பணிகிறேன்; குளறுகிறேன்; பெருமூச்சு விடுகிறேன்.

சிருஷ்டி கர்த்தாவின் ஆனந்த ரகசியத்தை அறிந்து கொள்ளுகிறேன்.

எப்போதும் பேசுகின்ற அவளது விழிகள் இப்போது பேச முடியாமல் மூடிக்கிடக்கின்றன.

என்ன பேசுவது என்று தெரியாமல் இதழ்கள் புலம்புகின்றன.

வேதனை கலந்த சுகத்தில் தன்னை மறந்த ஒரு லயம்.

"அமராவதி!"

-நான் அழைக்கவில்லை. நான் அழைத்தால் ஆத்திரத்துடனா அழைப்பேன்?

மன்னவன் குரல்!

சே! என்ன மோசமான கனவு?

இன்பக் கனவு காணப்போய், அதுவும் துன்பத்தில் முடிகின்ற கதைதானா?

வேண்டாம், இந்த நாடே வேண்டாம்!

இங்கே மனித உணர்வுகளே மதிக்கப் பெறுவதில்லையே! காதல் உணர்வுகள் எப்படி மதிக்கப் பெறும்?

"வாம்மா கமலா! நாம் வேறு வானத்துக்குச் சென்று விடுவோம்!"

இப்போது நானும் கமலாவும் மேலை நாட்டு வானத்தில் பறக்கிறோம்.

அந்தச் சிமிழிலே அடைப்பட்டுக் கிடக்கும் ஷேக்ஸ்பியரின் பேனாவைத் தட்டி எழுப்புகிறோம்.

நான் ரோமியோ, அவள் ஜூலியட்!

கனிந்தும் கனியாத ஆப்பிள் பழத்தைப் போல, சிவப்பும் பசுமையும் மாறி மாறித் தோன்றும் கன்னங்கள்.

விளை பயிர்களுக்கு நடுவிலே கிடைக்கும் அழகான வெள்ளைக் காளான் போல் பளபளவென்றிருக்கும் கூரிய நாசி.

பிரஞ்சு மன்னர்களின் மதுச்சாடியின் கழுத்தைப்போல், வளவளப்பாக இருக்கும் அழகான கழுத்து.

மாதர்கள் நகை வைக்கும் சிறிய பாத்திரம் போல், பொன்னிறத்தில் ஜொலிக்கும் மார்பகங்கள்.

மாளிகை ஓவியத்தை மூடிக் கிடக்கும் திரைச் சீலையைப் போல், அந்த மார்பகங்களை மூடிக்கிடக்கும் மெல்லிய மஸ்லின் துணிகள்.

இவள் பாதங்கள் வலிக்குமே என்று பூமியே கருணை வைத்துத் தன்னை மென்மையாக மாற்றிக் கொள்ளும் அளவுக்கு மெல்லிய பாதங்கள்.

அவள் பேசுவது அவளுக்கு மட்டுமே கேட்கும்; கூர்ந்து கேட்டால் எனக்கு மட்டுமே கேட்கும்.

இசைக் கருவிகள் யாசகத்துக்காக இறைஞ்சி நிற்கும் அந்த இனிய குரலால் அவள் என்னை அழைக்கிறாள்.

இதோ, சிருஷ்டி தேவனின் மற்றொரு ரகசியத்தையும் நான் கண்டு கொள்கிறேன்!

என்ன இது?

நாங்கள் இருவருமே மரணப் படுக்கையில் இருக்கிறோம்!

இந்தக் காதலும் தோல்விதானா?

அம்மா, கமலா! நாம் இங்க இருக்க வேண்டாம் வா! அராபிய வானத்துக்குப் பறந்து போய் விடுவோம்.

சல்லாத் துணியில் பாதி முகத்தை மறைத்த லைலா!

அந்த வெள்ளை உடம்புக்குக் கருப்புத் துணிதான் எவ்வளவு அழகு!

எந்த மேகமும் பூரணச் சந்திரனை இவ்வளவு லாவகமாக மூட முடியாது.

இது பத்தாம் நாள் நிலவு.

நீண்ட ஹுக்காவில் இருந்து வெளிவரும் வெள்ளைப் புகை, லைலாவின் வீட்டிலிருந்து வெளியே வருகிறது.

சந்திரன் இருக்கும் இடத்தில் வெண் மேகமும் இருக்கும் என்பதை, லைலாவின் தந்தை நினைவுபடுத்துகிறார்.

தூரத்தில் பேரீச்சை மரங்களுக்கு நடுவே நின்றபடி நான் குரல் கொடுக்கிறேன்.

"என் அன்புக்குரியவளே, லைலா!"

அப்போது பாலைவனத்தின் வறண்ட காற்றுக் கிடையே ஒரு குளிர்ந்த காற்று வருகிறது.

"கயஸ்!"

"இந்த ஏழைப் பைத்தியக்காரனை எவ்வளவு பேர் கேலி செய்கிறார்கள்? பார்த்தாயா லைலா!"

"கூண்டுக்குள் இருக்கும் இந்தப் பாலைவனப் பறவையை, எவ்வளவு பேர் குத்திக் துன்புறுத்துகிறார்கள். பார்த்தாயா கயஸ்!"

"நீண்ட தூரம் பயணம் செய்ய, ஒட்டகத்தில் போய் நான் நிழல் தேடிக் கொண்டிருக்கிறேன் லைலா!"

"எனது பேரீச்சை மர நிழலில் உனது ஒட்டகம் மட்டுமே தங்க முடியும் கயஸ்!"

"உன்னை அடைவதற்கு முன்னால் நான் உயிர் விட்டு விடுவேனோ, லைலா?"

"ஓர் உயிர் மட்டும் தனியாகப் போவதற்கு நம் சரித்திரம் எழுதப்படவில்லையே, கயஸ்!"

"பாரசீகத்தின் தோட்டங்களெல்லாம் நம்மைக் காணாமல் வாடிப் போய்விட்டன லைலா!"

"நாம் சிரிக்கும் போதெல்லாம் தோட்டங்கள் சிரிக்கின்றன; நாம் வாடும் போதெல்லாம் தோட்டங்களும் வாடுகின்றன; நாம் மீண்டும் சிரிப்போம் கயஸ்!"

"எனது நம்பிக்கை நட்சத்திரம் ஊசலாடுகிறதே, லைலா...?"

(அந்தரங்கம் வரும்)

# உளமனம்



"அகல்யா...!" தலைமை அதிகாரியின் அழைப்பு.

"மிஸ் அகல்யா...!" புதிதாக அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டிருப்பவர்களின் வேண்டுதல்.

"அகல்யாம்மா....!" அலுவலக பியோனின் கெஞ்சுதல்.

"ஹலோ அகல்யா!" அலுவலகத்திற்கு தேவையின் பொருட்டு வருபவர்களின் முகஸ்துதி.

கிட்டத்தட்ட ஒரு பம்பரம் போல் சுழன்று நானாவித 'அகல்யா'க்களையும் பவ்யமாகவும், நட்பாகவும், பணிவுடனும் எதிர்கொண்டு கொண்டிருந்தாள் அகல்யா.

சகலரும் விரும்பத்தக்க பழக்கவழக்கமும், சாந்தமான தோற்றமும், கொண்ட அகல்யாவை, அந்த அலுவலகம் அவள் ஒரு 'ரிஷப்சனிஸ்ட்' என்பதையும் மறந்து முக்கியத்துவம் கொடுத்து வைத்திருந்தது. என்னவோ, அவளது திறமைக்காகவே. சக ஊழியர்கள் அவளை 'ஓல் ரவுண்டா' என்று கூட சமயத்தில் அழைப்பதுண்டு.

ஆனால் அவளது கணவன் ராகவனுக்கு, சமூகத்தில் தன் மனைவிக்குக் கிடைக்கும், அந்தஸ்தும், மதிப்பும் அவனிடம் உள்ள ஏதோ ஒன்றை பறித்து கொண்ருப்பது போல் தோன்றியது.

தினமும் அவளது பெயருக்கு வரும் அலுவலக சம்பந்தமான கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள், சில வேளைகளில் தொலைபேசியின் அன்புத்தொல்லைகளுக்கு கட்டுபட்டு உணவையும் மறந்து ஓடுவது! சமயத்தில் அலுவலக காரையே அனுப்பி அழைத்துச் செல்வது, சில நாட்களில் பார்ட்டி, விருந்து, பிரியாவிடை, கொஃன்பரன்ஸ் என வீட்டுக்கு தாமதமாக வருவது போன்ற பல சம்பவங்களால் தன் மனைவி அகல்யா தன்னைவிட்டு மிகவும் விலகிப் போவதாக உணர்ந்தான்..... அதனால் அவன் மனதில் புதுவித குழப்பம் ஏற்பட்டு அமைதி யிழந்து, அகல்யா மீது ஒரு வித வெறுப்புத் தன்மையை அவனுக்குள் ஏற்படுத்தியிருந்தது.

நாளுக்கு நாள் வாக்குவாதங்கள், மனக்கசப்பு; கருத்து வேறுபாடு, போன்றவற்றால் அந்த நான்கு சுவர்கள் இருதுருவங்களாகப் பிளந்து, விரும்பத்தகாத மௌனத்தின் உச்சஸ்தாயியை அடைந்திருந்தது.

உலகில் யாரால் தான் எல்லாவற்றையும் உணர்ந்து கொள்ள முடியும்? கழுதையைக் கட்டி மேய்ப்பவன், அது சமயத்தில் தன்னையே உதைக்கக்கூடும் என்பதை மட்டும் புரிந்து கொண்டால் போதுமா? அது சுமப்பதற்கும் பயன்படக்கூடியது என்பதை உணர வேண்டாமோ?

வாழ்க்கையில் ஒருவருடன் இணைந்து விடும் பொழுது அவர் வெறுப்பைக்கண்டு விலகுவதை விடுத்து, விருப்பை கண்டு அணுகுதல் நன்றல்லவா?

ஒட்டு மொத்த சமூகமே வியந்து இரசிக்கின்ற அகல்யாவுக்கு, அவளது குறைகளை எண்ணிப்பார்க்க வேண்டும் என்கின்ற அவசியம் இருக்கவில்லை. இந்த சமயத்தில் யாராவது ஒருவரால் தன்மீது பிரஸ்தாபிக்கப்படுகின்ற அதிருப்தி கூட பொறாமையாகவோ, அல்லது தாளான்மையாகவோ தான் இருக்கக்கூடும் என்று தான் எண்ணத்தோன்றும்.

அந்தக் கொடூரமான சூழ்நிலையில் நயமாக சமூகத்தை எதிர் கொள்ள வேண்டிய இரு மனங்களாலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

ராகவனால் தனது உள வேட்கையை தன் மனைவி அகல்யாவிடம் தனது கௌரவம், தன்மானம் கருதி வெளிப்படுத்துவதற்கு தயக்கமாகவே இருந்தது. அகல்யாவுக்கும் ஏறக்குறைய அதே மனோநிலைதான். கணவன், மனைவி என்கின்ற நம்பகமான உறவுகளுக்கிடையில் கூட தன்மானமும், கௌரவமும் சரிந்து விடாது காக்கப்பட வேண்டும் என எண்ணுவது தான் மனித வர்க்கத்தின் உயரிய கொள்கைகளா?

ஆனால் அந்த உயரிய கொள்கையிலிருந்து சிறிதே விடுபட்டு அகல்யாவே முதலில் ராகவனை அணுகினாள்.

"பிளீஸ் ராகவன்..... சொல்லுங்க நான் என்ன தப்பு பண்ணிக் கொண்டிருக்கேன்னு எனக்கே தெரியல. ஒரு வார்த்தை.... இது

**எம்.சண்முகராசா-தலவாக்கலை.**

தான் நீ பண்ணிக் கொண்டிருக்கிற தப்புன்னு சொல்லிட்டிங்கன்னா என்னால் திருத்திக்க முடியுமான்னு சிந்திக்கலாம்!" கண்களை மூடி உள்ளத்தால் விழித்துக் கொண்டிருந்த ராகவனின் கால்களைப் பிடித்து சிறிது உசுப்பினாள்.

அகல்யாவின் அந்த வார்த்தைகளை ராகவனின் செவிகள் மட்டுமல்ல உடல் தசைகளின் அணுக்கள் ஊடாகவும் இதயத்தை எட்டியது.

ஏதோ வேண்டாத பொருள் ஒன்றை நிர்ப்பந்தம் கருதி கைகளில் சுமந்திருந்து விட்டு சந்தர்ப்பம் வாய்த்தபோது தூக்கி கிடாசி விட்ட திருப்தியில் அகல்யா ராகவனின் பதிலுக்கு காத்திருந்தாள்.

அகல்யாவின் கேள்விக்கு ராகவனிடத்தில் திடமான பதில் ஒன்று காத்திருக்கத்தான் செய்தது.

சமூகத்தில் நற்சான்றுடன் திகழ வேண்டுமென்பதற்காக அவளுக்குள் ஏற்படும் அவசரமும், பரபரப்பும், பவ்யமும், பண்பும், இனிய வார்த்தைகளும், சாந்தமும், குழைவும் அக்கறையும், பற்றும், பாசமும் ஏன் தன்னுடன் உறவாடும்போது ஏற்படுவதில்லை. என் இதயத்தையும் அவளே சுமக்க வேண்டும் என எண்ணுவது தவறல்லவே. ஒரு வேளை எடுத்துக்கூறினால் இதயத்தை என்ன? தன்னையே சுமக்கக்கூடும் தான். உந்துதலாலும் உணர்த்துதலாலும் கிடைக்கப்பெறும் அன்பும் ஆதரவும் விலை கொடுத்து வாங்கும் கடைச்சரக்குக்கு சமமானவையோ விலை கொடுத்தால் நம்முடையது இல்லாவிட்டால் வியாபாரியினுடையது தானே? மதிப்பும், அன்பும் ஒருவரிடத்தில் ஒருவருக்கு தானாக ஏற்படவேண்டும். அப்படியானால் அகல்யாவின் தவறென்பது ராகவனைப்பொறுத்த வரைக்கும் உணர்த்தத்தகுந்ததல்ல. புரிந்து கொள்ள வேண்டியவையே. தனக்கு வேண்டிய மதிப்பையும் அன்பையும் பிச்சைக்காரனைப் போல் கேட்டா பெறமுடியும்?

மௌனத்தினூடே மனதுக்குள் விளைந்த பதிலுக்கு இறுக்கமான முற்றுப்புள்ளியொன்றை வைத்தான் ராகவன்.

"கால்களைபிடித்து கதறினால் கூட கயவர்களுக்கு இரக்கம் வராது" என்பது இராகவனை பொறுத்தவரை எவ்வளவு உண்மையென சயன நிலை புத்தரின் சிலை போல் இருந்த ராகவனின் மௌனமே உணர்த்தியது.

அகல்யாவின் மனதில் இராகவனின் மௌனம் "கயவன்" என்னும் கறையைப்படியச் செய்திருந்தது.

உலகம் தன்னை எவ்வளவோ நேசிக்கும் போது இந்த ஊனத்திடம் அவமானப்பட்டோமே... நேசிப்பவர்களுக்கு மட்டும் உள்ளம் இருந்தால் போதுமா? நேசிக்கப்படுபவருக்கு உள்ளம் இருக்க வேண்டாமா? நேசிப்பதற்குரிய உள்ளம் இருக்க வேண்டாமா? வினாடிகள் பல நகர்ந்தும் இராகவனிடமிருந்து பதில் எதுவும் வராதபோது. அவனது கால்களைப் பிடித்த தன் கரங்களை நொந்த வண்ணம் அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

ஆனால் மனஸ்தாபங்கள் மட்டும் நிலையாகிக் கொண்டிருந்தது. ●

# சிறுகதை

ஒரு கதை எழுத வேணும் என்னத்தை எழுதலாம் திரும்ப திரும்ப காதல் கதைகளை எழுதிக்கொண்டு இருந்தாலும் இவர் இதுக்குத்தான் என்று முத்திரை குத்திவிடுவார்கள்.

"தம்பி நெடுகலும் உந்த லவ்வை எழுதாமல் நல்ல புராணக்கதையள்ளையும் எழுதன்!" அம்மா அந்தக்காலத்து பொன்னியின் செல்வனின் இருந்து தினமுரசு வரை நிறைய புத்தகங்கள் வாசிப்பா. ஐயாவுக்கு உதுகள் சரிவராது. நெடுகக்கோயிலோடையே.

"தம்பி நீ அந்த கம்பசிலை படிக்கிற பெட்டையின்ரை பெயரைப் போட்டு கதை எழுதி அவள் சண்டைக்கு வந்திட்டாளாமே!" ஏன்ரா அயலட்டைக்கை சோலியளை.

"எல்லாம் ஒரு அன்பிலைதானம்மா!"

"என்னடா சொல்லுறாய்?" அம்மா மயங்கி விழாதகுறைதான்.

"பின்னை என்ன ஏதோ வாய்க்குள்ளை நுளையகூடிய பெயராய் இருந்ததாலை போட்டு எழுதினன். இதை எல்லாம் ஒரு பெரிய பிரச்சனை ஆக்கிக் கொண்டு".


இப்போதுதான் பிபிசி முடிந்து, ஐயா றேடியோ நிப்பாட்டி இருந்தார். லைற் ஒரு தடவை மின்னியது. அம்மாவுக்கு தெரியும். அரிக்கன் லாம்பை தீண்டிவைத்தாள்.

"உங்களுக்கு நேற்று கறண்ட் இருந்துதா? எங்கடைபக்கம் இப்ப நாலு நாளாய் இல்லை. எங்களுக்கும் ஒண்டை விட்ட நாளைக்குத்தான் வரும்!" எங்கும் இதுதான் கதை சீரற்ற மின்சாரம். இரு தடவை மின்னியபடி கறண்ட் நின்றது. "கோதாரியிலை போன கறண்ட்" என்றபடி ஐயா கட்டிலில் சரிந்தார். லாம்பை மேசை மீது வைத்து விட்டு மீண்டும் யோசிக்க தொடங்கினேன்.

நொண்டி நாயாக்கும் குலைத்தது. உப்பிடித்தான் ஒரு மைமல் இருட்டுக்கை, பூங்கோதை ஆச்சியிட்டை "எங்கை பாணைத் தாவனணை" என்று கேட்டார் விதானையார்.

"இப்ப நீட்டினன் வேண்டினாய்!" எண்டுது மனிசி. விதானைக்கு ஒண்டும் விளங்கேல்லை. அங்காலை வேலிக்கை பார்த்தால்; நாய் ஒண்டு பாணைவைச்சு பிடுங்கிக் கொண்டு இருந்தது. விசுக்கிவிட்டார் விறகு கட்டையாலை. அண்டைக்கு தூக்கினகால் தான் என்னும் இறக்கவே இல்லை நாய்.

"கொஞ்ச நிஜங்களையும், கொஞ்ச கற்பனையையும் மனதிலை உள்ளதையும் சேர்த்து



குட்டிகுட்டியாய் எழுதேவணும். என்ணத்தை எழுதலாம்?" "சுப்பையாண்ணை பெடியன் பேப்பருக்கு கதை எல்லாம் எழுதுறான் போலை. என்னத்தையேன் கொப்பி அடிச்சுக்கிடிச்சு எழுதுறானோ?" "வாத்தியாருக்கு தன்னர பிள்ளையள் ஒண்டும் படிக்கேல்லை எண்டுறகவலை அதுதான்...." என்று ஐயா நல்ல பதிலடி கொடுத்து இருந்தார். ஐயாவின் குறட்டைச்சத்தம் இப்போ தெளிவாய் கேட்டது நேரம் 11 மணி. எனியாவது எழுதுவம். "அண்ணை தினமுரசுக்கு நானும் ஒரு கதை எழுதிப்போட்டன் ஏன் போடவே இல்லை?" என்று கேட்டான் பக்கத்துவீட்டு சின்னத்தம்பி. எனக்கு சிரிப்பாய் இருந்தது. "தம்பி நானும் ஆரம்பத்தில் ஒருவருசமாய் எழுதினன் போடவேயில்லை. ஆனலும் முயற்சியை கைவிடேல்லை. ஆனால் முந்தின கதையளின்ரை தரம்குறைவு எண்டுறதை பிறகு தான் புரிஞ்சு கொண்டன். எழுத எழுதத்தான் தரம் வரும். நீ தொடர்ந்து எழுது. எழுத்தாற்றலையும் வளர்த்துக் கொள்ளலாம். நிச்சயமாய் போடுவினம்" என்றேன்.

. கதைக்கு ஒரு தலையங்கம் வைத்தேன் "சிறுகதை" "ஐயோ, ஐயோ, அம்மா.....!" யாரோ கத்திகேட்டது "ம் கதை எழுதின மாதிரித்தான்!" ஐயாவும் எழும்பிவிட்டார். அம்மாவும் தான். "இஞ்சரப்பா எங்கையோ கள்ளன் புகுந்திட்டான் போலை" இப்ப எல்லாம் பொழுதுபட்டாலே எங்கும் ஒரே கள்ளர் பயம்தான். படலையை திறந்து ஒழுங்கைப் பக்கம் வந்தேன்.

"தனியாய் போகாதை மோனை பக்கத்து வீட்டு வீரசிங்கம் அண்ணையைக் கூப்பிடு"

"சரி"

"வீரசிங்கண்ணை" "வீரசிங்கண்ணை" அவர் வீட்டுக்குள் கதைப்பது கேட்டது.

அப்படியே வளிக்கணைப்பதும் தெரிந்தது. "பெயருக்குத்தான் வீரசிங்கம் மனுசன் பொழுதுபட்டாலே முத்தத்திலையும் இறங்காது. இஞ்சாலை தருமண்ணையை கூப்பிடு தம்பி என்றா அம்மா" தருமண்ணை லாம்பை எடுத்துக் கொண்டு கோடிப்பக்கமாய் போவது தெரிந்தது. "வயித்தை கலக்குது போலை" "ஒரு அந்தரம் ஆபத்துக்கு அயலட்டைக்கை பெடியள் ஆரேன் இருந்தால்த் தானே! எல்லோரும் வெளிநாட்டுக்கு பறந்திட்டாங்கள் ம்" ஐயா பெருமூச்சொன்றை விட்டாள்.

"உது சரிப்படாது" தனியாகேவ வெளிக்கிட்டன். "அவங்கள் கையிலை என்னத்தை கொண்டு வந்தாங்களோ? வெறுங்கையோடை போகாதை தம்பி" அம்மா ஒரு பூரிமட்டையை நீட்டிய போது. "ஏனெனை இது என்ன நாய்க் கடிக்கவே! அவங்கள் துவக்குகள் கத்தியளோடை வருவாங்கள். இதாலை என்ன செய்யிறது. இதை பக்குவமாய் வை. அடுப்புக்கு எரிக்கலாம்" தனியாக நான் போறது அம்மாவுக்கு மனம் கேளாது. தூரத்தில லாம்போடை வாறது தெரிந்தது.

**இணுவில் உத்திரன்**

அடுத்தநாட்காலை கிணற்றடியில் ஒரே அமர்க்களமாய் இருந்தது. அது ஒரு பங்குக்கிணறு. "இராத்திரி என்ன உங்காலைப் பக்கம் கள்ளனாம் என்றார் தருமண்ணை. "எட சீ.......என்னை எழுப்பாமல் விட்டுட்டீங்களே?" என்று கோபித்துகொண்டார் வீரசிங்கத்தார். "ஓம் ஓம் வீரசிங்கத்தார் அந்தகாலத்து சண்டியன்தானே!" என்றார் மணியத்தார். "உந்த கள்ளனுக்கு என்னாலை தான் முடிவு பார்ப்பம் ஒருக்கால்" என்று வீர வசனம் பேசினார் வீரசிங்கத்தார். நான் மனதுக்குள் சிரித்துக் கொண்டேன். இரவு சந்தி வீட்டு முத்துலிங்கத்தாருக்கு நெஞ்சுவலி வந்து கத்தினதும், நானும் சொக்கண்ணையின்ரை பெடியனும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனதும் இவர்களுக்கு எங்கை தெரியப் போகுது?

சிந்தித்துப்பார்த்தேன். நாம் அன்றாடம் எத்தனைவிதமான மனிதர்களை சந்திக்கின்றோம். விதம் விதமான குணங்கள். மனங்கள், .சிந்தனைகள் எவ்வளவு சுவாரசியமான சம்பவங்கள்! இவை கூட ஒவ்வொரு கதைகள் தானே! "சில நிஜங்கள் கூட கற்பனைகளை விட சுவாரசியமாக இருக்கிறது. என்பதை இந்த சிறு சம்பவங்களின்; மன்னிக்கவும் சிறுகதைகளில் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது இல்லையா! ◘

# வல்லமை தாராயோ?



உயர்தரப்பரீட்சையில் தேறியபோது நிவேதனுக்குச் சந்தோஷம் அதிகம் இருந்ததில்லை. ஆனால் பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததும் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. ஆனாலும் அவனை விடவும் எல்லையில்லாப் பூரிப்படைந்த ஒரு ஜீவனுண்டென்றால் அது அவனைப் பெற்றெடுத்த தாயாரேயாகும்.

அந்தத் தாய் அவனது முன்னேற்றத்திற்கு எத்தனை துன்பங்களைச் சுமந்திருக்கிறாள்? எத்தனை வகையான இன்னல்களைக் கடந்திருக்கிறாள் என்பதை நாம் அறிந்தேயாக வேண்டும்.

நிவேதன் சாதாரண பரீட்சைக்குத் தயாரானபோது கட்டடக் கூலித் தொழிலாளியான அவனது அப்பா விபத்தொன்றில் இறந்துபோனார். அவனுடனும் பருவமடைந்த தங்கையுடனும் பதறிப்போனாள் அவனது தாய். படிப்பறிவேயில்லாத அவளினால் என்னதான் செய்துவிடமுடியும்? வீட்டுக்குள்ளே கிடந்து குமுறிக்குமுறி அழத்தான் முடிந்தது. ஆனாலும் வயிறு என்று ஒன்று இருக்கிறதே! அது சும்மாயிருக்குமா என்ன? அதற்கு இரை போட்டால் தானே யாரும் உயிர் வாழமுடியும். இதை உணர்ந்தான் நிவேதன்.

படிப்பை நிறுத்தி கூலி வேலை செய்வதற்கு முன்வந்தான்.

"உன்னைப்படிப்பிக்க வேணுமென்பது உன் அப்பாவின் ஆசை. அதனால் நீ அதை நிறுத்தக் கூடாது!" என்று தடுத்தாள் தாய்.

தன்னைச் சூழவுள்ள வசதிபடைத்த சில சொந்தக்காரர்களிடம் போனாள். தன் நிலமையை விளக்கி உதவிகள் கேட்டாள். எல்லோரும் அவள் நிலைக்குப்பரிதாபப்பட்டார்கள். ஆனால் உதவிபுரியத்தான் யாரும் முன்வரவில்லை. இனியும் யாரிடமும் உதவி கேட்டுப் போவதில்லை என்று நினைத்தாள் அந்தத்தன் மானமுள்ள தாய். அதனால் தனது ஒரே மகளின் காதில் கிடந்த ஒரு சோடித் தங்கத் தோட்டை நிறுத்து விற்றாள். அதன் மூலம் சிறிய அரிசிவியாபாரமொன்றை அவ்வூர் சந்தைக்குள் தொடங்கினாள். வாழவும் விடாத சாகவும் விடாத நாறிப்போன சமூகம் நாலு கதை அப்படியுமிப்படியுமாகக் கதைக்கத்தான் செய்தது. அதையெல்லாம் துச்சமென மறந்து, அவள் வியாபாரத்தில் ஈடுபட்டாள். பாடுபடுவதற்கு அது பலன் கொடுத்தது. அரிசி வியாபாரத்துடன் மரக்கறிகளும் வாங்கிவிற்க ஆரம்பித்தாள்.

"கஷ்டப்பட்டால் தான் முன்னேறமுடியும்?" அவளுக்கும் இது உண்மையாகவே இருந்தது. படிப்படியாக வந்த வருமானங்களினால் படிப்பைத் தொடர்ந்து கொண்டே நிவேதன் தாய்க்கு உதவுவதிலும் சிரத்தையோடு ஈடுபட்டான்.

ஆயிரம் வசதிவாய்ப்புக்கள் இருந்தாலும் அக்கறையென்று ஒன்று இருந்தால்தான் நினைத்த காரியத்தில் ஒருவர் வெற்றியடைய முடியும். வசதிவாய்ப்புக்கள் குறைந்தாலும் நிவேதனுக்கு அக்கறை நிறையவேயிருந்தது. அதனால் தான் அவன் நினைத்திருந்த அந்த உயர்வுக்கான உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தான். அதன் மூலம் இப்பொழுது பல்கலைக்கழகத்திற்கு நுழையும் சந்தர்ப்பமும் வந்திருக்கிறது. அந்தச் சந்தோஷத்தோடும், அமைதியாக சந்தையில் நின்று தாய்க்கு உதவி கொண்டிருந்தான் நிவேதன். பகல் பன்னிரெண்டு மணியாகிக்கொண்டு வந்தது. "தம்பி, நீ வீட்டுக்குப் போ.பிள்ளையும் ரியூசன் முடிந்து வருவாள். நான் சாமான்களைக் கட்டிவைத்து விட்டு வருகிறேன்!" என்று தாய் அவனை வீட்டுக்குப் போகச் சொன்னாள்.

இப்பொழுதுதான் நிவேதனுக்கு அந்த ஞாபகம் வந்தது. இரண்டுமூன்று நாட்களாக அவனது தங்கை சொல்லிக்கொண்டேயிருக்கிறாள்.

"அண்ணா, ரியூசன் முடிந்து வரும்போது பெரிய தொந்தரவாயிருக்கிறது. ஒருவன் தொடர்ந்துவந்து தொல்லைப்படுத்துகிறான். நீ வந்து நின்றால் பிரச்சனையில்லை. ஆனால் இதை அம்மாவுக்குச் சொல்லிவிடாதே. தெரிந்தால் படிக்கவும் அனுப்பமாட்டா!" என்று கேட்டுக்கொண்டாள். "இளைஞர்கள் என்றால் அப்படித்தான் இருப்பார்கள். நீதான் இவைகளைச் சமாளித்து தவிர்த்து நடந்துகொள்ள வேணும்!" என்று தான் தங்கைக்குச் சொல்லிச் சமாளித்தான். ஆனால் இன்று ரியூட்டறி வழியால் போகலாம் என்று புறப்பட்டான் நிவேதன். சந்தையிலிருந்து பிரதான தெருவைக் கடந்து, உள்ளூர் வீதியில் நுழைந்து, ரியூட்டறி வழியால் நடந்து கொண்டிருந்தான். அப்பொழுது தங்கை ரியூசன் முடிந்து போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. அவளுக்கு அருகில் ஓர் இளைஞன் சைக்கிளில் சென்றபடியிருந்தான். தங்கை ஓரமாக ஒதுங்கி ஒதுங்கிச் செல்வதும், அவன் அவளை மிக அருகில் நெருங்கி எதுவோ கதைப்பதுமாகத் தென்பட்டது. நிவேதனுக்கு கோபம் வரத்தான் செய்தது.

ஆனாலும் தானும் ஓர் இளைஞன் என்பதை நினைவில் நிறுத்தி அதைத்தணித்தவனாய், குறுக்குப்பாதையில் நுழைந்து அடுத்த தெருவில் தங்கை வெளிப்படும் போது அவளுடன் போய்ச் சேர்ந்து கொண்டான். தமையனைக் கண்டதும் அருகில்சென்று நடக்கத் தொடங்கினாள் அவன் தங்கை. அப்படியிருந்தும் அந்த இளைஞன் விடவில்லை. தொடர்ந்தும் அவளை உரசுவது போல் சைக்கிளில் வந்தபடியிருந்தான். உடனே அவனை உற்று ஒரு பார்வை பார்த்த நிவேதன் "இது என் தங்கை, இனி மேலும் இப்படிநடந்து கொள்ள வேண்டாம்!" என்று சற்று கோபத்தோடுதான் சொன்னான்.

அந்த இளைஞனோ சிரித்தபடி "நானும் முதலில் தங்கையென்றுதான் சொல்லுவன், பேந்துதான் மற்றதெல்லாம்!" என்றான். நிவேதனுக்கு அடக்கமுடியாமல் ஆத்திரம் வந்தது. அவனது சைக்கிளைப்பிடித்து இழுத்துவிட்டு, "என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான். இதை எதிர்பாராத அந்த இளைஞன் சைக்கிளிலிருந்து தடுமாறி நிலத்திலேயே விழுந்துவிட்டான். விழுந்தவன் சட்டென் எழுந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு விரைந்து

**களுவாஞ்சிக்குடியோகன்-சிட்னி**

மறைந்து போனான்.

நிவேதனின் கனவுலக பல்கலைகழகப் படிப்பிற்கு நான்கு வாரங்களேயிருந்தது. அந்த இரவு, ஊரில் பெரியசெல்வந்தரும் செல்வாக்கு நிறைந்தவருமான நடேசராசாக்கிளாக்கர், அவரது மனைவி ஆகியோர் அவனது வீடு தேடி வந்தார்கள். நிவேதனின் படிப்புச்செலவுமுழுவதையும் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும், படிப்புமுடிந்ததும் அவனை மாப்பிள்ளையாகத் தங்களுக்குத் தரமுடியுமா? என்று அவனின் தாயிடம் கேட்டார்கள். உண்மையில் நிவேதனின் தாய் இதனால் பெருமைப்பட்டுப்போனாள். ஆனாலும் அதை நாசூக்காகத்தவிர்த்து, "படிப்புச்செலவுகளை எப்பாடுபட்டாவது நான் ஏற்றுக்கொள்வதுதான்முறை. தம்பியின் படிப்பு முடிந்ததும் விதி எப்படியிருக்கிறதோ அதன்படி தான் நடக்கும். கல்யாணம் பற்றி அப்பொழுது நாம் கதைப்பதுதான் நல்லது!" என்று ஆறுதலான பதிலை அவர்களுக்குச் சொல்லி அனுப்பினாள்.

"இப்பொழுது நாடு இருக்கும் நிலையில் அதெல்லாம் தேவையில்லை!" இப்படிச் சொல்லித்தான் அவனின் தாய் மறுத்தாள். ஆனால் நிவேதன் விடவில்லை. "நீங்கள் ஓய்வேயில்லாமல் கஷ்டப்படுகிறீர்கள். உங்களுக்கு ஓய்வு தேவை. அதனால் கட்டாயம் வந்துதான் ஆக வேணும்!" என்று கூறி தாயையும், தங்கையையும் ஒரு சிறு சுற்றுலா அழைத்துக் கொண்டு போனான். கொழும்பு, கண்டி என்று சொந்த நாட்டிலேயே அவர்கள் போய் அறியாத சில இடங்களைக் கொண்டு காட்டினான் அத்துடன் தான் பயிலப்போகும் பல்கலைக்கழக வளாகத்தையும் அவர்களுக்குக் காண்பித்துத் திரும்பினான் நிவேதன்.

அன்று அவனது வீட்டில் மகிழ்ச்சியுடன் கூடிய வருத்தமான நாள். அவன் உயர்படிப்புக்குப் பல்கலைக்கழகம் செல்லும் தினம். தாயும், தங்கையும் நிவேதனைப் பிரிவதற்கு மிகவும் சிரமப்பட்டுப்போனார்கள். ஆனாலும் தற்காலிகப் பிரிவு, எதிர்காலத்திற்குத் தேவையான அவசியமான பிரிவு என்பதனால் சந்தோஷமாக அவனை வழியனுப்பி வைத்தார்கள்.

அவன் ஊர் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பயணம்சொல்லி தாய், தங்கையிடமிருந்து விடைபெற்றுப் பயணமானான்.

பல்கலைக்கழக வளாகத்தை அடைந்த அன்றே சிறுதடுமாற்றமென்று அவனைச் சூழ்ந்தது.

தனது தங்கையின் பின்னால் சைக்கிளில் வந்து விழுந்து எழுந்து போன அந்த இளைஞன் அங்கே சீனியர் மாணவனாக நின்று கொண்டிருந்தான். அவனது தலைமையில் சில மாணவர்கள் வந்து நிவேதனை வரவேற்று அழைத்துக் கொண்டு போனார்கள்.

கிட்டத்தட்ட மாதமொன்று கடந்திருந்தது. நிவேதனின் தாயார் சந்தையில் பரபரப்பாக வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுதுதான் அவளைச் அந்தச் செய்தி வந்து எட்டியது. "பல்கலைக்கழகத்தில் 'றாகிங்' பண்ணியபோது, கிட்னியில் பாதிப்பு ஏற்பட்டு நிவேதனின் உயிர்பிரிந்து விட்டதாம், பிரேதம் இப்பொழுது ஊருக்கு வந்து கொண்டிருக்கிறதாம்?" யாரோ வந்து தெரியப்படுத்தினார்கள்.

"மகனே.....!" என்று அந்தத்தாய் கதறிய கதறல் சந்தையை மட்டுமல்ல சர்வ நாட்டையுமே உலுக்கிக் கொண்ருந்தது. ■

# இருவரல்ல - ஒருவர்

## இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

"**நா**ன் என்பது நீயல்லவோ தேவதேவி...." சங்கரியின் காதுக்குள் பாடினான் கோகுலன்.

சிலிர்ப்போடு தலையை அசைத்து, அவன் உதடுகளைக் கன்னத்தில் அழுத்தச் செய்தாள்.

அவன் பிடிக்குள்ளேயே முறுகித் திரும்பி, கைகளால் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, "அப்போ, நீ பண்ணும் முரட்டுத்தனங்களையெல்லாம் இனி நான் செய்யட்டுமா?" என்றாள்.

"உன்னால் முடியாது. அதாவது உன் உடம்புக்குள் இருக்கும் என்னால் முடியாது. என்னுடைய இந்த உடம்புக்குள் இருந்துகொண்டு நீதானே அதையெல்லாம் செய்கிறாய்....?"

"ஐயையோ.... உளறல்.... உளற ஆரம்பித்துவிட்டாயா? கண்ணா! நீ கைகளால் செய்கிற இம்சை போதும்; கதையாலும் செய்யாதே....!" என்று அவன் வாயைப் பொத்திய விரல்களை அவன் கடித்தான்.

கையை இழுத்து உதறிக் கொண்டு சிணுங்கினாள் அவன் மார்பின் நடுவில் விரல்களால் குத்திக் கொண்டே, "கோகுல் கண்ணா! என் விரல்களைக் கடித்ததும் நான்தானா?" என்று சிரித்தாள்.

"உன்னது என்னது ஆவியும், என்னது உன்னது ஆவியும் இன்ன வண்ணமே நின்றாய் என்று உரைக்க வல்லேனே...."

"ஐயையோ!"

"என்ன?"

"அது திருவாய் மொழி. ஆண்டவனுக்குப் பாடியது...."

"அதனாலென்ன, பக்திக்கும் காதலுக்கும் ஒன்றும் பெரிய வித்தியாசமில்லை. நீ, நான் என்ற பேதமின்றிக் கலந்த பின்னால், நீ இன்ன தன்மையில் தான் இருக்கிறாய் என்று சொல்லும் வல்லமை நம்மாழ்வாரைப் போலவேதான் எனக்கும் இல்லை....."

"இது தெய்வக்குற்றம் ஆகாதா?"

சங்கரியின் தலைமுடியைக் கோதி, நெற்றியில் முத்தமிட்டுவிட்டுச் சொன்னான்: "காமத்தீ உள்புகுந்து கதுவப்பட்டிடைக் கங்குல் ஏமத்தோர் தென்றலுக்கிங்கிலக்காய் நானிருப்பேனே...." என்று ஆண்டாள் படும் வாதை, காதலினால் வருவதுதான். அது கடவுளிடம் கொண்ட காதல்.... இது நாம் மனிதர்கள் கொள்ளும் காதல்.... காதல் அடைதல் உயிரியற்கை...."

"அது கட்டுக்குள் அடங்கிடும் தன்மையதோ...?" என்று சொல்லியபடியே சூழலை மறந்தவளாக ஆவேசத்துடன் அவன்மேல் படர்ந்தாள். திருதராஷ்டிர ஆலிங்கனமாக அவனை இறுக்கியதில் அவளுக்கு மூச்சு முட்டியது.



முடியிருந்த அவளது இமைகளின் வழியே கசிந்த கண்ணீர்த்துளியைத் தன் உதடுகளால் ஒற்றியெடுத்தான். அவள் காதருகே சுருண்டிருந்த முடிக்கற்றையைத் தன் சுட்டு விரலில் சுழற்றியபடி, "நொந்ததாடா?" என்றான்.

அவள் தலை வகிட்டில் முத்தமிட்டபடியே, "கண்மணி என்னடா...?" என்று கேட்டான். உதடுகளை அவள் காதருகே கொண்டு போனான்.

"என் உயிரை நீ ஒளித்துவைத்திருக்கும் இடத்திற்குள் என் உடலையும் நுழைத்துவிடப் போகிறேன்!" என்றபடி மேலும் இறுக்கினாள்.

"அப்படியானால் பொறு நானும் உனக்குள் நுழைந்து விடுகிறேன்...." என்று அவளை நெருக்கினான். அவர்களின் இடையே இருந்த காற்று மட்டுமல்லாமல், அவளது உடலினுள் இருந்த காற்றும் வெளியேறியதில் முனகல்கள் பிறந்தன. கேவினாள். பயந்தவனாக அவன் பிடியை மெல்லத் தளர்த்தினான்.

கைகளினுள்ளே அவள் முகத்தை ஏந்தினான். "சங்கரி" என்று இதய அடி ஆழத்திலிருந்து மெல்லக் குரலெழுப்பினான்.

கண்கள் மூடியிருந்தபடியே தலையை 'இல்லை' என்பதாய் அசைத்தாள். அவன் மார்பில் முத்தமிட்டு, இறுக அணைத்தபடி சிறிது நேரம் பேசாதிருந்தாள்.

"சங்கரி"

"ம்"

"திடீரென்று பேச்சு மூச்சற்று எங்கே போய்விட்டாய்?"

"உன்னைக் கொண்டு என்னுள் இட்டேன், எனையும் உன்னில் இட்டேன்.... என்னை மறந்திருந்தால் கிடைக்கும் இன்பத்தினுள் இருந்தேன்...." என்று முனகியபடி பேசியவள், திடீரெனத் தலை நிமிர்த்திப் பாடத் துவங்கினாள்.

"பற்றயர்ந்து அஞ்சிய
பரிவு கண்டணைந்து - எனைச்
சற்றும் அஞ்சேல் எனத்
தாங்கிய துணையே
தளர்ந்த அத்தருணம் என்
தளர்வெலாம் தவிர்த்து - உட்
கிளர்ந்திட எனக்குக்
கிடைத்த மெய்த் துணையே
துறையிது வழியிது
துணிவிது நீ செய்யும்
முறை இது எனவே
மொழிந்த மெய்த்துணையே
சவலை நெஞ்சகத்தின்
தளர்ச்சியும் அச்சமும்
கவலையும் தவிர்த்து எனைக்
கலந்த நன் நட்பே...."

கண்ணீர் வழிய அவனைப் பார்த்துச் சிரித்தாள். பெருமிதமும் கூச்சமும் மிகுந்த உடல்ப் பிரக்ஞையில் நெளிந்தாள்.

அவன் இதயம் ஒளிநிரம்பிய பாத்திரமாக தகதகத்து வழிந்தது. அவளது மோகனப் பண்ணால் கிளர்ந்த இதயம், இனிமையை இரத்தத்தினூடு உடம்பெங்கும் பரவ விட்டது. இன்ப அதிர்ச்சியில் வாயடைத்துப் போய் இருந்தான்.

"என்னை முற்றும் உயிருண்டு என் மாய ஆக்கை இதனுள் புக்கு, என்னை முற்றும் தானேயாய் நின்ற மாய அம்மான்..." என்று பாடியபடி மீண்டும் அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

ஒரு யுகத்திற்குப் பின்னான விழிப்பில், அவன் மெல்லச் சொன்னான்: "நீ உன்னைத்தந்தாய். நான் முடிவில்லா ஆனந்தம் பெற்றேன். பதிலாக நீ பெற்றுக் கொண்டது என்னைத்தான் எனில் நம்மில் யார் அதிர்ஷ்டசாலி? சந்தேகமில்லாமல் நான்தான் சங்கரி."

"நாம் வேறு வேறு உயிர்களாய் இருந்தால் அல்லவோ, இருவரில் ஒருவர்தான் அதிஷ்டசாலியாய் இருக்க முடியும். உடல்கள் தான் வேறு, உயிர் ஒன்றுதானே? ஒரே உயிரை இரண்டு உடம்பிலே பகுத்து வைத்திருக்கிறது அவ்வளவுதான்."

"நற்றிணைத் தோழி சொல்லியிருப்பதை நீ எனக்குச் சொல்கிறாயா?"

"ஆமாம், இரண்டு நெஞ்சங்கள் அன்பினால் ஒன்றாவதைக் காதல் என்று வேறு யாரேனும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் நாம் இரண்டு உயிர்களாகப் பிறக்கவில்லை. இந்த பூமிக்கு வந்தபோதே நாம் பாதிப்பாதி உயிர்களாகத்தான் வந்து பிறந்தோம். ஒரே உயிரைத்தான் இரண்டாகப் பகுத்து, இரண்டு உடம்பினுள் வைத்து அனுப்பியிருக்கிறார்கள். ஆதலால், நாம் இருவரல்ல ஒருவர்...." என்று அவனை அணைத்து ஒருடலாக அவனோடு ஒட்டிக்கொண்டாள் சங்கரி.

**பகலெரி சுடரின்**
**மேனி சாயவும்**
**பாம்பூர் மதியின்**
**நுதலொளி கரப்பவும்**
**எனக்கு நீ உரையாய் ஆயினை**
**நினக்கு யான்**
**உயிர் பகுத்து அன்ன**
**மாண்பினேன்....**

*(நற்றிணை - 128)*

## சிந்தியா பதில்கள்

❀ காதலுக்கு முதல் எதிரி தாயா, தந்தையா?

க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07.

*கல்யாணம்.*

❖●❖

❀ ஜெயசூரியாவின் தலைமையில் இலங்கை அணி எப்படி?

க.குமாரசிறி, காரைதீவு-11.

*வெளுத்து வாங்குகிறது- 96, 97ல் அவரது துடுப்பாட்டம் இருந்ததைப் போல.*

❖●❖

❀ சிந்தியா! எந்த மாதிரியான பெண்களை ஆண்களுக்கு அதிகமாகப் பிடிக்கும்?

ரி.வேலோன், நுவரெலியா.

*'அழகான பெண்களை' என்று சொல்லலாம். ஆனால் உலகில் காதலிக்கப்படுகிற எல்லாப் பெண்களும் அழகாகவா இருக்கிறார்கள்? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியான ரசனை. ஒன்றையொன்று நிறைவு செய்து கொள்ளும் விதத்தில் தான் ஆண்-பெண் உடல்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுடன் ஒன்று இணைந்து முழுமையடைவதற்கான தாகம்தான் எதிர்ப் பால் கவர்ச்சிக்குக் காரணம்.*

*சுமாராய் அழகாகவே உள்ள ஒரு பெண்ணுக்கு ஏதாவது பரிசளிக்க விரும்புகிறீர்கள். புடவையும் வேண்டாமென்கிறாள், நகைகளும் வேண்டாமென்கிறாள். அப்போ என்னதான் உனக்கு வேண்டும் என்று கேட்டால் உதட்டைக் காட்டுகிறாள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவளை எந்த ஆணுக்குப் பிடிக்காமலிருக்கும்?*

❖●❖

❀ ராஜகிரிய குண்டுத் தாக்குதல்?

எம்.பிரதீபன், முகத்துவாரம்.

*பிரதிப் பாதுகாப்பமைச்சரைக் கொல்லும் முயற்சியில் மூன்றாவது தடவையும் சறுக்கியிருக்கிறார்கள் புலிகள். "வைத்தால் குறி தப்பாது" என்ற நம்பிக்கையும் சரிந்து வருகிறது. எடுத்த காரியம் சிதறுகிறதென்றால், பதற்றம் சேர்ந்திருக்கிறது என்றே கொள்ள வேண்டும். ஏதாவது செய்தாக வேண்டும் என்ற நெருக்கடி... அவசரமான திட்டங்கள்... இவைதான் காரணமாயிருக்கலாம். எதற்கும் எமது விருப்பங்கள், ஆவேசங்களைத் தாண்டி சுய பலத்தை எடை போட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். பலம் குறைந்து வருகிறோம் என்று உணரும் கட்டத்தில், உயர்ந்த பட்ச உரிமைகளைப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையில் இறங்கிவிட வேண்டும்.*

*தப்பினோமோ பிழைத்தோமோ.. நமது மக்களைத்தான் தெரியுமே! வெல்லுகிறவன் பின்னால் வீர முழக்கமிட்டபடி ஓடிக் கொண்டிருப்பார்கள்.*

*என்னமோ... சொல்லுறதைச் சொல்லிப்புட்டேன்... இஷ்டமுன்னா கேட்டுக்குங்க, கஷ்டமுன்னா விட்டுடுங்க...*

❀ வணக்கம் சிந்தியா. கிறிஸ்துக்கு முற்பட்ட பகிடி ஒன்று சொல்லுங்க பார்ப்பம்.

வெ.ஜெயந்தன், இரணையூர்

*குரங்கு 1 : நம்மில் யாருக்கும் மனம் ஒரு நிலையில் இருப்பதில்லையே இசகு பிசகாய் ஏதாவது தப்புச் செய்தபடி இருக்கிறோம். நாம் சாப்பிடுகின்ற காய் கனியில்தான் ஏதாவது குழப்பம் இருக்கிறதா?*

*குரங்கு 2 : பொறு, நம்மைப் பற்றி அதிகம் கவலைப்படாதே. அடுத்த ஆயிரமாம் ஆண்டில், தடை விதிக்கப்பட்ட ஒரு பழத்தைச் சாப்பிட்டுவிட்டு அதன் விளைவாய் ஒரு இனம் உருவாகப் போகிறது. அப்போது பார் கூத்துக்களை... நாம் எந்த மூலைக்கு!*

❖●❖

❀ தற்போது தென்னிந்தியப் படவுலகில் முன்னணி கதாநாயகன் யார்?

மு.அன்சார், காத்தான்குடி-05.

*அவர் வழி தனி வழி, அதில் குறுக்கிட யாராலும் முடியவில்லை.*

❖●❖

❀ இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் வட்மோர் விளம்பரங்களிலெல்லாம் தலைகாட்டி, ஹீரோவாகி வருகிறாரே?

எம்.எம்.முஸ்தபா, கல்முனை.

*இலங்கை கிரிக்கெட்டைப் பொறுத்த வரையில் அவர்தான் நம்பர் 1 ஹீரோ, சந்தேகமில்லை.*

❖●❖

❀ 'முகவரி'யில் ஜோதிகா எப்படி?

எம்.திலகராஜன், ஹற்றன்.

*குறுகுறுத்த கண்கள், குழந்தைச் சிரிப்பு, நடிப்பிலே துறுதுறுப்பு. அக்கா நக்மாவை விட இவர் அதிக காலம் தாக்குப் பிடிப்பார் என்று தெரிகிறது. குஷ்புவைப் போலவே குண்டாக வேறு இருக்கிறார். கோயில், பூஜை ரேஞ்சுக்குப் போகாவிட்டாலும், தமிழ் இரசிகர்களால் கொண்டாடப்படுவார் (தலை வீங்கிவிடாமல் பார்த்துக் கொண்டாரென்றால்.)*


❖●❖

❀ யாரிடம் நாம் தணக்குப் பார்க்கக் கூடாது?

ஜே.யூட் ஹிலேரியன், மட்டக்களப்பு.

*தாயிடம்.*

❖●❖



❀ *சிந்தியா! காதில் பூ சுற்றுதல் என்றால் என்ன?*

ஜி.ராஜு, மட்டக்களப்பு.

*எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்வதாக இருந்தால் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய ஒரு கலை. நமக்குத் தெரியாத அந்த விஷயம், கேள்வி கேட்டவருக்கும் சுத்தமாகத் தெரியாதென்பதைக் கண்டு கொண்டால், இரண்டு காதுகளிலும் பந்து பந்தாகச் சுற்றிக் கொண்டே இருக்கலாம். பார்க்கவும் அழகாக இருக்கும்.*

❖●❖

★ விரக்தியில் வருவது என்ன?

ஏ.பரிமளாதேவி, யாழ்ப்பாணம்.

*உச்சக்கட்ட விரக்தியில் சிரிப்பும் வரும். இதோ உதாரணம்:*

*முல்லா நஸ்ருதீன் திருமணம், அவர் தந்தையால் ஏற்பாடு செய்யப்பட்டது. பெரியவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம் ஆகையால் முல்லா தனது மனைவியாகப் போகும் பெண்ணின் முகத்தைத் திருமணத்துக்கு முன் பார்த்ததில்லை. திருமண நாளன்று திருமணச் சடங்குகள் அனைத்தும் முடிந்த பிறகு, அவரது மனைவி தனது முகத்திரைகளை அகற்றினாள். அவள் மிகவும் அசிங்கமாக இருந்தாள். அதைக் கண்ட அதிர்ச்சியில் முல்லா ஸ்தம்பித்து நின்றபோது அவள் கேட்டாள், "எனது அன்பே, உங்களது கட்டளைகளை இப்போது கூறுங்கள்." அதுதான் முகமதிய முறை. திருமணத்தின் பின் மனைவி கேட்கும் முதல் விஷயமே இதுதான்: "எனது அன்பே! உங்களது கட்டளைகளைக் கூறுங்கள். யார் யார் முன் நான் முகத்திரையிட்டு இருக்க வேண்டும்? யார் யாரிடம் நான் எனது முகத்தைக் காட்டலாம்?" முல்லா நஸ்ருதீன் முனகியவாறே கூறினார்:*

*"என்னைத் தவிர யாருக்கு வேண்டுமானாலும் உன் முகத்தைக் காட்டிக்கொள்!"*

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 40

ஆண்டவருடைய திருக்குமாரரான இயேசுபிரான் மானிடராக அவதரித்து, வாழும் வகை தெரியாமல் தத்தளித்துத் தடுமாறிய மக்களை வழி நடத்த முற்பட்டார். ஆண்டவரின் இராச்சியம் பூமியிலும் நிலை பெற வேண்டுமென்பதற்காக பெறுமதி மிக்க அருளுரைகளை அவர் வழங்கினார்.

இயேசு பெருமானுடைய போதனைகள், அவர் சார்ந்த யூத மக்களை நல்வழிப்படுத்த முடியாது போயிற்று. பெரும்பாலான யூத இன மக்கள் வழிதவறி வாழத் தலைப்பட்டனர். அது மட்டுமல்லாமல் அவர்களை நந்நெறிப்படுத்த, பெரு முயற்சி எடுத்த அவரையே

# கிறிஸ்தவ உலகம்

'ஆண்டவருக்கு விரோதி' என்ற குற்றச்சாட்டுடன் கொலைக்களத்துக்கு இட்டுச் சென்றனர்.

யூத மக்கள் சிலரின் தூண்டுதலால் ரோமப் பேரரசின் பிரதிநிதியான ஏரோது மன்னன் இயேசுபிரானைச் சிலுவையில் அறைந்து கொன்று விடுமாறு கட்டளை பிறப்பித்தான். கொலை செய்யப்பட்டதாக நம்பப்பட்ட இயேசுபிரான், மீண்டும் உயிருடன் எழுந்து அவருடைய விசுவாசமிக்க சீடர்கள் மத்தியில் நடமாடினார். மக்களின் நல்வாழ்வுக்காக தான் போதித்த அறிவுரைகளை மக்கள் மத்தியில் பரப்பி, அவர்களுக்கு விமோசனம் அளிக்குமாறு அவருடைய சீடர்களுக்கு பணிப்புரை வழங்கினார்.



### அரசமதம்

இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் தொடக்கத்தில் ரோமப் பேரரசனால் தண்டிக்கப்படக்கூடும் என்று பயந்து தலை மறைவாக இருந்து கொண்டே இயேசுபிரான் தமக்கிட்ட கட்டளையை நிறைவேற்றி வந்தனர்.

தொடக்கத்தில் ரோமர்களால் கிறிஸ்தவர்கள் தண்டிக்கப்பட்டனர். ஆனால் நாளடைவில் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் ரோம மக்கள் மத்தியில் காட்டுத்தீ போல் கனவேகமாகப் பரவியது. இதனால் 392ம் ஆண்டளவில் ரோமப் பேரரசின் அரச சமயமாகவே கிறிஸ்தவ மதம் பிரகடனப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து வந்த 500 ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் எங்கணும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கான பீடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

மிகவிரைவில் ஐரோப்பிய நாடுகள் எங்கணும் கிறிஸ்தவ மதம் பரவலாயிற்று. கிறிஸ்தவ மதத்தின் தலைமைப் பீடாதிபதியாக பாப்பாண்டவர் நியமிக்கப்பட்டார்.

இடைக்காலத்தில் ரோம இராச்சியம் கிழக்கு-மேற்கு என்று இரு கூறுகளாக அரசியல் ரீதியில் பிளவு பட்டாலும்- நாளடைவில் கிறிஸ்தவ மதமே இவ்விருபகுதிகளையும் ஒன்றிணைக்கும் சாதனமாக இருந்தது.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த மதபோதகரான மார்டின் லூதர் 1517ம் ஆண்டில், அதுவரை காலமும் இருந்து வந்த ரோமன் கிறிஸ்தவ சமய நடைமுறைகளை மாற்றியமைக்க முற்பட்டார்.

ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் இருந்து புரட்டஸ்தாந்து மதம் தனியாகப் பிரிந்து வளர்ந்தது. பரிசுத்த வேதாகம முறைகளின் அடிப்படையிலேயே கிறிஸ்தவ மத அனுஷ்டானங்கள் நடைபெற வேண்டுமேயன்றி, பாரம்பரிய முறைப்படி இடையில் புகுத்தப்பட்ட நெறிமுறைகளைத் தவிர்த்து விட வேண்டும் என்று மார்டின் லூதர் பிரகடனப்படுத்தினார்.

மார்டின் லூதரின் இயக்கம் வட ஜெர்மனியிலும் ஸ்கண்டநேவிய நாடுகளிலும் 1520ம் ஆண்டுகளில் வேகமாகப் பரவிற்று.

அதனைத் தொடர்ந்து இங்கிலாந்திலும் ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு மேலும் சோதனைகள் ஏற்படத் தொடங்கியது.

### இங்கிலாந்துத் திருச்சபை

8வது ஹென்றி மன்னன், ரோமன் கத்தோலிக்க ஆதிக்கத்தை பிரிட்டன் தவிர்த்து விட வேண்டும் என்று பாராளுமன்றத்துக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தார்.

இதனடிப்படையில் 1934ம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பாப்பாண்டவருடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு இங்கிலாந்து திருச்சபை உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பில்கூட 1600ம் ஆண்டுகளில் மற்றுமொரு பிளவு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலும் பல கிளை அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

### கிறிஸ்தவச் செல்வாக்கு

கி.பி 30ம் ஆண்டில் தான் இயேசு நாதர் ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்தார் என்று வரலாறுகள் கூறுகின்றன. அவருடைய ஆவி பிரிந்தாலும் அவர் மூன்று நாட்களின் பின்னர் உயிர்த்தெழுந்தார். மேலும் பல நாட்கள் அவருடைய பன்னிரண்டு சீடர்களுடனும் பல இடங்களுக்கும் சென்றிருந்தார். இதனைத் தொடர்ந்து அவருடைய சீடர்களால் பரப்பப்பட்ட கிறிஸ்தவ மத நம்பிக்கை ஒன்றரை பில்லியன் மக்களை இன்று ஆட்கொண்டிருக்கிறது. இன்றைய உலக மக்கள் தொகையின் கால்பங்கு இதுவாகும்.

இன்று மேற்கத்தைய நாகரிகம், இலக்கியம் வேதாந்தம் மற்றும் சமுதாய வளர்ச்சித் துறைகளில் பெரும்பாலும் கிறிஸ்தவ மத நம்பிக்கையே ஊடுருவி இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

### நிறைவுரை

திரு விவிலியம் எனப்படும் திரு மறையின் முதற்கூறான பழைய ஆகமத்தையும் இரண்டாவது கூறான புதிய ஆகமத்தையும் மொத்தம் 101 அங்கங்களாக வகுத்து எமது வாசகர்களுக்கு வழங்கும் பணியினை இறைவன் அருளால் இத்துடன் நிறைவேற்றியுள்ளோம். இதில் எமது சக்திக்கும் அப்பாற்பட்ட நிலையில் ஏதாவது தவறுகள் இடம் பெற்றிருக்கலாம்.

பிறப்பால் சைவனாகவிருந்தும் இறைவன் மீது கொண்ட பற்றுதலே இத் திருப்பணியை மேற்கொள்ள என்னைத் தூண்டி விட்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கல்வி அறிவிலும் ஆற்றலிலும் எண்ணற்ற அறிஞர்கள் இருந்தும் இத் திருப்பணியில் ஈடுபட இறைவன் எனக்கு ஆர்வத்தை ஊட்டியமைக்கான காரணம் அவனுக்கே தெரிந்ததொன்று. அவனருளால் அவன் தாள் வணங்கி இத் தெய்வத்திருப்பணியை நான் ஏற்று நிறைவேற்றியிருக்கிறேன். வேதாகமத்தின் நடைமுறையிலிருந்து வேண்டுமென்றே நான் எந்த அம்சத்தையும் மாற்றத் துணியவில்லை; தவிர எனது சொந்தக் கருத்தை எங்கேயாவது நுழைக்கவும் துணியவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தற்செயலாக சில பிழைகள் ஏற்பட்டிருக்கலாம். அவை வேண்டுமென்றே புகுத்தப்பட்டவையல்ல என்பதையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். தற்செயலாக ஏதாவது தவறுகள் விடப்பட்டிருந்தால், தயை கூர்ந்து மன்னிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### நூலுருவில்....

கணனி முறையில் தமிழ் எழுத்துக்களை எதுவித உருமாற்றமுமின்றிப் புகுத்தலாம் என்று முதன் முதலில் நிரூபித்தவர் 'ஈழத்துப் பூராடனார்' என்ற புனைபெயர் பூண்டு 150 நூல்களுக்கும் மேல் எழுதி வெளியிட்டவரான இலக்கிய மணி செல்வராசகோபால் அவர்கள், 'திருமறை தரும் பொதுநெறி' அச்சுப் பிரதிகளை தம்முடன், தான் வாழும் கனடாவுக்குக் கொண்டு சென்றுள்ளார். இவற்றை மின் கணனி முறையில் அச்சுப் படிவமெடுத்து, உரிய படங்களுடன், அச்சு இயந்திரத்தில் ஏற்றும் நிலைவரை, அனுப்பிவைப்பதாக வாக்களித்துள்ளார். அவர் ஒரு பரிபூரணமான கிறிஸ்தவர். தேவாலயப் பணிகளில் ஈடுபாடு கொண்டவர். 'இயேசு புராணம்', 'பெத்லஹேம் கலம்பகம்' ஆகிய நூல்களை 1987ம் ஆண்டிலேயே மின் கணனி முறையில் அச்சுவாகனம் ஏற்றியவர். இத்தொடரில் காணப்படும் தவறுகளையும் பிழைகளையும் திருத்தி அமைக்கவும் அவர் முன் வந்திருக்கிறார். ஆகவே வாசகர்களாகிய உங்கள் ஆதரவைப் பெற்ற இவ்வெழுத்துக்கள் நூலுருவில் விரைவில் உங்கள் கரங்களில் தவழும் என்று நம்புகிறேன்.

## இராஜகுமாரன்



ஈழத்துப் பூராடனார்

கடந்த இரண்டு வருடங்களாக உங்களுடன் பகிர்ந்து கொண்ட 'திருமறை தரும் பொது நெறி'யை நிறைவு செய்கிறேன். நீங்கள் அளித்த ஆதரவுக்கு நன்றி கூறுவதுடன் இறைவனின் நல்லாசி அனைவருக்கும் கிட்டவேண்டும் என்று இறைஞ்சுகிறேன்.

முற்றும்


**திருமறை [பு.ஆ] 38 விடை:** திதிம் என்றழைக்கப்படும் தோமா.


**பரிசு பெறுவோர்:**

1. **எஸ்.இராஜேந்திரன்,** லெமஸ்தோட்ட, நிக்கபோத, அப்புத்தளை.
2. **செல்வி எஸ்.கல்யாணி,** 33, பிரதான வீதி, பொகவந்தலாவ.
3. **எஸ். திலகேஸ்வரன்,** அம்பாகோட்டை, கெங்கல்ல, கண்டி.
4. **ஜோ.அருள்சாமி,** 142 மாத்தளை வீதி, கட்டுகஸ்தோட்டை.
5. **எம்.கிருஷ்ண ராஜா,** 77, கிறீன்ஸ் வீதி, நீர்கொழும்பு.

**வியப்பூட்டும் புதிய தொடர் விரைவில்**





"எங்கே உன் பையனைக் காணோம்?"
"பல்லிக்கூடம் போய் விட்டான்."

இரத்தினங்கள்

தரந்தெரிவுசெய்யப்பட்ட இரத்தினங்கள் உறுதிப்பத்திரத்துடன்

Accreditited by National Gem & Jewellery Authority

அருள் ஜுவலர்ஸ் ARUL JEWELLERS

Sea Street, Colombo 11. Tel: 438533

Branch: 103, Galle Road, Colombo 6. Tel: 580130




# நீளம்

← பாவித்த முத்திரை சேகரிப்பவர்கள், அதிக அளவில் சிகரட் பக்கெட்டுகளைச் சேகரிப்பவர்கள் போன்ற பலவகைப்பட்ட பொருட்களை அதிக அளவில் சேகரித்து வைத்திருப்பவர்கள் என்ற வரிசையில் இப்பக்கங்களில் முரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இதோ சூயிங்கம் என்ற இனிப்புப் பண்டங்களை சுற்றியிருக்கும் தாள்களை 1965ம் ஆண்டு முதல் சேகரித்து அவற்றை ஒன்றுடன் ஒன்றைத் தொடுத்து சங்கிலி போல் ஆக்கி வைத்திருக்கிறார் கனடாவைச் சேர்ந்த கேரி டஸ்சி என்ற இந்த நபர் கடந்த வருடம் மார்ச் மாதம் வரை டஸ்சி தயாரித்துள்ள சூயிங்கம் சங்கிலியின் நீளம் என்ன தெரியுமா? 3.98 கிலோமீட்டர் (5 மைல் 1456 யார்).

இவருடைய விடாமுயற்சியைப் பற்றி கனடாவின் தாளேடுகள், பருவகால சஞ்சிகைகள் என்பன வெளியிட்ட தகவல்களை அடிப்படையாக வைத்து கேரி டஸ்சி சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

325657


# குறி



← பாகிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரரும் முன்னாள் கப்டனுமான வாசிம் அக்ரம் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்திருக்கும் கபில்தேவின் சாதனையை முறியடிக்க குறிவைத்துள்ளார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் 400க்கும் மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை புரிந்திருக்கும் வாசிம் அக்ரம் டெஸ்டில் இதுவரை 373 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். கபில்தேவின் சாதனையை முறியடிக்க இவர் இன்னமும் 51 விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டும்.

ஒருநாள் போட்டிகளில் யாரும் நெருங்க முடியா தவகையில் 400 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தியிருக்கும் வாசிம் அக்ரம் டெஸ்டில் 400 விக்கெட்டுக்களை வீழ்த்தினால் அதுகூட சாதனைதான். அதாவது டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் 400 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஒரே வீரர் என்ற சாதனை. ■

# வெற்றி வீரன்



↑ திடகளப் போட்டிகளில் ஓட்டம், உயரம் பாய்தல், நீளம்பாய்தல் போன்ற 5 வகை ஆட்டங்களைக் கொண்ட தொகுதிப் போட்டிகள் இப்பொழுது நவீனத்துவம் பெற்று வருகின்றன. அண்மையில் இடம் பெற்ற சர்வதேசப்போட்டிகளில் கனடா 9 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

இவைதவிர 7 வெள்ளி மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களையும் கனடா வீரர்கள் வென்றுள்ளனர். கனடாவைச் சேர்ந்த அலெக்சாண்டா பாரிஜின் (படத்தில் காணப்படுபவர்) இன்றைய ஒலிம்பிக் சம்பியனாவார். ■

# இளங்குயில்



↘ குழந்தைப் பருவம் கடந்துவிட்ட சிறுமி இவள். சார்லொற் சேர்ச் என்பது இவளுடைய பெயர். இரு வருடங்களுக்கு முன்னர் 12 வயதாக இருக்கும்போதே இசை உலகில் பெரும் சாதனைகளைப் பெற்றுவிட்டாள்.

1998ம் ஆண்டு 'ஒரு தேவதையின் குரல்' என்ற பெயரில் ஓர் அல்பம் (பாடல்பதிவு தொகுதி) வெளியிட்டாள். சில தினங்களில் மொத்தம் 3 கோடி அல்பங்கள் விற்பனையாகிவிட்டன.

இதற்காக சார்லொற் சேர்ச்சுக்கு இரட்டைப் பிளாட்டினம் உலோக-பாடல் பதிவுத் தட்டுகள் பரிசாகக் கிடைத்தது.

அவுஸ்திரேலியாவிலும் நியூஸிலாந்திலும் சார்லொற்றுக்கு தங்க இசைத் தட்டுகள் பரிசளிக்கப்பட்டன. இங்கிலாந்திலுள்ள சோனி இசை நிறுவனம் சார்லொற்றை ஒப்பந்தம் செய்து, பல முக்கியமான நகரங்களில் இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து கொடுக்கிறது.

இலண்டன் மாநகரிலுள்ள பல்லாடியம் மண்டபத்திலும் ரோயல் அல்பேட் மண்டபத்திலும் சார்லொற்றின் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றபோது பல்லாயிரக்கணக்கான இரசிகர்களின் பாராட்டை இச் சிறுமி பெற்றாள். ■

## 1வது 5வது பிறந்த நாள் வாழ்த்து



F.ஷப்னா (18.01.2000) M.ஷம்ஷாத் (07.12.1999)

பலப்பிட்டியைச் சேர்ந்த கலைஹல்-ஹில்மியா தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஷம்ஷாத் 07.12.1999 தனது 1வது பிறந்தநாளையும் செல்வப் புதல்வி ஷப்னா 18.01.2000 அன்று தனது 5வது பிறந்த நாளையும் விமரிசையாகக் கொண்டாடினார்கள். இவர்களிருவரையும் அன்பு உம்மா, சவுதியில் இருக்கும் வாப்பா, உம்மும்மா, பாட்டி, பர்னாஸா ஆன்டி, றஸ்மியா ஆன்டி, ஆறூராம் அங்கிள், அப்பாஸ் அங்கிள், ஷெரீப் மாமா-நவ்வி சாச்சா குடும்பத்தினர்கள், பலப்பிட்டியிலுள்ள அப்பா-வாப்புமா குடும்பத்தினர்கள், பாணந்துறையைச் சேர்ந்த அப்பா குடும்பத்தினர்கள் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று அல்லாஹ்வின் அருளால் இன்பமுற வாழ இனிதே வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-ஆறூராம் அங்கிள்